காலம் கோடி சென்ற போதும், பூமியில் காதல் மட்டும் வாழும் என்ற உண்மை இருவருக்கும் புரிந்தது. முத்தத்தை விடச் சிறந்த காதல் பரிசை, இன்னும் காதல் தேசம் கண்டுபிடிக்கவில்லை என்பது தெரிந்தது.

மௌனம் கலைந்த அந்த தேவதையின் மடியில் மகிழ்ச்சியுடன் சாய்ந்த கெள்தமுக்கு மேகத்தையே மஞ்சமாக்கி, மயிலிறகில் தலைசாய்த்தது போல் ஒரு உணர்வு.

அந்த முன்பனி இரவில், மலைகளின் தோள்களில் சாய்ந்து மேகங்களும் ஓய்வெடுக்க.. வானவீதியில், கார்த்திகை தீபங்களாய் விண்மீன்கள் ஒளிவீசிக் கொண்டிருந்தன.

# மழை தருமோ என் மேகம்...!

## 1



அந்தி வானம் அற்புதமான அழகை அள்ளித் தெளித்திருக்க, திருச்சி மலைக் கோட்டையின் மீது அஸ்தமன சூரியன், தன் சிவந்த கதிர்களால் செவ்வண்ணத்தைப் பூசியிருந்தான்.

பருத்தி வெடித்தாற்போல், செவ்வானம் முழுவதும் பஞ்சுப் பொதிகளாய் மேகங்கள்!

ப்ரியம்வதாவும், அவள் தோழி சங்கரியும், மலைக் கோட்டைப் படிகளில் மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தனர்.

பிள்ளையாரையும், தாயுமானவர் சுவாமிகளையும் தரிசித்த நிம்மதி தெரிந்தது இருவர் முகத்திலும்...!

இருவரும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். பிகாம் முடித்து விட்டு விடுமுறையில் இருந்த இருவரும் கோவி

லுக்கும், லைப்ரரிக்கும், குக்கரி வகுப்பிற்கும் தியான வகுப்பிற்கும் சென்று பொழுதைப் போக்கி வந்தனர்.

சங்கரி, ப்ரியம்வதாவிடம், ''ஏன்டி ரியா? அப்பா ஏதோ ஒரு வரன் பாத்திருக்கிறதா சொன்னியே... மாப்பிள்ளை எந்த ஊர்?'' ஆவலாகக் கேட்டாள்.

''தென்காசின்னு சொன்னாங்க... குற்றாலத்துக்குப் பக்கத்துல இருக்காம்... நல்ல வசதியான குடும்பமாம்! மாப்பிள்ளை 'பி.டெக்' முடிச்சிட்டு, அவங்க ஃபேக்டரியப் பாத்துக்கறாராம்..''

''ஏன்டி... சுவாரசியமே இல்லாமப் பேசறே? உனக்குப் பிடிக்கலையா?''

''அதில்லை சங்கரி! பிடிக்குது, பிடிக்கலைன்றதை விட இப்ப கல்யாணத்துக்கு அவசரமில்லைன்னு நான் நினைக்கிறேன்.. ஆனா, அப்பாதான் ரொம்பப் பிடிவாதமா இருக்காங்க... அதான் கஷ்டமா இருக்கு! என்ன பண்ற துன்னு புரியலை!'' என்று கூறிவிட்டு சோகமாகச் சிரித்தாள்.

ப்ரியம்வதா நல்ல அழகு!

தந்தநிறமும், எடுப்பான நாசியும், துறுதுறுக்கும் விழி களும், அடர்ந்த கூந்தல் அலை பாய, செதுக்கினாற் போன்ற முகமும் கொண்டு ரவிவர்மாவின் ஓவியம் போலிருப்பாள்.

''எப்படி ரியா... உன்னை மட்டும் கடவுள் இவ்வளவு அழகாப் படைச்சான் எனக்கே பொறாமையா இருக்கு'' என்று சங்கரி எப்போதுமே கூறுவாள்.

இன்று, ''உன்னைப் பெண் பாத்துட்டுப் போற யாருமே உன்னை வேணாம்னு சொல்லமாட்டாங்க... ஜாக்கிரதைடி



ரியா... மாட்டிக்கப்போறே! என்னோட அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!'' குறும்புடன் வாழ்த்தினாள்.

''போடி.. அப்படியெல்லாம் நடக்காது.. இன்னிக்கே அப்பாகிட்ட இதுபத்திப் பேசறேன்'' என்றபடி வேகமாக இறங்க ஆரம்பித்தாள்.

ப்ரியம்வதாவின் தந்தை ராமனாதன் ஒரு வங்கியில் மேனேஜராகப் பணிபுரிகிறார். தாய் சகுந்தலா, இல்லப் பராமரிப்பை கவனித்துக் கொள்ள, அவர்களுக்கு இரு பெண்கள்!

ரியா, டிகிரி முடித்திருக்க, ஸ்வேதா பி.எஸ்சி முதல் வருடம் படிக்கிறாள்.

இப்போது, ரியாவின் திருமணத்தை முடித்தால்தான், மூன்று வருடம் கழித்து ஸ்வேதாவின் கல்யாணம் முடிக்க சரியாக இருக்குமென்று ராமனாதன் நினைத்தார்.

அன்று வீட்டிற்குச் செல்லும் போதே, அதே யோசனை யுடனிருந்த ரியா, இன்று கட்டாயம் அப்பாவிடம் பேசிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

வீட்டிற்குள் நுழையும் போதே, ''என்ன... ப்ரெண்ட்ஸ் ரெண்டு பேரும் பிள்ளையாரைக் காக்கா பிடிச்சிட்டு வந் துட்டீங்களா? கடைசி செமஸ்டர்லே கோட்டை விட்டுடு வோம்னு பயமா?'' குறும்புடன் கேட்டபடி வந்தாள் ஸ்வேதா.

''ஆமாம் வாலு..'' என்ற ரியா அவள் தலையை செல்ல மாகக் கலைத்து விட்டாள்.

பிறகு இருவருக்கும் டிபன் எடுத்து வந்த சகுந்தலாவிடம், ''என்ன ஆன்ட்டி... ரியாவுக்கு மாப்பிள்ளை பாத்திருக்கீங் களாமே.. எப்ப எங்களுக்கெல்லாம் கல்யாண சாப்பாடு

போடப் போறீங்க...'' ரியாவைப் பார்த்து சீண்டலாகக் கண்சிமிட்டியபடி கேட்டாள் சங்கரி.

''ஆமாம் சங்கரி! நம்ம ரியாவை, போன மாசம் எங்க சொந்தக்காரங்க கல்யாணத்துல, மாப்பிள்ளையோட அம்மா பாத்திருக்காங்க! இப்ப தரகர் மூலமா அவங்க பையனோட ஜாதகத்தை அனுப்பியிருக்காங்க... நாம பாத்துட்டுப் பொருந்தியிருந்தா, பாக்க வர சொல்ல வேண்டியதுதான்! ரொம்ப நல்ல குடும்பமாய்.. ஒரு பையன், ஒரு பொண்ணு தான்!'' கூறிவிட்டு ரியாவையே யோசனையுடன் நோக்கினார்.

அதே நேரம் உள்ளே வந்த ராமனாதனும் சங்கரியை கவனித்து விட்டு, ''வாம்மா... என்ன.. உனக்கு விஷயம் தெரியுமா? உன் ஃப்ரெண்ட் என்ன சொல்றா?'' என்று கேட்டுக் கொண்டே வந்து, ரியாவின் கன்னத்தில் செல்ல மாகத் தட்டிவிட்டு உள்ளே சென்றார்.

பிறகு டிபன் சாப்பிட்டு விட்டு சங்கரி கிளம்பியதும், உள்ளே வந்த ரியாவை அழைத்தார் ராமனாதன்.

''ரியா... நேத்து நான் பேசின விஷயத்தைப் பத்தி நீ என்னடா முடிவு பண்ணியிருக்கே?'' ஆர்வத்துடன் கேட்டார்.

''ம்... நான் மேல படிக்கிறனேப்பா... எம்.காம் முடிச்சிட்டு அப்புறம் கல்யாணம் பண்ணிக்கிறேனே.. இவ்வளவு சீக்கிரம் உங்களை எல்லாம் பிரிஞ்சு போக என் மனசு இன்னும் ரெடியாகலைப்பா!''

அவளையே கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்த ராமனாதன், ''அப்படி இல்லைடா... எப்படி இருந்தாலும் இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சி பிரிஞ்சுதானே ஆகணும்! எங்களுக்கும் கஷ்டம்தான்.. ரெண்டு பொண்ணுங்களையும் பிரிஞ்சிருக்கணும்னு நினைக்கவே பயமாதான் இருக்கு.. ஆனா, ப்ராக்டிகலா யோசிச்சிப் பாத்தா, எல்லாத்தையும் எதிர்பார்த்து தானே வாழ்க்கையில இருந்தாகணும்..'' வாஞ்சையுடன் கூறினார்.



''புரியுதுப்பா.. ஆனா, நான் மேல படிக்கலாம்னு நினைச்சேன்.'' யோசனையுடன் கூறினாள்.

''சரிம்மா.. உனக்குப் படிக்கணும்... அவ்வளவுதானே? கல்யாணம் பண்ணினப்புறமும் படிக்கலாமே? நான் அவங்க வீட்டில இதப்பத்திப் பேசறேன். இன்னிக்குத்தான் ரெண்டு ஜாதகத்துக்கும் பொருத்தம் பாத்துட்டு வந்தேன்... நல்லாப் பொருந்தியிருக்கு.. நீ சரின்னா, நாம சொல்லி அனுப்பினவுடனே அவங்க பொண்ணு பாக்க வருவாங்க.''

''அப்பா... ப்ளீஸ்...'' என்றவளைக் கையமர்த்தியவர், ''அப்பா எதுக்கு சொல்றேன்னு புரிஞ்சிக்கடா.. இப்ப உனக்கு கல்யாணம் முடிச்சாதான், மூணு வருஷம் கழிச்சு ஸ்வேதாவுக்கு செய்யலாம்! எனக்கும் ஒரு இடைவெளி வேணும்டா.. ஒரே சமயத்துல ரெண்டு கல்யாணத்தையும் என்னால நடத்த முடியாது.. யோசிச்சுப் பாரு!...

''என்னோட ஆசையும் நடக்கும்... உன் விருப்பமும் நிறைவேறும்.. நீதாண்டா சொல்லணும்! எவ்வளவு டைம் வேணாலும் எடுத்துக்க... ஆனா எனக்கு ஒரு நல்ல பதிலா சொல்லுவேன்னு எதிர்பார்க்கிறேன்...''

அவளுடைய தலையைப் பாசத்துடன் வருடிவிட்டுச் சென்றார் அவர்.

எப்போதுமே அவருக்கு பெரியமகள்தான் மிகவும் செல்லம்... ஸ்வேதா சகுந்தலாவின் பெட்!

அன்றிரவு, படுத்தபடியே யோசித்திருந்த ரியாவிற்கு, என்ன முடிவெடுப்பதென்றே புரியவில்லை.

மனம் குழப்பத்தின் பிடியில் சிக்கி, முள்ளில் மாட்டிய சிறு சிறகாய் அலைபாய்ந்தது.

காலையில் எழுந்து குழப்பமான மனநிலையுடனே பல் துலக்கிக் குளித்துவிட்டு சமையலறைக்கு சென்றாள் ரியா.

ராமனாதனும், ஸ்வேதாவும் உறங்கிக் கொண்டிருக்க, தாயிடம் பேச இதுதான் சரியான நேரமென்று தோன்றியது.

விடிகாலை நிசப்தத்தை கலைக்கும் சப்த உச்சாடனங்களாய், தெருவில் காய்கறிக் காரரின் கூவலும், கோவிலின் மணியோசையும் அந்தப் பிராந்தியத்தை நிறைத்திருக்க, மெதுவாகச் சென்று பின்புறமிருந்து அவரை அணைத்து தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''ஏய்.. என்ன கொஞ்சல் திடீர்னு..? யாரையாவது விரும்பறேன்னு ஏதாவது குண்டைத் தூக்கிப் போடப் போறியா தெரியலையே...?''

கிண்டலுடன் கேட்டுவிட்டுத் திரும்பி, அவள் மூக்கை செல்லமாகத் திருகினார் சகுந்தலா.

''என்னம்மா நீங்க.. காலையில உங்ககிட்ட ஆசையா பேசலாம் அப்படின்னு வந்தா இப்படிப் பேசறீங்க.. போங்க..!'' செல்லக் கோபத்துடன் சிணுங்கியபடி திரும்பியவளைத் தடுத்தார் அவர்.

''ரியா.. சும்மா கிண்டல் பண்ணினேன்டா.. என்ன விஷயம் சொல்லு! நான் படிக்கணும்... அப்பாகிட்ட சிபாரிசு பண்ணுங்கன்னா.. சாரி என்னால முடியாது! அப்பா ஒரு முடிவோட இருக்கார்.. அவரை எதிர்த்து என்னால இந்த விஷயத்துல பேசவே முடியாது.. ஆனா நீ சொன்னா ஒரு வேளை கேப்பாரோ என்னவோ..!'' யோசனையுடன் கூறினார்.



''இல்லம்மா.. எனக்கு ரொம்பக் குழப்பமா இருந்தது... அதான், உங்ககிட்டப் பேசி யோசனை கேக்கலாம்னு வந்தேன்.. ம்.. அப்பா சொல்றதும் யோசிக்க வேண்டிய விஷயம்தான்! ஸ்வேதாவையும் பாக்கணும் இல்லியா?'' நானே அப்பாகிட்டப் பேசறேன்..''

அவளுடைய கையைப் பிடித்து நிறுத்தியவர் ''அப்பாவைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு தேங்க்ஸ் ரியா! உனக்கு கல்யாணம் முடிக்கணும்கற கடமையை விட, உன்னைப் பிரியணுமேங்கிற கவலைதான் இப்ப அதிகமா அவரை வாட்ட ஆரம்பிச்சிருக்கு... அது எனக்குத் தான் தெரியும்.. நீ அவரோட 'பெட்' இல்லியா? என்ன செய்யறது.. எல்லாப் பெண்களுமே கல்யாணம் முடிஞ்சி மாமியார் வீட்டுக்குப் போய்த் தானே ஆகணும்..?'' சிறு வேதனை தொனித்தது அவர் குரலில்!

''அம்மா! அப்படியேன்னாலும் நான் எங்கே போயிடப் போறேன்? என்னைப் பாக்கணும்னு தோணிச்சுன்னா, உடனே போன் பண்ணினா ஓடி வந்திடப் போறேன்.. எனக்கு அப்பாவையும், உங்களையும், ஸ்வேதாவையும் விட யாருமே முக்கியமில்லை! அப்பா நிம்மதியா இருக்கணும்.. அதுதான் முக்கியம்!''

பெரிய மனுஷியைப் போல் பேசி விட்டு செல்லும் தன் மகளைப் பார்த்தால் சகுந்தலாவிற்குப் பெருமையாய்..!

ப்ரியம்வதா, மிகவும் பொறுமையானவள்.. பிறரை அனுசரித்துப் புரிந்து நடந்து கொள்பவள்!

அவளுக்கு ஒரு நல்ல இடமாக அமைந்து விட்டால், பிறகு ஸ்வேதா திருமணம் வரை நிம்மதியா இருக்கலா மென்று தோன்றியது.

தோட்டத்திற்குச் சென்ற ரியா, தான் வளர்க்கின்ற பூச்செடிகளுக்கு நீர் வார்த்தபடி யோசிக்க ஆரம்பித்தாள்.

பூத்துக் குலுங்கிய மலர்களைக் கண்டபோது, 'இயற்கை யின் படைப்பில் தன்னை வியக்க வைக்கும் வண்ணக் கவிதைகளோ இந்த மலர்கள்' என்று தோன்ற தன்னை மறந்து ரசித்தபடி நின்றிருந்தாள்.

திடீரென்று ராமனாதனின் குரல் அவளைக் கலைத்தது.

''என்ன ரியா.. உன் செடியெல்லாம் என்ன சொல்லுது..?'' கேட்டபடி வந்து அவளுடன் சேர்ந்து கொண்டார்.

மெதுவாகத் திரும்பியவள், ''அப்பா! நான் யோசிச்சிப் பாத்தேன்.. உங்க மனசு எனக்குப் புரியுது! ஸ்வேதாவும் முக் கியம்.. உங்களுக்கு இந்த 'டைம் கேப்' நிச்சயமா தேவைன்னு என்னால புரிஞ்சுக்க முடிஞ்சுது.. உங்க இஷ்டம்ப்பா..'' கூறிவிட்டு மெலிதாக முறுவலித்தாள்.

சட்டென்று அவர் முகம் மலர்ந்தது.

''நீ வேற யாரையும் விரும்பலையே... அப்படியே இருந்தாலும் அப்பாகிட்ட பயப்படாம சொல்லுடா.. நான் பேசி முடிச்சி வைக்கிறேன்.''

அவள் தலையை வருடியபடி அவர் கேட்க, அந்தப் பாசமும் புரிதலும் அவளை மிகவும் நெகிழ வைத்தன.

''அப்படியெல்லாம் எதுவும் இல்லப்பா.. நீங்க பாத்து முடிவு பண்றவரைத்தான் நான் விரும்புவேன்...''



''சரிம்மா.. நாளைக்கே நான் தரகரைப் பாத்து மாப்பிள்ளை வீட்டுல வரச் சொல்ல சொல்றேன்... அவங்க முதல்லே வரட்டும்! மாப்பிள்ளைய உனக்கு பிடிச்சிருந்தாதான் மத்த விஷயமெல்லாம் பேசலாம்னு இருக்கோம்'' கூறி விட்டு சந்தோஷம் சுமந்த முகத்துடன் உள்ளே சென்றார்.

இயற்கைக்கு மனதை சாந்தப் படுத்துகின்ற குணம் உண்டு என்பதில் ரியாவிற்கு எப்போதுமே நம்பிக்கை உண்டு.

மனம் சலனப் படுகின்ற நேரத்தில், மனதிற்குப் பிடித்த இனிமையான இசையைக் கேட்கவோ, அல்லது அவள் வளர்க் கின்ற செடிகளைப் பார்வையிடவோ சென்று விடுவாள்.

தென்றல் காதலனின் தீண்டலில் நாணிச் சிரித்துக் கொண்டிருந்த மலர்கள், மௌனமாய் தங்கள் இதழ் விரிக்க ஆரம்பித்திருக்க, அந்த ரம்யமும், பசுமையும், என்றும் போல் இன்றும் அவளுக்குள் அமைதியை மீட்டுத் தந்தன.

மறுநாள் மாலையே வீட்டிற்கு வந்த தரகர், அந்த வாரக் கடைசியிலேயே அவர்கள் பெண் பார்க்க வருவதாகக் கூறினார்.

## 2



**அ**ந்த மாலை நேரம், வெளிச்சத்திற்கு பிரியா விடை கொடுக்க, மெல்லிய குளிர்ச்சியை தனக்குள் சுமந்து வீச ஆரம்பித்திருந்தது தென்றல் காற்று!

ராமனாதனுடைய வீட்டு வாசலை, அழகிய பூக்கோலம், கற்பனைக் கெட்டாத வண்ணப் பூங்காவாய் அலங்கரிக்க ஆரம்பித்திருந்தது.

இன்று ப்ரியம்வதாவைப் பெண்பார்க்க வருகிறார்கள்.

ராமனாதன், வங்கியில் விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து வெளி வேலைகளை கவனிக்க, சகுந்தலா டிபன் தயார் செய்து கொண்டிருந்தார்.

ரியாவை, ஸ்வேதாவும், சங்கரியும், அலங்கரித்துக் கொண்டிருந்தனர். உடலுடன் ஒட்டித் தழுவிய அழகிய கிரேப் சில்க் புடவையும், எளிமையான நகைகளுமே அவளை அஜந்தா ஓவியம் போலக் காட்டின.

வாசலில் கார் வந்து நிற்கின்ற ஓசை கேட்டு, ராமனாதனும், சகுந்தலாவும் அவர்களை வரவேற்கச் செல்ல ஸ்வேதாவும் சங்கரியும், ரியாவைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தனர்.

மாப்பிள்ளை வீட்டினர் உள்ளே வந்து அமர்ந்ததுமே, மாப்பிள்ளையின் தந்தையே தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

''நான் ரிஷியோட அப்பா சோமசுந்தரம்! இவ என் மனைவி சிவகாமி. இவர்தான் மாப்பிள்ளை ரிஷிவந்த்! இவ என் பொண்ணு வித்யா.. மாப்பிள்ளை சுதாகர்.. என் அக்கா மரகதம்!'' என்று முடித்தார்.

ராமனாதனும் தங்கள் குடும்பத்தினரை அறிமுகம் செய்து விட்டு பெண்ணை அழைத்து வரச் சொன்னார்.

அனைவரும், பெண்ணைப் பார்க்கப் போகும் ஆவலுடனிருக்க, எதிர்பார்ப்புடன் காத்திருக்க வேண்டிய ரிஷி மட்டும் ஏதோ யோசனையுடன் டென்ஷனாக இருந்தான்.

ஹாலில் அமர்ந்திருப்பவர்களை எட்டிப் பார்த்து விட்டு வந்த ஸ்வேதா, ''மாப்பிள்ளை சூப்பர்க்கா.. உனக்குப் பிடிக்கும் பாரேன்!'' என்று ரியாவிடம் கிசுகிசுக்க, அவள் மௌனமாக யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.



பெண் பார்க்க வருவது இதுவே முதல் முறை என்பதால், ஏதோ ஒரு புதிய உணர்வு அவளை வியாபித்திருந்தது.

அப்போது, உள்ளே வந்த சகுந்தலா, ரியாவை அழைத்துச் செல்ல, அவளைக் கண்டதும் அனைவருக்கும் ஒரு தேவதையே எதிரில் வந்ததைப் போலிருந்தது.

எங்கோ, தன் கவனத்தைப் பதித்திருந்த ரிஷி, சுதாகரின் அழைப்பால், மெல்லத் திரும்பியபோது, ஒரு நிமிடம் அவனால் இமை பிரித்து மூடமுடியவில்லை.

அவன் பிரமிப்புடன் பார்க்கும்போதே, மெல்லிய புன்னகையுடன் நிமிர்ந்த ரியா, தாமரை மொட்டாய் தன் கைகளைக் குவித்து அனைவருக்கும் வணக்கம் கூறினாள்.

சோமசுந்தரத்திற்கும், சிவகாமிக்கும், அந்த நிமிடமே அவள் மீது ஏனோ ஒரு இனம் புரியா ப்ரியம் வந்தது.

சுதாகருக்கும், வித்யாவிற்கும் முதல் பார்வையிலேயே அவளைப் பிடித்து விட, மரகதம் அத்தை கூட பார்வையாலேயே தன் மனதை வெளிப்படுத்தினார்.

ஆனால், திருமணம் செய்து கொள்ளப் போகும் ரிஷியோ, அவளுடைய அழகு தந்த பிரமிப்பையும் மீறி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

ப்ரியம்வதாவின் நிலையோ வேறு விதமாய்..!

திருமணத்தில் பெரிதும் ஆர்வமின்றி இருந்தவளை, ரிஷியிடம் ஏதோ ஒன்று சட்டென ஈர்த்தது.

நல்ல உயரமாக, கண்களில் ஒரு விதக் கூர்மை கலந்த அலட்சியத்துடன், மாநிறத்தில், உதட்டிற்கும் மேல் பெரிய

புஷ் மீசையுடன் கம்பீரமாக இருந்தவனை, மனம் தனக்குள் உடனே பதித்துக் கொண்டது.

நேர்ப்பார்வையும், அனாவசிய அலட்டலோ வழிசலோ இல்லாத அவன் பாவனைகளும், அவளுள் புதிதாக ஒரு மாற்றத்தை உண்டு பண்ண, அன்றுதான் புதிதாய் பிறந்தது போல் ஒரு விதப் புத்துணர்வு!

குழந்தையின் கைப் பட்டாம்பூச்சியாய் மனம் படபடக்க, சட்டென்று தலைகுனிந்தவளை, சோமசுந்தரம்தான் அழைத்தார்.

''வா! உக்காரும்மா ப்ரியம்வதா... அழகான பேரு! என்னம்மா படிச்சிருக்கே..'' அவர் இயல்பாகக் கேட்கவும், படபடப்பு குறைந்து ''பிகாம்'' என்றாள்.

''நீ மேல படிக்கணும்னு சொன்னதா தரகர் சொன்னார். நம்ம வீட்டுக்கு வந்தும் நீ படிக்கலாம்... எங்களுக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்லை..''

அவர் சிரித்துக் கொண்டே அவளின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற பதிலாய் கூறிவிட, சகுந்தலாவும், சங்கரியும் டிபன் எடுத்து வந்து அனைவருக்கும் தந்தனர்.

''ஏம்மா, இவ்வளவு தினுசா டிபன் செஞ்சீங்க... வெறும் காபி குடுத்தா போதாதா?''

சகுந்தலாவிடம் ஆதங்கத்துடன் கேட்ட ரிஷியின் தாய் சிவகாமி, ரியாவிடம் திரும்பி மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

''என்னம்மா.. எங்க ரிஷிய நல்லாப் பாத்தியா? உனக்குப் பிடிச்சிருக்கா? போனமாசம் எங்க சொந்தக் காரங்க கல்யாணத்துல உன்னைப் பாத்தப்பவே உன்னோட அமைதியும், அழகும் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது.. ரிஷிக்கு இந்த பொண்ணு பாக்கற ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் பிடிக்காது.. வரவே மாட்டேன்னுட்டான்... முதல் தடவையா உன்னைத்தான் பொண்ணு பாக்க வந்திருக்கான்'' வாஞ்சையுடன் கூறினார்.



ஓரக்கண்ணால் மெதுவாக அவனையே பார்த்த ரியா, அந்த நிமிடம் அவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து, உடனே தன் விழிகளை பூமியில் பதித்தாள்.

ரிஷியின் பார்வையில், பெண் பார்க்கும் ஆர்வத்தையும் மீறி ஏதோ ஒரு வித்தியாசம் தெரிய, அது என்னவென்று அவள் யோசிப்பதற்குள், சகுந்தலா அவளை உள்ளே அழைத்துச் சென்றார்.

தன் அறைக்குள் சென்ற ரியாவை, ''அக்கா.. என்னவோ பெரிசா கண்டிஷன் எல்லாம் போட்டே.. இப்ப ஓரக்கண்ணால அவரையே பாத்துட்டிருக்கே? எனக்கென்னவோ இதெல்லாம் சரின்னு படலைப்பா!'' ஸ்வேதா கிண்டல் செய்தாள்.

அப்போது குழந்தையுடன் உள்ளே வந்த வித்யா, ''எங்க எல்லாருக்கும் உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு... எங்க அண்ணா மட்டும் சரின்னு சொல்லிட்டா, அப்புறம் உடனே கல்யாணம்தான்! இன்னொரு விஷயம் சொல்லணும்னுதான் நான் முக்கியமா உள்ளே வந்தேன்... நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க ரியா!'' பாராட்டிக் கூற, ரியாவின் கன்னங்களிரண்டும் அழகாக சிவந்தன.

உடனே குழந்தையை வாங்கிக் கொண்ட ஸ்வேதா, ''இந்தக் குட்டிப் பையன் பேரென்னங்க..?'' என்று கேட்க, ''ஆகாஷ்..'' என்றாள் வித்யா.

எந்த வித பந்தாவுமின்றி உள்ளே வந்து அவள் வெளிப் படையாகப் பேசிய விதத்தினால், ரியாவிற்கு அவளை மிகவும் பிடித்தது.

ஸ்வேதாவும், சங்கரியும், ஆகாஷுடன் விளையாட ஆரம்பிக்க, வித்யா அவளிடம் பேச ஆரம்பித்தாள்.

''இது வரைக்கும் எத்தனையோ வரன் வந்தப்பல்லாம் மறுத்த எங்கண்ணா உங்க போட்டோவைக் குடுத்தப்ப, முதல் தடவையா பொண்ணு பாக்க வரதுக்கு 'ஓகே' சொன் னார்.'' பெருமையுடன் தன் அண்ணனைப் பற்றிக் கூறினாள்.

''இங்கே மட்டும் என்னவாம்..? அக்காவும் கல்யாணம் வேணாம்.. மேல படிக்கணும், அது இதுன்னா! அப்புறம் அப்பா வற்புறுத்தினதும் தான் ஒத்துக்கிட்டா... என்ன.. மாப்பிள்ளை ஓகேயா? சரியான அமுத்தம்க்கா நீ... வெளிப்படையா எதையுமே சொல்லாதே!'' உதடுகளை சுழித்தபடி சிரித்தாள் ஸ்வேதா.

அப்போது அங்கு வந்த சிவகாமி, ''ரிஷியும் சரின்னு சம்மதம் சொல்லிட்டான்.. உங்க பொண்ணைக் கேட்டுட்டு எங்களுக்கு போன்லே சொல்லுங்க... நாளைக்கு ராத்திரி தான் நாங்க ஊருக்கு கிளம்பறோம்.. எங்க எல்லாருக்குமே ப்ரியம்வதாவை ரொம்பப் பிடிச்சிருக்கு...'' என்றபடி, கையில் கொண்டு வந்திருந்த பூச்சரத்தை ரியாவின் தலையில் சூடினார்.

பிறகு அனைவரும் கிளம்பும் போது, ''பொண்ணுக்கு சீர் செய்யறதைப் பத்தி, எங்க எதிர்பார்ப்பு என்னன்னு நீங்க கேட்டதா தரகர் சொன்னாரு! உங்களுக்கு என்ன இஷ்டமோ,



அத நீங்க செய்யலாம்! உங்க பொண்ணுக்கு தானே செய்யப் போறீங்க... எங்களுக்கு எந்த எதிர்பார்ப்பும் கிடையாது. ஒரு நல்ல முடிவா சொல்லுங்க'' என்றபடி எழுந்து விடை பெற்றார் சோமசுந்தரம்.

அனைவரும் அவரைத் தொடர, ஜன்னல் வழியே ஆர்வத்துடன் நோக்கிய ரியாவை, ரிஷி திரும்பியும் பார்க்கவில்லை.

மனதில் பல கனவுகளுடனும், எதிர்பார்ப்புகளுடமிருந்த ரியாவிற்கு, அவனுடைய பாராமுகம் கூட ஏதோ ஒரு வகையில் பிடித்திருந்தது.

பிறகு, தனியே வந்து பேசிய தந்தையிடம் எப்படிச் சொல்வதென்று திணறிவிட்டு, ''உங்க இஷ்டம்ப்பா...'' வெட்கத்துடன் கூறிவிட்டுத் தலைகுனிந்து கொண்டாள் அவள்.

அதைக் கேட்ட அனைவரும் மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருக்க, ஹோட்டலில் ரிஷி மட்டும் தான் எப்படி இந்த கல்யாணத்திற்கு சம்மதித்தோம் என்று தன்னையே கேள்வி கேட்டபடி யோசித்துக் கொண்டிருந்தான்.

திருமணமே தன் வாழ்க்கையில் வேண்டாமென்று இருந்த வனை, யார் திசை திருப்பியது என்ற விடை தெரியாது, குழம்பி இருந்தது அவன் மனது.

இருட்டில் நிழலைத் தேடி அலைவது போல் மனம் அலை பாய, ஆழ் மன வெளியில் வேறு நினைவுகளால் அடித்துக் கொண்டிருந்த அனல் காற்று, நெருப்பாய் கண்களில் தெறித்தது.

3



மறுநாள் காலையில், ராமனாதன் மாப்பிள்ளை வீட்டாரிடம் தங்கள் சம்மதத்தைக் கூறினார்.

அன்று மாலையில் அனைவரும் கோவிலுக்கு கிளம்பிக் கொண்டிருந்த போது, வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

வெளியே வந்து பார்த்தால், சிவகாமியும் வித்யாவும் குழந்தையுடன் வந்து கொண்டிருந்தனர்.

''வாங்க.. வாங்க'' உற்சாகத்துடன் அவர்களை வரவேற்று அமர வைத்த சகுந்தலா, ''இப்பதாங்க எல்லாரும் கோவிலுக்கு கிளம்பிட்டிருந்தோம்... நல்ல சகுனம்.. நீங்களும் வந்திருக்கீங்க..'' என்றபடி ஸ்வேதாவிடம் கண் ஜாடை காண்பித்து காபி எடுத்து வரும்படிக் கூறினார்.

''நாங்க இன்னிக்கு நைட் கிளம்பறோம்... நீங்க சம்மதம் சொன்னதுல எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்.. ஊருக்குப் போறதுக்கு முன்னாடி எங்க வீட்டு மருமகளைப் பாத்துட்டுப் போகலாம்னு வந்தோம்..''

''அம்மா! நான் ஒண்ணு கேக்கறேன்.. தப்பா நினைச்சிக்கக் கூடாது. சீர்வரிசை, நகை, எங்க இஷ்டம்னு சொன்னீங்க.. உங்க அளவுக்கு முடியாட்டாலும் நாங்க ஓரளவுக்கு நல்லாவே செய்வோம். ஆனா கல்யாணத்தைப் பத்தி உங்க எதிர்பார்ப்பு என்னன்னு தெரிஞ்சாத்தான் நாங்க அதுக்



கேத்தாப்புல ஏற்பாடு பண்ண முடியும்..'' தயக்கத்துடன் கேட்டார் ராமனாதன்.

''உங்க பொண்ணுக்கு செய்யறீங்க... இதுல நாங்க என்னங்க சொல்றது. எங்க குடும்ப வழக்கப்படி நாங்கதான் கல்யாணம் செய்வோம்.. அடுத்த மாசமே நல்ல நாளா பாக்க சொல்லி ஜோசியர்கிட்ட கேட்டிருக்கோம். தென்காசியிலேயே கல்யாணத்தை நடத்திடலாம்னு ரிஷியோட அப்பா சொல்லச் சொன்னாங்க..'' சிறு புன்னகையுடன் முடித்தார் ரிஷியின் தாய்!

அப்போது, காபியுடன் வந்த ரியா, அவர்களை வரவேற்று காபியைக் கொடுக்க, அவளைத் தன்னருகில் அமர்த்திக் கொண்ட சிவகாமி, ஒரு நகைப் பெட்டியை எடுத்து, அழகான மெல்லிய தங்க நெக்லஸை ரியாவின் கழுத்தில் அணிவித்தார்.

''வித்யாவுக்கும், ப்ரியாவுக்கும் ஒரே மாதிரிதான் வாங்கினோம்.. உடனே கொண்டு போய் குடுத்துடலாம்னு வித்யாதான் சொன்னா... அதான் வந்தோம்! நீங்க கிளம்புங்க... நாங்களும் ட்ரெயினுக்குக் கிளம்பணும்'' என்றபடி எழுந்து விடைபெற்றார்.

பிறகு, மறுமாதமே திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட, ரியாவை சங்கரியின் துணையுடன் விட்டுவிட்டு தென்காசிக்கு உறவினர்களுடன் சென்று மாப்பிள்ளை வீடு பார்த்து வந்தனர்.

ஸ்வேதா, அந்த ஊரைப் பற்றியே புகழ்ந்து கொண்டிருக்க, ரியாவிற்கும் அந்த ஊரையும், ரிஷியையும் பார்க்க வேண்டுமென்ற ஆசை வந்தது.

நாட்கள் நெருங்க நெருங்க, பத்திரிகை கொடுக்கவும், நகைகள், புடவைகள், பாத்திரங்கள் வாங்கவுமே நேரம் சரியாக இருந்தது.

ரியாவின் மனதை ரிஷியின் நினைவுகள் வண்டாய் துளைத்துச் சென்றன... இப்போதெல்லாம் கனவுகளிலும் அவன் வரவுகள் தெரிய ஆரம்பித்திருந்தன.

என்றைக்காவது அவன் போனிலாவது பேசுவானா என்று ஆவலுடன் அவள் எதிர்பார்த்திருக்க, அவனோ ஒரு முறை கூட அவளிடம் பேசவில்லை.

தனக்குள், எத்தனை எத்தனை ஆசைகள், அதிர்வுகள் பாடாய் படுத்துகின்றன.. அவனுக்கு மட்டும் அப்படியெல்லாம் தோன்றாதா என்ற ஏக்கம் ரியாவிற்குள் அதிகமாய்..!

திருமண நாளும் வந்துவிட, தென்காசிக்கு சென்ற பிறகு தான் ரியாவிற்கு தெரிந்தது, அது எவ்வளவு அழகான ஊர் என்று!

எங்கு பார்த்தாலும் தெரிந்த பசுமையும், பொங்கிப் பெருகி ஓடிய நதிகளும், தூரத்தே தெரிந்த மலைத் தொடரும், குளிர்ச்சியுடன் தூறிய இதமான சாரல் காற்றும், ரம்யமாக இருந்தன.

அதிகாலையிலேயே திருமணச் சடங்குகள் ஆரம்பித்து விட, ரிஷியிடம் புரிந்து கொள்ள முடியாத ஒரு வித இறுக்கம் தென்பட்டது. திருமண டென்ஷனாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

திருமண அலங்காரத்தில், அரக்கு நிறத்தில் உடலெங்கும் ஜரிகைக் கொடிகள் ஓடியப் பட்டுப் புடவையில், தங்க விக்ரகம் போல் ஒளிர்ந்தாள் ப்ரியம்வதா.



ரிஷியும், பட்டு வேஷ்டி சட்டையணிந்து கம்பீரமான ஆண்மை அழகுடன் தெரிந்தான்.

திருமணம் முடிந்தபிறகு நடத்தப்படுகின்ற மாலை மாற்றும் சடங்கின் போதும், அம்மி மிதித்து அருந்ததி பார்த்த போதும், எல்லாமே கனவில் நடப்பது போலிருந்தது ரியாவிற்கு!

மாலையின் மறைவில் அவனுடைய சீண்டல்களையோ, கடைக்கண் பார்வைகளையோ எதிர்பார்த்திருந்த ரியா விற்கு, ஏமாற்றமாக இருந்தது.

ஆனால், வித்யாவின் கிண்டலும் கேலியும் அவளைப் பெரிதும் தவிப்பில் ஆழ்த்தி சிவக்க வைத்தன.

சடங்குகள் எல்லாம் முடிந்த பிறகு, ஆகாஷை ரிஷியின் கைகளில் கொடுத்த வித்யா, ''அண்ணி! இதே மாதிரி ஒரு குட்டிப் பாப்பாவை அடுத்த வருஷம் எங்க அண்ணா கையில நீங்க தரணும்..'' என்று கூறி சிரிக்க, ரியா தலை குனிந்து குழந்தையைக் கொஞ்சுகிற சாக்கில் தன் நாணத்தை மறைத்தாள்.

அந்த நிமிடம் அவளை நோக்கிய ரிஷி, அந்த முகத்தில் படர்ந்திருந்த இளஞ்சிவப்பு நிறத்தையே ஒரு கணம் இமைக்காமல் பார்த்துவிட்டு தன் பார்வையை விலக்கிக் கொண்டான்.

அன்று மதியமே, உறவினர் கூட்டமெல்லாம், வந்த பேருந்திலேயே திருச்சிக்குத் திரும்பிவிட, ஸ்வேதாவையும் அவர்களுடனே அனுப்பி விட்டார் ராமனாதன்.

இரவு வானம், தன் நீல உடையைக் களைந்து, கருநீல உடைக்கு மாறி இருக்க, அது பாரதி பாடிய 'பட்டுக் கருநீலப் புடவை பதித்த நல்வயிரம்'' என்ற பாடலை ரியாவிற்கு நினைவுபடுத்துவதாய்!

ரிஷியின் வீடு, பெரிய பண்ணை வீட்டைப் போலிருக்க, சுற்றிலும் பெரிய தோப்பு போல் தென்னை மரங்களும், மாமரங்களும் நிறைந்திருந்தன.

அழகிய இரவின் மடியில், பூமியில் ஒளிரும் நிலவைப் போல் அந்த பங்களா ஒளிர்ந்து கொண்டிருந்தது.

தென்றல் காற்று இதமான சாரலுடன் வீசிக் கொண்டிருக்க, மலர் அலங்காரம் செய்யப்பட்டிருந்த மாடியறையில், ஜன்னலருகில் நின்று வெளியே பார்த்தபடி, புருவமத்தியில் பெரும் சுழிப்புடன் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான் ரிஷி.

அப்போது கதவு திறக்கப்பட, ரிஷியின் அறைக்குள் ரியாவை பால் செம்புடன் அனுப்பி விட்டு, உறவுப் பெண்களும் வித்யாவும் கதவை மூடிச் சென்றனர்.

உள்ளம் வெகுவாய் படபடத்தபோதும் அதை வெளிக் காட்டாமல் அமைதியாக நின்றிருந்த ரியாவிற்கோ, அப்படியே கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடிவிடலாமா என்றிருந்தது.

மெதுவாக நடந்து சென்று ரிஷியின் அருகிலிருந்த டீப்பாயில் பாலை வைத்துவிட்டு, அவன் காலில் விழப்போன ரியாவை அவசரமாகத் தடுத்து நிறுத்தினான் அவன்.

''வேண்டாம்... எனக்கு இந்த கால்ல விழற கல்சர்லாம் பிடிக்கறதில்லை... பொதுவாவே நான் எந்த ஃபார்மாலீட்டிஸும் விரும்பறதில்லை.'' என்று கூறிவிட்டு அவளைக் கட்டிலில் உட்காரச்சொல்லியபடி அவனும் அமர்ந்தான்.

மெல்ல அமர்ந்த ரியா, மருதாணியிட்ட தன் விரல்களையே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



சிறிது நேரம் மௌனம் மட்டுமே அங்கு ஆட்சி செய்ய, திடீரென்று எழுந்து சென்று ஜன்னல் வழியே வெளியே தெரிந்த இருட்டை வெறித்த ரிஷி, மெதுவாக அவள்புறம் திரும்பினான்.

''உன்கிட்ட ஒரு விஷயம் பேசனும்.. ஆனா அதை நீ எப்படி எடுத்துக்கப் போறேன்னுதான் தெரியலை..'' என்றவனைத் தயக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

ஜன்னலில் சாய்ந்து, இறுகிய முகத்துடன் இரு கைகளையும் கட்டிக் கொண்டு பேசும் விஷயம்.. அதுவும் முதலிரவில் என்னவாக இருக்கும் என்று அவள் யோசிக்கும் போதே, அவன் பேச ஆரம்பித்தான்.

''நான் 'பிடெக்' படிக்கும்போது, என் கூடக் காலேஜில படிச்ச ஒரு பொண்ணை.. நான் விரும்பினேன்...''

அவன் நிறுத்தியபோது, அவள் மனம் ஒரு கணம் விதிர்த்துப் போய் சோர்வடைந்தது.

வேகமான மூச்சுடன் நிமிர்ந்து, கண்களில் தவிப்புடன் நோக்கியவளை ஒரு நொடி அதிகமாகவே கூர்ந்தவன், பிறகு பேச ஆரம்பித்தான்.

''அவ பேர் வர்ஷா! அவளும் என்னை விரும்பினா..ம்... விரும்பினதா நான் நினைச்சேன்.. பிடெக் முடிச்சப்புறம் எங்க பேக்டரியப் பாத்துக்கணும்கிறதுதான் என் லட்சியமே! என் முடிவைப் பத்தி ஆரம்பத்திலேயே அவகிட்ட நான் சொல்லி இருக்கேன்...

''ஆனா அவளுக்கு வெளி நாட்டில போய் செட்டிலாகணும்னு மனசுல ஒரு வெறியே இருந்திருக்கு... அது எனக்குத் தெரியாது.. படிப்பு முடிஞ்சவுடனே தான் அவ எண்ணம் எனக்குப் புரிஞ்சுது..

"என்னையும் தன்னோட வெளிநாட்டுக்கு வரச் சொல்லி வற்புறுத்தினப்ப, நான் மறுத்திட்டேன்... நான் முடியாதுன்ன உடனே மனசை மாத்திக்கிட்டு வேற ஒருத்தரைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டு உடனே யு.எஸ் போயிட்டா...

"என்னோட காதல் எதுல ஆரம்பிச்சுதுன்னு தெரியலை.. ஆனா தோல்வியில முடிஞ்சது! என் அப்பாவோட சுமைய நான் சுமக்கணும்னு நான் நினைச்சதுதான் என் காதலுக்கு எதிரியா இருந்தது..." ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான்.

அவன் பேசிய மொழி புரியாதவளைப் போல், ஒன்றும் புரியாமல் மிரட்சியுடன் அவள் விழிக்கவும், "பயப்பட வேண்டாம்.. இப்பவும் நான் அவளையே நினைச்சிட்டிருக் கறதா நினைச்சுடாதே! என்னைப் பொறுத்த வரைக்கும் அவ அன்னிக்குத் தொலைஞ்சு போனவதான்! என் மனசுல இருந்து அவளைத் தூக்கி எறிஞ்சிட்டேன். இந்த நிமிஷம் நான் அதிகமா வெறுக்கற ஒருத்தின்னா, அது அவதான்...

"ஆனா, அவளால காயப்பட்ட அந்த வடு மட்டும் ரணமா அப்படியே இருக்கு.. அன்னியிலிருந்து எனக்கு பெண்கள் மேல இருந்த நம்பிக்கையே போயிடுச்சு... எந்தப் பொண்ணை யும் நம்ப முடியலை.. எல்லாருமே ஒட்டு மொத்தமா ஏமாத்துறவங்களோ.. சுயநலம் பிடிச்சவங்களோன்னு பயம் வருது.." கூறிவிட்டு அவளையே பார்த்தான் ரிஷி.

அவன் பேசி முடிக்கும் வரை, அவனையும், அவ னுடைய முகபாவங்களையுமே கவனித்துக் கொண்டிருந்த ரியாவிற்கு, அந்த நிமிடம் அந்த முகமறியா அந்த வர்ஷாவின் மேல் கடும் ஆத்திரம் வந்தது.

எதற்கும் கலங்காதவனாகத் தெரிகின்ற ஒருவனின் மனதை எப்படி காயப்படுத்தி இருக்கிறாள் என்ற கோபமும்,



அவனுடைய மனக்காயங்களை, அன்பெனும் மயிலிறகு கொண்டு வருடி ஆற்ற வேண்டும் என்ற ஏக்கமும் எழுந்து மனதை பரிதவிக்கச் செய்தன.

அவள் முகம், அவனுக்கு என்ன புரிய வைத்ததோ, பார்வையைத் திருப்பி, எங்கோ பதித்தபடி பேச்சைத் தொடர்ந்தான் ரிஷி.

"ம்.. பொதுவா பெண்களோட மனசு ரொம்ப ஆழமான துன்னு சொல்லுவாங்க... அது சரிதான்! ஏன்னா, என்னால அத சரியா கணிக்க முடியலையே! வர்ஷாவோட மனசுல இருந்தது எனக்குத் தெரியாம போச்சே! கடைசியிலே தோத்துப் போனது என் காதலும்.. அவளோட பொய் களும்தான்! அதிலிருந்து எனக்கு பெண்கள்னா பிடிக்கற தில்லை.. அதனாலதான் கல்யாணம்கிற விஷயத்தையே நான் தவிர்த்தேன்..

மெதுவாக நடந்து வந்து அவளெதிரில் அமர்ந்தவன், ரியாவை நோக்கினான், அவள் கண்களில் தெரிந்த பரி தவிப்பை பார்க்க நேருமோ என்று எண்ணியபடி, எங்கோ பார்த்தபடி தொடர்ந்தான்.

"ஆனா, அம்மா என்னைக் கல்யாணத்துக்கு போன வருஷத்துலயிருந்து ரொம்பவே வற்புறுத்த ஆரம்பிச்சாங்க! அப்பாவுக்கு இது தெரியும்.. அதனால அவங்க எதுவும் சொன்னதில்லை...

"அம்மாகிட்ட எத்தனை நாள் மறுக்கறதுன்னுதான் பெண் பாக்க வந்தேன். உன்னைப் பார்த்தவுடனே, ஏதோ ஒண்ணு என்னை சரின்னு சொல்ல வச்சுது... நீ படிக்கணும்னு சொன் னது எனக்கு சாதகமா இருந்தது.. நீ நல்லாப் படிக்கலாம்!

''நான் உன்னை எந்த விதத்துலயும் தொந்தரவு பண்ண மாட்டேன். என் மேலப் பாசம் வைச்ச மாதிரி நடிச்சிட்டு, ஒரு நொடியில் தூக்கியெறிஞ்சிட்டுப் போனவ, எனக்குள்ளே இருந்த நம்பிக்கைகளை அழிச்சிட்டா...

''என் மனசு மாறுமான்னு எனக்கே தெரியலை! என் மனசு உன்னை மனைவியா ஏத்துக்கற வரைக்கும், என் விரல் நுனி கூட உன் மேலப் படாது... அது வரைக்கும் காத்திருக்க உனக்கு இஷ்டமில்லைன்னா, எப்ப வேணாலும் நான் உனக்கு டிவோர்ஸ் தரேன்..''

அவன் முடித்தவுடன் அதிர்ந்து நோக்கிய ப்ரியம் வதாவின் விழிக்கிடையில் துளிர்த்த வைரம் வேகமாக வழிந்து விடைபெற்றது.

அவர்கள் இணைந்த அன்றே பிரிவைப் பற்றி வந்த வார்த்தைகள், அவளை ஒடித்துப் போட்டன.

## 4



ப்ரியம்வதாவின் கண்ணீரைக் கண்ட ரிஷியின் முகம், பாறையென இறுகிவிட, தன்னால்தான் எல்லாமே என்ற சுயவெறுப்பும், வேதனையும் அவனை வெகுவாய் ஆக்ரமித்தன.

அவனை எப்படி மாற்றப் போகிறோம்.. இவனுடைய ரணங்களை எப்படி ஆற்றப் போகிறோம் என்று சலனப்பட்ட மனதை அடக்கிய ரியா, ஒரு முடிவுடன் நிமிர்ந்தாள்.



''ம்... எப்படி சொல்றதுன்னு தெரியலை.. நான் காத் திருப்பேன்.. உங்க மனசு என்னை ஏத்துக்கற வரைக்கும் பொறுமையா இருப்பேன். ஆனா, இது யாருக்கும் தெரிய வேணாம்.. எல்லார் மனசும் வேதனைப்படும்.. அவங் களுக்கு முன்னாடி மட்டுமாவது ஒத்துமையான தம்பதிகள் மாதிரி இருப்போம்.. காலம் எப்பவுமே காயங்களை ஆத்தற சக்தி படைச்சதுன்னு சொல்வாங்க.. பாப்போம்.''

தெளிவும், தீர்க்கமுமாகக் கூறிய ப்ரியம்வதாவையே ஆச்சர்யத்துடன் பார்த்த ரிஷிக்கு, இவள் எப்படிப்பட்ட பெண்ணோ என்ற தேடலின் முடிவு, இதம் தரும் விதமாக இல்லை.

எதிர்த்து சண்டை போட்டாலாவது வெறுக்கலாம்... எதற்கும் சம்மதமாகத் தலையாட்டுபவளிடம் ஏனோ வெறுப்பு வர மறுத்தது.

ஒரு பெருமூச்சுடன் எழுந்த ரிஷி, அவளைக் கட்டிலில் படுக்கும்படிக் கூறிவிட்டு, அங்கிருந்த சோபாவில் படுத்துக் கொண்டான்.

தனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது என்று நொந்த மனதுடன் படுத்த ரியா விடியும் போதுதான் உறங்கவே ஆரம்பித்தாள்.

காலையில் கண்விழித்த ரியாவிற்கு, முதலில் ஒன்றுமே புரியவில்லை.

அன்றைய விடியல் ஒவ்வொருவரையும் வெவ்வேறு விதமான மன நிலையில் விழிக்க வைத்தது.

இரவு நடந்ததை நினைத்தால் ஒரு நீண்ட கனவு போலிருந்தது. தான் எங்கிருக்கிறோம் என்பது உணர்ந்து திரும்பினால், ரிஷி அங்கு இல்லை.

சோம்பலுடன் எழுந்து, ஒரு புறமிருந்த கதவைத் திறந் தால், அங்கு ஒரு பெரிய அறை, கம்ப்யூட்டர் எல்லாம் வைக்கப்பட்டு அலுவலக அறை போல் தெரிந்தது.

எதிர்ப்புறமிருந்த கதவைத் திறந்தால், ஒரு பீரோவும், ட்ரெஸ்ஸிங் டேபிளும், அவளுடைய பெட்டிகளும் அந்த அறையில் அடுக்கப்பட்டிருந்தன.

யோசனையுடன் திரும்பி அறைக்குள் வந்தபோது, லுங்கி அணிந்தபடி வெற்று மார்புடன் தலை துவட்டிக் கொண் டிருந்தான் ரிஷி.

அவனைப் பார்த்தாலே தன் வசமிழந்து விடும் உள் ளத்தைக் கட்டுப் படுத்தியபடி வேறு புறம் திருப்பிய போது, அவள் வரவை உணர்ந்து ரிஷி திரும்பினான்.

''உன்னோட ரூம் அது... இந்தப் பக்கம் என்னோட ஆபீஸ் ரூம்... உன் திங்ஸ் எல்லாம் அங்க வச்சிருக்காங்க.. பாத்ரூம் இங்கே இருக்கு..'' என்று கை காட்டிவிட்டு தன் வேலையைத் தொடர்ந்தான்.

அவளும் குளித்துவிட்டு வந்து தன் அறையில் கூந் தலைக் காய வைக்கும் போது, அறைக்கதவு தட்டப்பட்டு வித்யாவும் சகுந்தலாவும் நுழைந்தனர்.

அவர்களைக் கண்டதும் என்ன கேட்பார்களோ என்ற பயத்தில் அவள் தலைகுனிந்ததும் ஒரு வகையில் நல்ல தாகிப் போனது.

''அண்ணிக்கு வெக்கத்தைப் பாத்தீங்களா? என் னண்ணி.. எங்க அண்ணா என்ன சொன்னார்? எங்ககிட்ட எல்லாம் சொல்ல மாட்டீங்களா?'' கிண்டலுடன் இழுத்தாள் வித்யா.



இவளுடைய அண்ணன் கூறியதை எல்லாம் சொன்னால், இவள் முகம் எப்படி மாறும் என்ற நினைவில் தனக் குள்ளேயே மெதுவாக சிரித்துக் கொண்டாள் அவள்.

ஆனால் சகுந்தலா மட்டும் பெண்ணை கவனித்து விட்டு ''என்ன ரியா...? நான் சொன்ன மாதிரி மாப்பிள்ளை மனசு கோணாம நடந்துக்கிட்டியாம்மா?'' வித்யா சென்ற பிறகு மெதுவாகக் கேட்டார்.

''அவர் மனசுப்படிதான் நடந்துக்கிட்டேன்... அவருக்கு எது சந்தோஷமோ அதுமாதிரிதான்மா இனிமே இருப் பேன்.'' என்றவளுக்குப் பின்னலிட்டு தயார்செய்து, அழைத்துக் கொண்டு சென்றார் சகுந்தலா.

தன் அறையை விட்டு வெளியே வந்தவுடன் ரிஷியைக் காணாமல், அவள் கண்களில் தெரிந்த தேடலைப் புரிந்து கொண்டவர், ''நாங்க வரும்போது தான் மாப்பிள்ளை கீழே போனார்...'' என்றபடி அழைத்துச் செல்ல, ரியாவின் இதழ்களில் ஒரு வறண்ட முறுவல் கசிந்தது.

கீழே ஹாலில் முக்கியமான உறவினர்கள் அனைவரும் இருந்தனர். அவளைக் கண்டதும் ஆவலுடன் எழுந்து வந்த ராமனாதன் ரியாவின் கைகளை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டார்.

எப்போதுமே அவருக்கு ப்ரியம்வதா என்றால் கொள்ளைப் பிரியம்.. அவளை விட்டு இன்று பிரிந்து செல்ல வேண்டுமே என்ற நினைவில் அவர் கண்கள் கலங்கின.

அவருடைய பார்வை மகளின் முகத்தை தவிப்புடன் ஆராய, கையில் பூச்சரத்துடன் வந்த வித்யா, அதை ரியா வின் தலையில் சூடிவிட்டு அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

தங்கள் உறவினர்களுக்கெல்லாம் அவளை அறிமுகப் படுத்த, அன்று முழுவதும் ஆகாஷுடன் விளையாடியதிலும், உறவினரின் வருகையாலும் வேகமாகப் பொழுது சென்றது.

மதியம், சாப்பாட்டிற்குப் பிறகு ராமனாதனும் சகுந்தலாவும், அவளை விட்டுப் பிரியும் போது, அடக்க மாட்டாமல் கண்ணீர் வந்தது.

மாப்பிள்ளையிடம் சென்ற ராமனாதன், "என் பொண்ணு பொறுமையானவதான் மாப்பிள்ளை! ஆனா, தெரிஞ்சோ, தெரியாமலோ ஏதாவது தப்பு செஞ்சிட்டா, நீங்க எடுத்துச் சொன்னா புரிஞ்சிப்பா! அவ சந்தோஷமா இருக்கணும்.. எனக்கு அது போதும்!" கண்கள் கலங்கக் கூறியபோது, அவர் கைகளைப் பிடித்து ஆதரவாக அழுத்தி, தைரிய மூட்டுகின்ற ஒரு புன்னகையுடன் விடை கொடுத்தான் ரிஷி.

மனம் சோர்ந்து போயிருக்க, உடனே மாடிக்கு வந்த ரியா, தன் அறையிலேயே ஒரு போர்வையைத் தரையில் விரித்து அதில் உறங்கிப் போனாள்.

பிறகு, நண்பர்களுடன் பேசி அனுப்பிவிட்டு அறைக்கு வந்த ரிஷி அவளைக் காணாமல் திகைத்து, மெதுவாக அவளுடைய அறைக் கதவைத் தட்டிவிட்டு எட்டிப் பார்த்த போது, சிறு குழந்தை போல் உறங்கியவளை ஆராய்ந்தது ரிஷியின் பார்வை!

அதில், அதீதமான அமைதியும், வெகுளித்தனமும் தெரிய, மனதினுள் ஏதோ தோன்றவும், கதவை மெதுவாக சாத்தி விட்டு வந்து படுத்தான் அவன்.

சப்த அருவிகளால் நிறைந்திருந்த வீட்டில், அவனுடைய அறை மட்டும் ஒலிப்பிரசவங்களின்றி மௌனமாய் ஏசி சப்தத்தை மட்டும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.



அந்த நிமிடம், அவனுக்கும் தனிமை மிகவும் தேவையான ஒன்றாய்! பல யோசனைகள் மனதில் பொங்கிப் பிரவகிக்கும் நதியாய் கரை புரண்டன.

அன்று மாலையில், தயங்கியபடி தன் அறையிலிருந்து வெளியில் வந்தவளை, உறங்காமல் அறையின் விட்டத்தை சிவந்த கண்களால் வெறித்திருந்த ரிஷியின் உருவம் ஈர்த்தது.

மனதின் தனிமை குலைக்கப்பட்டதும், சிந்தனைச் சரங்கள் அறுபட, "ஒரு நிமிஷம்.." என்று அவளை நிறுத்திய ரிஷி, அவனுடைய அலுவலக அறையைக் காட்டி "அங்கே என் டேபிள்லே போன் இருக்கு.. உன் அப்பா, அம்மாகிட்ட எப்ப பேசணும்னு தோணுதோ அப்பப் பேசலாம்... ஃபீல்... ஃப்ரீ.. ஓகே!" என்றான்.

மெல்லத் தலையசைத்தப்படி, "தேங்க்ஸ்" என்றவளுக்கு இதுவரை அவன் தன்னைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை என்ற எண்ணம் மனதில் விரவிப் பரவியது.

கீழே சென்றபோது, ஹாலில் வித்யாவுடன் ஆகாஷ் இருக்க, அவனுடன் விளையாட ஆரம்பித்தாள் அவள்.

மழலையில் சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டுமிருந்த குழந்தையை இறக்கி விடவே மனமின்றி கொஞ்சியதில் நேரம் போனதே தெரியவில்லை.

அப்போது அங்கு வந்த ரிஷியும், இயல்பாக அவளருகில் அமர்ந்து ஆகாஷை கொஞ்சத் துவங்க, அவனுடைய அருகாமை ரியாவிற்குள் ஒரு விதப் பதட்டத்தை ஏற்படுத்தியது.

ஆடிக்காற்றில் அகப்பட்ட சிறு சிறகாய் மனம் சடசடத்தபோது, "அண்ணா! அண்ணியக் கொஞ்சணும்னு

ஆசையா இருந்தா, நேராவே அத செய்ய வேண்டியது தானே? அதுக்கு ஏன் என் பையனை துணைக்கு அழைச்சிக்கறீங்க'' என்று வித்யா கேலி செய்ய, சுதாகரும் அப்போது அங்கு வரவும், அந்தச் சூழலே கிண்டலும் கேலியுமாய் இனிதே மாறியது.

''ஏன் ரிஷி? அடுத்த வாரக் கடைசியில நம்ம வீட்டுக்கு விருந்துக்கு வாங்களேன்... அப்பா, அம்மா கேக்க சொன்னாங்க'' சுதாகர் கேட்டான்.

''அம்மாகிட்டதான் கேக்கணும்.. அடுத்த சண்டேன்னு பாத்தா எதுவும் ப்ரோக்ராம் இல்லை. நான் ஃப்ரீதான்! ரிஷி கூறியவுடன், ''என்ன ரிஷி.. இப்பவும் உங்க அம்மாவைக் கேக்கணும்கறீங்க.. உங்களுக்கு பாஸ் வந்தாச்சு. அவங்க கிட்டக் கேளுங்க.. அவங்க தான் 'ஓகே' சொல்லணும்'' என்று கேலி செய்தான் சுதாகர்.

ரியாவிடம் திரும்பியவன், ''என்ன.. உனக்கு ஓகே தானே..?'' என்று கேட்க, ''இந்த ஆகாஷ் கூட இருக்கறதுன்னா, டபுள் ஓகே.. ஏன் கண்ணா.. அப்படித்தானே?'' என்றபடி அவனை முத்தமிட்டாள்.

ஒரு நிமிடம் அவளையே ஆச்சர்யத்துடன் கூர்ந்த ரிஷிக்கு, அவள் தன்னுடைய குழந்தையை கையில் சுமந்தால் எப்படியிருக்கும் என்ற எண்ணம் உடனே வந்தது.

அப்போது வித்யாவின் குரல் நடுவில் புகுந்தது.

''அண்ணா! நாங்க எல்லாரும் இங்கதான் இருக்கோம். ஒரு பேச்சுக்கு சொன்னா, அதுக்குன்னு இப்படியா சரண்டர் ஆவாங்க.. அண்ணி முகத்தையே பாத்துட்டு தவம் இருக்கீங்க..''



அவள் பேச்சின் பொருள் உணர்ந்து வேகமாக நிமிர்ந்த ப்ரியம்வதாவின் பார்வை ரிஷியின் விழிகளை சந்தித்ததும், அதன் கூர்மையைத் தாங்க முடியாமல் உடனே தழைந்தது.

ரியாவின் மனம் படபடத்து முகம் சிவந்து விட, உடனே அவள் ஆகாஷைத் தூக்கிக் கொண்டு விலகிச் செல்ல, அதைக் கண்ட ரிஷியின் முகம் உடனே சுருங்கி இறுகியதையும், அதில் பெரும் ஏமாற்றம் வந்து போனதையும் ரியா கவனிக்கவில்லை.

## 5



அன்றிரவு, தங்கள் அறைக்குள் அவள் தயக்கத்துடன் நுழைந்த போது, படுக்கையில் சாய்ந்து ஏதோ புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்த ரிஷி, அவளைக் கண்டதும் எழுந்தான்.

''உனக்கு அந்த ரூமிலே ஒரு கட்டிலைப் போட சொல்லியிருக்கேன். நாளைக்கு ரெடியாகி வந்துடும்... இன்னிக்கு ஒரு நாள் இங்கேயே படுத்து அட்ஜஸ்ட் பண்ணிக்க! நான் சோபாவில் படுத்துக்கறேன்.''

அவள் மறுத்துக் கூற எண்ணுவதற்குள், அவன் அலுவலக அறைக்குள் சென்றுவிட, இன்று ஒருநாள் தானே என்று படுத்தவளுக்கு உறக்கம் வரவில்லை.

மனம் ஏனோ சோர்வடைந்து தத்தளிக்க, திருமணம் முடிந்த மறுநாளே இப்படித் தனிமையில் தவிக்க நேரிடுமென்று அவள் கனவிலும் நினைக்கவில்லை.

ரிஷி தன்னை இந்த அளவு பாதிப்பான் என்று முன்பு யாராவது கூறியிருந்தால், அவள் சிரித்திருப்பாள்.

அந்த வர்ஷாவின் மேல் இனம் புரியாத கோபம் வர, ரிஷி தன்னை விரும்பினால் எப்படி இருக்கும் என்று ஏக்கமாய் எண்ணியது மனது.

ஏதோ ஒரு வித சுக ராகம் மனதில் காவியமாய் படர்ந்து, இதயத்தை வருடி, அவள் நினைவுகளை ஆழமாகப் பதித்திருந்தன.

மனதில் பல எண்ணங்களுடன் உறங்கியவள், ரிஷி அறைக்குள் வந்து ஆராயும் விதமாக அவளையே நோக்கியதையோ, பிறகு ஒரு பெருமூச்சுடன் சென்று படுத்ததையோ அறியவில்லை.

அதிகாலையில் எழுந்து அவள் குளித்து தயாராகி வந்தபோது அலுவலக அறையிலிருந்த போன் அடித்தது.

ரிஷியின் தூக்கம் கலைந்து விடக் கூடாதே என்று அவசரமாக சென்று போனை எடுத்தால், ராமனாதன்தான் பேசினார்.

''ரியா.. எப்படிடா இருக்கே? நேத்து லேட்டா வந்து சேர்ந்தோமா.. அதான் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு பேசலை... சந்தோஷமா இருக்கியாம்மா? திரும்பி வரப்ப எல்லாம் உங்கம்மா ஒரே அழுகை! இந்தா... அவகிட்டப் பேசு!''

பிறகு அவர் பேசிய போது குரல் கம்மி இருந்தது. ஸ்வேதாவுடனும் பேசி விட்டுப் போனை வைத்தாள் அவள்.

அந்த ஞாயிறன்று திருச்சியில் ரிசப்ஷன் வைத்திருந்தார் ராமனாதன். சனிக்கிழமை இரவு முதல் வகுப்பில் ரயிலில் அவர்களுக்கு டிக்கெட் பதிவு செய்திருந்தார் அவர்.



சோமசுந்தரத்திற்கு அலைய முடியாதென்பதால், ரிஷியையும், ரியாவையும் அழைக்க ராமனாதன் சனியன்று காலையிலேயே வந்து விடுவதாகக் கூறியிருந்தார்.

எல்லாவற்றையும் மனதில் அசை போட்டபடி வெளியில் வந்த ரியா, எழுந்து அமர்ந்திருந்த ரிஷியைக் கண்டதும், ''அப்பா, அம்மா உங்களை ரொம்ப விசாரிச்சதா சொல்லச் சொன்னாங்க.. ஸ்வேதா கூடக் கேட்டா! சனிக்கிழமை காலையில அப்பா வரேன்னார்.'' மலர்ச்சியுடன் கூறினாள்.

அவளையே யோசனையுடன் பார்த்த ரிஷி, ''உனக்கு அவங்களோடு தங்கணும்னு விருப்பமிருந்தா தங்கிட்டு வா.. நான் வேணா திரும்பி வந்திடறேன்...'' என்றான் மெதுவாக.

''இல்லை.. நீங்க அடுத்த வாரம் வித்யாண்ணி வீட்டுக்குப் போகலாம்னு ப்ளான் பண்ணி இருக்கீங்களே.. அதை எனக்காக மாத்த வேண்டாம்... நான் வந்திடறேன்.''

இயல்பாகக் கூறிவிட்டுச் செல்பவளையே, அவன் விழிகள் தொடர்ந்தன.

நேரே சிவகாமியிடம் சென்றவள், ''நான் ஏதாவது வேலை செய்யணும்னா சொல்லுங்கத்தை... செய்யறேன்'' என்றாள் முறுவலுடன்!

''ம்.. முதல்லே நீ என் பையனை கவனிச்சிக்கணும்.. அப்புறம் வயசான காலத்துல எங்களை சுறுசுறுப்பாக்கறதுக்கு பேரப் பிள்ளைங்களை பெத்துத் தரணும்!''

''அத்தை.. நான் அதக் கேக்கலை.. பூஜை வேலை... வீடு க்ளீன் பண்றது.. இது மாதிரி சின்னச் சின்ன வேலையை யாவது செய்யலாம் இல்லையா?''

"கொஞ்ச நாள் போகட்டும் ப்ரியா! சமையலுக்கும், மேல் வேலைக்கும் தான் நம்ம வீட்டுல ஆள் இருக்கே! முதல்லே உனக்கு இந்த வீடு நல்லாப் பழகட்டும்.. பூஜை வேலை கூட இப்ப செய்ய வேண்டாம்.. ரெண்டு நாள் போகட்டும்.."

"அப்ப என்னதான் செய்யறது.. பொழுதே போகலை அத்தை!"

"ம்.. கல்யாணமான புதுசில பொழுது போகலைன்னா எப்படி? முதல்லே, நீ இந்த காபியைக் குடிச்சிட்டு, ரிஷிக்கும் எடுத்துட்டுப் போய் குடு!" என்று அனுப்பி வைத்தார்.

வீட்டிலிருந்த உறவினர்கள் சென்றிருக்க, மரகதம் அத்தை மட்டும் தங்கியிருந்தார்.

ஏனோ அவர் ரியாவைப் பார்த்த பார்வையே வித்தியாசமாக தெரிய, காபியை எடுத்துச் சென்று ரிஷியிடம் கொடுத்துவிட்டு, ஜன்னலின் அருகே நின்று தானும் பருக ஆரம்பித்தாள் ரியா.

வெளியே, தோட்டமும், தூரத்தில் தெரிந்த மலைத் தொடர்களும், இதமான சீதோஷ்ண நிலையும், தென்னந்தோப்பின் சலசலப்பு சப்தமும் ரம்யமாக இருந்தன.

ஒரு நாள், நடந்து சென்று இந்தப் பண்ணையை சுற்றிப் பார்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள் அவள்.

பின்புறம் நின்று அவளையே கவனித்துக் கொண்டிருந்த ரிஷி, "என்ன.. எங்க ஊர் உனக்குப் பிடிச்சிருக்கா? இந்தப் பண்ணையை சுத்திப் பாக்கணும்னு ஆசையா இருக்கா..? நாளைக்குக் காலையிலப் போகலாம்." என்று கூறி, அவளுக்குள் சிறு அதிர்வை ஏற்படுத்தினான்.



"ம்.." என்று தலையசைத்தபோது, தான் நினைத்தது இவனுக்கு எப்படித் தெரிந்தது.. இவன் என்ன என் மனதைப் படிக்கும் வாசகனோ என்ற ஆராய்ச்சி மனதில் வந்தது.

அருகில் வந்திருந்தவனுடைய 'ஆஃப்டர் ஷேவ் லோஷனி'ன் மணம், நாசியை மென்மையாக வருடி ஒரு புதுவித உணர்வை ஏற்படுத்தியது.

அன்று முழுவதும், ஆகாஷுடனே பொழுது கழிய, அன்றிரவு வித்யா ஊருக்குக் கிளம்பினாள்.

ஏனோ, அந்தக் குழந்தையை விட்டுப் பிரிய ரியாவிற்கு மனமே இல்லை.

ரிஷி அவர்களுடன் ஸ்டேஷனுக்குச் செல்ல, பெரியவர்களுக்குப் பால் எடுத்துக் கொண்டு போய் கொடுத்தாள் அவள்.

"நீ ஏம்மா இதையெல்லாம் செய்யறே? அந்த ரேவதிப் பொண்ணு என்ன பண்றா?" சோமசுந்தரம் கேட்டார்.

"இல்லை மாமா.. அவங்க தான் எடுத்துட்டு வந்தாங்க... நான் தான் கேட்டு, அவங்ககிட்டயிருந்து வாங்கிட்டு வந்தேன்... சும்மாதானே இருக்கேன் மாமா! அப்புறம், நீங்க சாப்பிட வேண்டிய மாத்திரைங்கல்லாம் எங்கே இருக்குன்னு சொல்லுங்க.. நான் எடுத்துட்டு வரேன்."

"வேணாம்மா.. அத்தை எடுத்துட்டு வருவா.." என்றபோது மரகதம், தட்டிலிருந்த ஆப்பிள் துண்டுகளை சாப்பிட்டபடி அங்கு வந்தார்.

"ஏம்ப்பா! அந்தப் பொண்ணுதான் செய்யட்டுமே! சிவகாமி பாவம்... எத்தனை நாள்தான் செய்வா? அவளுக்கும்

இங்கே என்ன வேலை இருக்கு.. சும்மாவே இருந்தா, உடம்பு துருப்பிடிச்சிப் போயிடும்'' நக்கலாகக் கூறினார்.

சட்டென்று நிமிர்ந்த சோமசுந்தரம், ''அக்கா.. இது எங்க வீடு! ப்ரியா என் மருமக.. அவளை எப்படி நடத்தணும்னு எனக்குத் தெரியும். நாளைக்கு நீ ஊருக்குக் கிளம்பணுமே.. துணி எல்லாம் அடுக்கி வைக்கிற வேலை இருக்கும்.. அதைப் பாரு!'' என்றார் கூர்மையுடன்.

அவர் முகம் சுளித்தபடி எழுந்து செல்ல, என்ன மாத்திரை... எப்போது சாப்பிட வேண்டுமென்று தெரிந்து கொண்டு எடுத்து வந்து தந்தாள் ரியா.

பிறகு, அவர்கள் மூவரும் பொதுவான விஷயங்களைப் பற்றிய பேச்சிலும், ரியாவைப் பற்றி அறிவதிலும் இயல்பாக ஆழ்ந்து விட, அவர்களிடையே ஒரு வித அன்யோன்யமும், புரிந்து கொள்ளுதலும் ஏற்பட ஆரம்பித்தது.

அப்போது வித்யாவை ரயிலேற்றிவிட்டு வந்த ரிஷி, அவர்களுடைய இயல்பான ஒட்டுதலைக் கண்டவுடன், ஏனோ ஒரு நிமிடம் அந்த வீட்டில் தன்னையே அந்நியனாக உணர்ந்தான்.

ஆனால் மறுகணமே இயல்பாகி, தந்தையருகில் வந்து அமர்ந்து பேச ஆரம்பித்தான்.

''வித்யாவையும், மாப்பிள்ளையையும் ரயிலேத்தி விட்டாச்சு.. போய் சேர்ந்தவுடனே போன் பண்றேன்னாங்க!'' என்றான்.

''சரிப்பா! வித்யாவும், ஆகாஷும் போனதும் ரொம்ப கஷ்டமா இருந்தது... ஆனா, ப்ரியா இருக்கிறது அந்தக் கவலையை பாதியா குறைச்சிடுச்சி.. ரொம்ப அன்பான,



அனுசரணையான பொண்ணா நம்ம ப்ரியாவை சம்மந்தி வீட்டில வளர்த்திருக்காங்க...''

ரியாவைப் பற்றி பெருமையும், மகிழ்ச்சியுமாகப் பேச ஆரம்பித்தார் சோமசுந்தரம்.

புகுந்த வீட்டிற்கு வந்த இரண்டாவது நாளே, தங்கள் குடும்பத்துடன் அன்பாகப் பழகி, அவள் இயல்புடன் பொருந்திப் போனதைப் பற்றி அவர் ஆர்வத்துடன் கூற, ரியாவிடம் திரும்பிய ரிஷி, கண்களாலேயே அவளுக்கு நன்றி கூறினான்.

பிறகு பேசிக் கொண்டிருந்த போது, ''மரகதம் அத்தை ஏதாவது சொன்னா, அதைப் பெரிசா எடுத்துக்காதம்மா! அவங்க பொண்ணை ரிஷிக்கு கல்யாணம் செஞ்சுக் கலைன்னு அவங்களுக்கு ரொம்ப மனவருத்தம்.... அதான் அப்படிப் பேசுனாங்க..'' என்றார் சிவகாமி தாழ்ந்த குரலில்!

''புரியுதத்தை... நான் அவங்க பேசினதை தப்பா எடுத்துக்கலை.. அவங்களுக்கு ஏதோ கஷ்டம்.. அதை வார்த்தையாக் கொட்டிட்டாங்க... பரவாயில்லை...! ஆனா, மாமா எங்கவீட்டு மருமகன்னு என்னை விட்டுக் கொடுக்காமப் பேசினாங்க பாருங்க.. அதுவே எனக்கு பிடிச்சிருந்தது.. ஒரு பலம் மாதிரி இருந்தது.''

வெளிப்படையாகவும், புரிந்து கொள்ளும் தன்மையுடனும் பேசிய ரியாவை, சிவகாமியின் மனம் மிகவும் பாராட்டியது.. ரியாவின் மேல் இனம் புரியாத பிடிப்பும் வர, தங்கள் தேர்வு தப்பாகவில்லையென்று மனதிற்குள் மெச்சிக் கொண்டார் அவர்.

## 6



ப்ரியம்வதாவையே ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்த ரிஷிக்குள், புதிதாய் ஒரு சலனம்!

பிறகு இருவரும் தங்களின் அறைக்குச் சென்றபோது, தன் அறைக்கு செல்லத் திரும்பியவளை நிறுத்தினான் ரிஷி.

"தேங்க்ஸ்.. அப்பாவுக்கு சட்டுன்னு யாரையும் பிடிக்காது.. அப்படி பிடிச்சிப் போயிட்டா, அவங்க நிச்சயம் நல்லவங்களாத் தான் இருப்பாங்க! அப்பா, அம்மாவுக்குப் பிடிச்ச மாதிரி.. அவங்களுக்கு சந்தோஷம் தரும் விதமா நடந்துக்கிட்டதுக்கு ரொம்ப நன்றி! எனக்காக நீ ரொம்பவே கஷ்டப் படறேன்னு நினைக்கிறேன்.." அழுத்தமான குரலில் முடித்தான்.

சட்டென்று நிமிர்ந்தவள், "நான் எதையும் பெரிசா செஞ்சிடலை. நீங்க சொன்ன மாதிரி கஷ்டப்படவும் இல்லை! இயல்பா எல்லார்கிட்டயும் எப்படி இருப்பேனோ, அது மாதிரித்தான் இருக்கேன்.. மத்தபடி நீங்க நன்றியெல்லாம் சொல்ற அளவுக்கு நான் எதுவுமே பண்ணலை! அதோட, எனக்கு அவங்க ரெண்டு பேரையும் ரொம்பப் பிடிச்சிருக்கு!" கூறிவிட்டுத் தன் அறைக்குள் சென்றாள்.

அந்த நொடி, அவள் மீது முதன் முறையாக ஒரு வித மரியாதை உணர்வு எழுந்தது.

பொதுவாகவே, சிவகாமியையும், வித்யாவையும் தவிர, பெண்களில் வேறு ஒருவருமே அவனுடைய நன்மதிப்பைப் பெற்றதில்லை.



ஆறுவருடங்களில் முதன் முறையாக, தான் மட்டுமே இன்று அவனுடைய மரியாதைக்குரியவளாக இருப்பதை ப்ரியம்வதா அறியவில்லை.

அவன் கூறியதையே எண்ணியபடி, புதிதாய் போடப் பட்டிருந்த கட்டிலில் சென்று அவள் படுத்துக் கொள்ள, அந்த மெத்தை மென்மையாக அவளை உள் வாங்கிக் கொண்டது.

படுத்தவுடனே, அவள் மனதில் ஆயிரம் எண்ணங்கள் அலைமோதின.

மனதளவில், அவன் தன்னை அந்நியப்படுத்தியிருப்பதால் தான், தன்னுடைய இயல்பான நடவடிக்கைகள் கூட அவனுக்கு பெரிதாகத் தெரிவது புரிவதாய்..!

ஆனால் சோமசுந்தரத்தையும், சிவகாமியையும் யாராலும் வெறுக்க முடியாதென்று தோன்றியது.

தன்னிடம் அன்புடனும், அக்கறையுடனுமிருப்பவர்களை, நேசிக்க மட்டுமே முடியுமென்பதும் புரிந்தது.

ரிஷி, என்னதான் நினைத்தாலும், தான் அவனுக்காக நடிப்பதாகவே எண்ணினாலும், தன் இயல்பிலிருந்து முரண் படக்கூடாதென்ற முடிவுடன் உறங்க ஆரம்பித்தாள் அவள்.

மறுநாள் காலையில் எழுந்ததும், சிவகாமியிடம் கேட்டுக் கொண்டு, தோட்டத்திற்கு சென்று பூக்களைப் பறித்து எடுத்து வந்து பூஜையறையில் சூடிவிட்டு சமையலறைக்கு வந்தாள்.

அங்கு சிறிது நேரம் உதவி செய்துவிட்டு வந்தபோது, காபி குடித்துக் கொண்டிருந்த சோமசுந்தரம், "தோட்டத்தை சுத்திப் பாத்தியா ப்ரியா? இந்தக் காலை நேரத்துல ரொம்ப அழகா இருக்கும்.." என்று அனுப்பி வைத்தார்.

தோட்டத்திற்கு சென்ற ரியாவின் மனதை, இயற்கை அன்னை முழுவதுமாக ஆக்ரமித்துக் கொண்டாள்.

பூமியின் மௌனம் கலைத்து பறவைகள் பட்டிமன்றம் நடத்த ஆரம்பித்திருக்க, மலர்கள் புத்துணர்ச்சியுடன் முகம் மலர்த்தி சிரித்துக் கொண்டிருந்தன.

அந்த நிமிடம், யாரோ தன்னை உற்றுப் பார்க்கின்ற உணர்வு எழ, சுற்றிலும் சென்று அவள் பார்வை உயர்ந்தது.

மாடியறையின் ஜன்னலிலிருந்து அப்போது அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் தன்னை கவனிப்பதை உணர்ந்ததும், தானும் கீழே வருவதாக சைகை காட்டினான்.

இதுபோல் அவனுடன் இணைந்து இயற்கையை இயல்பாக ரசிக்க முடியுமாவென்ற யோசனையுடன், அங்கு காத்திருந்த போதுதான், மரகதம் பேசுவதை அவள் கேட்க நேர்ந்தது.

''சிவகாமி! புதுசா வந்திருக்கிற மருமகளுக்கு ரொம்ப இடம் குடுத்துடாதே! அப்புறம், உன்னை செல்லாக் காசாக்கிடுவா! இவளுங்களை எல்லாம் வைக்க வேண்டிய இடத்துல வைக்கணும்.. முதல்லேயே தட்டி வச்சா தான் அடங்கி இருப்பாளுங்க.. உன்னோட புருஷன் இப்பவே அவளுக்கு வக்காலத்து வாங்கறான்! நான் என் மருமகளை ரிங்மாஸ்டர் மாதிரியில்லே ஆட்டி வச்சிட்டிருக்கேன்.. என்கிட்டக் கத்துக்க!'' கனத்த குரலில் கூறினார்.

அதற்கு, சிவகாமி என்ன சொல்லப் போகிறாரோவென்று பயத்துடன் மூச்சடைக்கக் காத்திருந்த போது, மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

உடனே, ''அப்படியெல்லாம் செய்யக் கூடாதுக்கா! ப்ரியாவும் எனக்கு வித்யா மாதிரித்தான்! தன் வீட்டு மனுஷங்களை எல்லாம் விட்டுட்டு நம்மளையே நம்பி வந்திருக்கற பொண்ணை, நாம தானேக்கா பாசமாப் பாத்துக்கணும்.. நாம ஆசையா இருந்தா, அவங்களும் பாசமா இருக்கப் போறாங்க.. நம்ம பொண்ணு அவங்க மாமியார் வீட்டில் நல்லா இருக்கணும்னு நாம நினைக்கிற மாதிரிதானே, சம்பந்தி வீட்டிலயும் நினைப்பாங்க..'' மென்மையாகக் கூறினார் சிவகாமி.



மரகதத்தின் வார்த்தைகள், அவள் மனதில் பெரும் விதிர்ப்பை ஏற்படுத்தினாலும், சிவகாமி கூறியதைக் கேட்டவுடன், மனது பெரும் இதமானது.

மற்றவர்களைப் பற்றி நல்லதாகவே நினைக்காமல், எப்போதும் குறை கூறியபடி இருக்கும் அவரை நினைத்தால், என்ன பெண்மணி இவரென்ற ஆயாசமும், கோபமும் உள்ளே படர்ந்தன.

உடனே வேகமாக அவள் உள்ளே வந்து சோமசுந்தரத்துடன் பேசிக் கொண்டிருந்த போது, ரிஷி கீழே வந்தான்.

அவனைக் கண்டதும், ''என்னப்பா ரிஷி.. ப்ரியாவை அழைச்சிட்டு போய் பண்ணையெல்லாம் சுத்திக் காண்பிக்க வேண்டியதுதானே?'' சோமசுந்தரம் கேட்டார்.

தான் வருகிறேன் என்று கூறியும், அதை மதிக்காமல் உள்ளே வந்து, தன் தந்தையுடன் அவள் பேசிக் கொண்டிருந்தது, அவனிடம் சீற்றத்தை வரவழைத்தது.

''ம்.. அவ வந்தா அழைச்சிட்டுப் போறேன்..'' ஆர்வமில்லாதவனைப் போல் அவன் கூறியதுமே, அவன் கோபம் புரிந்தது.

மரகதத்தின் வார்த்தைகளுக்கு வடிகால் தேடி தான் உள்ளே வந்ததை மறைத்து, ''நான் ரெடி.. உங்களுக்காத்

தான் வெயிட் பண்ணினேன்... போகலாம்'' என்று எழுந்தாள் அவள்.

தோப்பிற்கு சென்றபோது, அங்கு கவிந்திருந்த மென்மையான வெளிச்சமும், அந்த சூழ்நிலையின் குளிர்ச்சியும், ரியாவிற்கு மிகவும் இதமாய்..!

தென்னந்தோப்பு முடிந்து மாந்தோப்பு வர, எல்லா மரங்களும் தங்கள் மடியில் காய்களை பசுமையுடன் சுமந்து கொண்டிருந்தன.

ரிஷியிடம், தனக்கு ஒரு மாங்காய் வேண்டுமென்று கேட்க அவளுக்கு கூச்சமாக இருந்தது.

அவள் யோசனையுடன் திரும்பியபோது, அவன் விழிகள் அவளிடமே பதிந்திருந்தன.

ஒரு காயைப் பறித்து கைக்குட்டையில் துடைத்துவிட்டு, ''மாங்கா வேணும்னா, வெளிப்படையா கேக்க வேண்டியதுதானே? அதுக்கு ஏன் இவ்வளவு தயக்கம்..?'' என்றபடி அவளிடம் கொடுத்தான்.

தன் மனதில் ஓடுகின்ற எண்ணங்களை அவன் அப்படியே வாசித்து விடுவது பதட்டத்தை ஏற்படுத்த, இறுகிப் போய் நின்றவளுக்கு தன் முகம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் முகம் என்பது தெரியவில்லை.

''என்ன யோசனை ப்ரியம்வதா..? எல்லார் கிட்டயும் இயல்பா இருக்கற நீ என்கிட்ட மட்டும் ஏன் வித்தியாசமா நடந்துக்கறே..? மாங்கா சாப்பிடலை..?''

அவன் கேட்ட வார்த்தைகள் எதுவுமே அவள் மனதில் பதியவில்லை.



முதன் முதலாக, அவனுடைய உதடுகளில் தன் பெயர் உச்சரிக்கப்பட்டது, அவளுக்குள் மெலிதான வீணையின் நாதம் போலக் கேட்டது.

கனவு கலைந்து நிமிர்ந்த ரியா, ஒரு மரத்தில் சோம்பலாக சாய்ந்தபடி, அவளையே நோக்கிக் கொண்டிருந்த ரிஷியைக் கண்டதும் ''சாரி.. போகலாமா..?'' என்றாள்.

வேகமாக முன்னால் வந்து, திரும்பிய அவள் கையைப் பற்றித் தடுத்தவனுடைய கரம் இரும்பாக இருந்தது.

என்னவென்று புரியாத ஒரு விநோத உணர்வு, அவளை ஆட்கொள்ள, ''ப்ளீஸ்...'' என்ற முணுமுணுப்புடன் தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள் அவள்.

''என் கேள்விக்கு பதிலே வரலையே.. அதான்!'' என்றபடி சட்டென்று அவள் கையை விட்டு விட்டான் ரிஷி.

அவன் கேள்வி அவளுக்குள் நெருடலாய் உட்புக என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

''வேறு யாரும் என்னருகில் வரும்போது, என் உணர்வுத் தந்திகள் இவ்வளவு வேகமாக மீட்டப்படுவதில்லை.. வேறு யாரும், ஒரு பார்வையிலேயே என் இதயத்தை புரட்டிப் போட்டதில்லை.. வேறு யாரும் ஒற்றைத் தொடுகையில் என்னை இந்த அளவு பலவீனப்படுத்தியதில்லை'' என்று எப்படி அவனிடம் கூறுவதென்ற தவிப்புடன், மௌனமாக இருந்தாள் ரியா.

அவளுடைய கெஞ்சும் பார்வையும், அந்தத் தொடுகையும், ரிஷியையும் மிகவும் பாதித்திருந்தன.

ஒரு மலரின் மென்மை அந்தக் கைகளில் தெரிய, அப்போதுதான் புதிதாய் பூத்த ஒரு பூவைப் போல் நிற்பவளை

எந்த விதத்திலும் நோகவிடக் கூடாதென்ற உறுதி, அந்த நிமிடம் மனதில் வந்தது.

பிறகு, இருவருமே தோப்பை மௌனமாக சுற்றிப் பார்த்த படி வர, அவரவர் மனதை ஆராய்ந்தபடியே சென்றதால், காட்சிகள் ரியாவினுள் பெரும் பதிவுகளை ஏற்படுத்த வில்லை.

வீட்டிற்கு வந்தபோது, மரகதம் ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்.

''நல்லா சுத்திப் பாத்தியாம்மா?'' என்ற சிவகாமியிடம் தலையசைத்து விட்டு தன் அறைக்கு சென்றாள் அவள்!

ஏனோ, மனதின் படபடப்பு அடங்கவே வெகு நேரமானது.

அன்று மாலை, தானே டிபன் செய்வதாகக் கூறியவள், குக்கரி கிளாஸில் பயின்றிருந்த மஷ்ரூம் கிரேவியும், பன்னீர் வறுவலும் தயார் செய்து வைத்துவிட்டு சப்பாத்திக்கு மாவு பிசைந்து வைத்தாள்.

பிறகு, சோமசுந்தரம் அவளை 'செஸ்' விளையாட அழைக்க, அவளும் ஆர்வத்துடன் விளையாட ஆரம்பித்தாள்.

அவருடன் விளையாடும் போது, தன் அப்பாவுடன் கழித்த பொழுதுகள் சட்டென்று நினைவில் படர்ந்தன.

சோமசுந்தரத்திடமும், தந்தையைப் போன்ற ஒரு வித ஒட்டுதலும், பாசமும் வந்தது.

பாதி விளையாட்டின் போதே ரிஷியும் வந்துவிட, இயல்பாக வந்து அவளருகில் அமர்ந்தவன், அவளுக்கு பதிலாக விளையாடி ரியாவை ஜெயிக்க வைத்து விட்டான்.



''ப்ரியா.. இனிமே நீ மட்டும்தான் விளையாடணும்.. இதென்ன கிரிக்கெட்டா? சப்ஸ்ட்டிடியூட் வெச்சு விளை யாடறதுக்கு..?'' சோமசுந்தரம் கேலி செய்தார்.

அப்போது அங்கு வந்த சிவகாமி, ''என் பையன்கிட்டத் தோத்துட்டீங்களா? உங்க மாமா எப்பவுமே இப்படித் தாம்மா.. ரிஷிகிட்டத் தோத்துப் போயிடுவார். அவன் தோத்துப் போறதை இவரால தாங்க முடியாது. சின்ன வயசில இருந்தே இப்படித்தான்!'' பெருமையுடன் கூறினார்.

''ஓஹோ.. இப்பதான் எல்லாம் புரியுது! மாமா பாவம்.. போனாப்போகுதுன்னு விட்டுக் கொடுத்தா, இவர் என்னவோ தானே ஜெயிச்சிட்ட மாதிரி காலரைத் தூக்கி விட்டுக்கறாரு! நான் எப்பவுமே மாமா கட்சிதான்ப்பா!''

ரியா சலுகையுடன் கூறவும், சூழ்நிலையே கலகலப் பானது.

''அம்மா, 'ஸேம் சைட் கோல்' போட்டு என்னை மாட்டி விட்டுட்டாங்க!'' என்று கூறிவிட்டு இரு கைகளையும் விரித்து, தோளைக் குலுக்கியபடி எழுந்த ரிஷியின் பின் னாலேயே டிபனைக் கொடுத்து அவளையும் அனுப்பி வைத்தார் சிவகாமி.

அவளைக் கண்டதும், அவன் இயல்பான கேலியுடன் புருவத்தை உயர்த்த, ''அத்தைதான் கொடுத்தனுப்பினாங்க..'' சிறு முறுவலுடன் டிபனைக் கொடுத்தாள்.

''மதியானம் உன்னை பேக்டரிக்கு அழைச்சிட்டுப் போக லாம்னு பாத்தேன் நீ ரெஸ்ட் எடுத்திட்டுருந்தே.. நாளைக்கு வரியா?''

''சாரி! நாளைக்கு நான் வர முடியாது... அத்தை சுமங்கலிப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு செஞ்சிருக்காங்க. சனிக்கிழமை வரவா?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''இல்லை.. அன்னிக்கு உங்க அப்பா வந்திடுவாங்களே! நாம ஊருக்குப் போயிட்டு வந்தப்புறம் போகலாம்'' என்று கூறிவிட்டு சாப்பிட ஆரம்பித்தான்.

பிறகு கீழே வந்தவள், சோமசுந்தரம் சீக்கிரமே சாப்பிட்டு விடுபவர் என்பதால் சப்பாத்தி செய்ய ஆரம்பித்தாள்.

அவர் சாப்பிடும்போதே அங்கு வந்த ரிஷி, ''என்னம்மா..? இன்னிக்கு 'பன்னீர் ஃப்ரை' ரொம்ப நல்லாயிருந்தது. எந்த ஹோட்டல்லேருந்து ஆர்டர் பண்ணினீங்க?'' என்றபடி மேசையில் இருந்ததையும் சாப்பிட ஆரம்பித்தான்.

''ஹோட்டல் ப்ரியம்வதா.. தென்காசியிலப் புதுசா ஆரம்பிச்சிருக்காங்க'' சிரிக்காமலே கூறினார் சோமசுந்தரம்.

''சும்மா கிண்டல் பண்ணாதீங்க! உனக்குப் பிடிக்கும்னு சொன்ன உடனே ப்ரியாதான் செஞ்சா!'' என்றார் சிவகாமி.

சப்பாத்தியுடன் வந்தவளைப் பார்த்து, ''நீயா செஞ்சே...?'' ரிஷி வியப்புடன் கேட்க, கூச்சத்துடன் ஆமாமெனத் தலையசைத்தாள் அவள்.

''என்ன ரிஷி? எப்படி என் மருமக.. இவ்வளவு நாள் உங்கம்மா நம்ம ரெண்டு பேரையும் நல்லா ஏமாத்தியிருக்கா! அதெல்லாம் ஹோட்டல்லதான் செய்வாங்கம்பா! இந்த மஷ்ரூம் சாப்பிட்டுப் பாரு! அப்புறம் ஹோட்டல் பக்கமே போக மாட்டே!'' தன் மனைவியைப் பார்த்தபடி கேலியாகக் கூறினார்.

சிவகாமியும் சிரித்துக் கொண்டே, ''நான்தான் இப்போ ப்ரியாகிட்ட எல்லாத்தையும் ஒப்படைச்சிட்டேனே.. இனிமே உங்களுக்கு எது வேணுமோ, அவகிட்டக் கேளுங்க! அதுக்காக அப்பாவும் பையனும் அவளை கிச்சன்லேயே போட்டு வாட்டி எடுத்துடாதீங்க!'' அவர் சலுகையுடன் கூறியது, ரியாவிற்கு பெரும் இதமாய்!



இந்த அருமையான தம்பதிக்கு மகனாகப் பிறக்க, ரிஷி கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

பிறகு, இரவு டின்னர் சாப்பிடும்போது, ''இதெல்லாம் எங்கே கத்துக்கிட்டே..?'' ஆச்சர்யத்துடன் கேட்டான் ரிஷி.

''குக்கரி கிளாஸிலக் கத்துக்கிட்டேன்... ஆனா, அத்தை, அம்மா மாதிரியெல்லாம் எல்லா சமையலும் ருசியா செய்யத் தெரியாது!'' மென்மையாகக் கூறிவிட்டுப் புன்னகைத்தாள்.

சின்னப் பெண்ணாக இருந்தாலும், தன்னை விட்டுக் கொடுக்காமல் அவள் பக்குவமாகப் பேசியது சிவகாமியை மிகவும் கவர்ந்தது.

மறுநாள், சுமங்கலி பூஜைக்காக அரக்கு நிறப்பட்டுப் புடவையில் உற்சவச்சிலை போல் தயாரான ரியா, பூஜை விமரிசையாக நடந்து முடிந்ததும், பிரசாதத்தை எடுத்துக் கொண்டு மாடிக்கு சென்றாள்.

சிவகாமி கூறியிருந்தபடி, ரிஷியின் கால்களில் விழுந்து, நமஸ்கரித்தபோது, உடனே ரிஷி வேகமாகப் பின்னடைந்தான்.

''நோ! எனக்கு இந்த ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் பிடிக்காதுன்னு அன்னிக்கே சொன்னேனே! மத்தவங்க மேல மரியாதை மனசுல இருந்தாப் போதும்.. அதோட, அப்பா அம்மாவுக்கு எதிர்லே கணவன் மனைவியா நடிச்சாப் போதும்.. தனியறையில எதுக்கு? மனசு விரும்பாத

எதையுமே மத்தவங்களுக்காக செய்யறது எனக்குப் பிடிக்காது..."

தன்னிடம் மட்டும் ஒதுக்கம் காட்டுகின்ற அவளின் போக்கை எண்ணி விரக்தியுடன் கூறிவிட்டு, சட்டென்று அலுவலக அறைக்குள் சென்று விட்டான்.

அவன் வார்த்தைகள் சுளீரென்று முகத்தில் அறைந்தன!

தாங்கள் இருவரும் நிழல் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பது, வேதனையாய் நிஜத்தின் நிதர்சனத்துடன், இதயத்தின் அடி ஆழம் வரை பரவியது.

என்ன செய்வதென்று புரியாமல் உறைந்து நின்றுவிட்டாள் அவள். மனம் மௌனமாகக் கதறியது!

*இன்று...*
*நீ*
*என் இதயத்தில்...*
*வார்த்தை*
*முட்களை*
*விதைக்கிறாய்!*
*வருத்தமாக*
*இருக்கிறது..!*
*எனக்கு*
*வலிப்பதால் அல்ல!*
*நீ*
*முதன் முதலில்*
*உன் பாதம் பதித்து*
*வரும்போது..*
*உனக்கு*
*வலிக்குமே என்று..!*



## 7



**ம**னதளவில் மிகவும் காயப்பட்டுப் போன ரியா, என்ன செய்வதென்று புரியாமல், செயலிழந்து ஒரு கணம் நின்றுவிட்டாள்.

பிறகு மெதுவாகத் தன் அறைக்கு சென்று கட்டிலில் அமர்ந்தபடி யோசித்தபோது, ரிஷியின் அன்புக்காக எத்தனை நாட்கள் சாதகப் பறவையாகக் காத்திருப்பதென்ற கேள்வி, மனதில் விசுவரூபமாய் எழுந்தது.

எதிர்காலமே இல்லாத இந்தக் காதல் தன் மனதில் ஏன் வந்ததென்ற வினாவும் கூடவே எழ, நெஞ்சம் சோர்ந்து போனது.

ரியா, அன்று முழுவதும் கீழேயே இருந்தாள்.

இரவும், அவன் வருவதற்கு முன்பே தலைவலி என்று கூறிவிட்டு சீக்கிரமே உறங்கச் சென்று விட்டவளை, கவலை பெரிதும் உடைத்தது.

நித்திரை மனத்திரையால் தள்ளுபடி செய்யப்பட, விழி மூடாதவளின் மனதிற்குள் ஆயிரம் சிந்தனை சிலந்தி வலைகள்!

திடீரென்று அறைக்கதவு தட்டப்பட்டு பிறகு மெதுவாகத் திறக்கப் பட்டதும், கண்களை இறுக மூடித் தூங்குவது போல் படுத்திருந்தாள் அவள்.

கட்டிலருகே வந்த காலடியோசை ஒரு நொடி நின்று விட, அவன் பார்வை தன் மேல் பதிந்திருக்கிறதே என்ற

உணர்வில், இதயம் முரசாய் கொட்ட, அந்த ஓசை அவளுக்கே கேட்பது போல்!

மெதுவாக அவனுடைய காலடியோசை தேய்ந்து பிறகு கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது.

என்ன விஷயமாக அவன் தன்னைப் பார்க்க வந்திருப்பான் என்ற கேள்வி, அவளை வெகு நேரம் விழித்திருக்க வைப்பதாய்!

காலையில் விழிப்பு வந்தபோது, இன்று ராமனாதன் வந்து விடுவாரென்ற நினைவே இதமாக இருக்க, அவசரமாக குளித்துத் தயாராகி கீழே வந்தாள் ரியா.

ரிஷியை எங்குமே காணவில்லை.

நேற்று, தான் கண்ணாமூச்சி ஆடியதைப் போல், இன்று அவனைக் காணவில்லையே என்ற யோசனையுடன் சமையலறையில் உதவிய போது, வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

உற்சாகத்துடன் ஓடி வந்தவள் ராமனாதனைப் பார்த்த சந்தோஷத்தில் ஓடிப் போய் அவரை அணைத்துக் கொண்டாள்.

அவளையே கூர்ந்தபடி பின்னால் வந்த ரிஷியை அவள் கவனிக்கவே இல்லை.

''அப்பா, அம்மா, ஸ்வேதா எல்லாரும் எப்படி இருக்காங்க.. சங்கரி வந்தாளா? என் செடிகளை எல்லாம் ஸ்வேதா பாத்துக்கறாளா? என்னை எல்லாரும் மறந்திட்டீங்க இல்லை?''

சிறு பிள்ளை போல் சலுகையுடன் படபடத்தவளை, அணைத்துக் கொண்ட ராமனாதனின் விழிகள் கலங்கின.



''எப்படிடா இருக்கே..? இங்கே எல்லார்கிட்டயும் நல்லபடியா நடந்துக்கறியா? இந்த இடம் உனக்குப் பழகிடுச்சா? சமர்த்தா இருக்கணும்.''

அவர் கூறும்போதே, சோமசுந்தரமும் சிவகாமியும் அவரை அன்புடன் வரவேற்றனர்.

இத்தனை நாட்கள், பெரிய மனுஷியைப் போல் வீட்டை கவனித்தவள், தன் தந்தையைக் கண்டதும், ஒரு குழந்தையாக மாறிய விதம் புரியாமல் வியந்து நின்ற ரிஷிக்குள், மெல்லிய சினம் படர்ந்தது.

தந்தையின் தோளில் வாஞ்சையுடன் சாய்ந்திருந்தவளை, பொறாமையுடன் அந்த இருவிழிகள் கூர்ந்ததை அவள் அறியவுமில்லை.

''சம்மந்தி! எங்களுக்கு வித்யா இல்லாத குறைய ப்ரியாதான் தீர்த்து வைக்கிறா! எனக்கு மாத்திரை குடுக்கறதிலேருந்து, என் கூட செஸ் விளையாடற வரைக்கும், எல்லாமே ப்ரியாதான்!''

சோமசுந்தரம் பெருமையும், நிறைந்த மனமுமாய் கூறியபோது, சமையலில் அவள் புதுப்புது விதமாக செய்து அசத்துவதைப் புகழ்ந்து கூறினார் சிவகாமி.

ராமனாதனுக்கு மிகவும் பெருமையாய்..!

டிபன் முடிந்த பிறகு, அவரைத் தங்களின் அறைக்கு அழைத்துச் சென்ற ரியா, ஒரு வார நடப்பை மகிழ்ச்சியுடன் விவரித்தாள்.

ரிஷி ஃபேக்டரிக்கு சென்றிருக்க, ராமனாதன் மாப்பிள்ளையைப் பற்றி மிகவும் பெருமையாகப் பேசினார்.

விழிகள் மட்டும் ஒரு வித சுவாரசியத்துடன் திரையில் தெரிந்த ரிஷியிடமே பதிந்து ரசித்துக் கொண்டிருந்தன.

திடீரென்று, யாரோ வந்து அவளருகில் அமர்வதை உணர்ந்து திரும்பினால், ரிஷிதான் மதியச் சாப்பாட்டிற்கு வந்திருந்தான்.

ஆனால், அவளைத் திரும்பியும் பார்க்காமல், "என்னப்பா.. ஆல்பம், சிடி ரெண்டும் நல்லா வந்திருக்கா?" என்றான்.

"ரொம்ப அருமையா எடுத்திருக்கான் ரிஷி! எப்ப வந்தது...?" சோமசுந்தரம் கேட்டார்.

"நேத்து நைட் தான் எடுத்துட்டு வந்து கொடுத்தார்.. என்ன மாமா.. ட்ரெய்ன்லே வந்தது டயர்டா இருக்குமே.. நல்லா தூங்கி ரெஸ்ட் எடுத்தீங்களா?" அக்கறையாகக் கேட்டான்.

"ம்.. நல்லா தூங்கினேன் மாப்பிள்ளை! இப்பதான் 'சிடி' பாக்க ஆரம்பிச்சோம்.. நீங்க திரும்பவும் போகணுமா மாப்பிள்ளை?"

"இல்லை மாமா! எல்லாம் சொல்லிட்டுதான் வந்திருக் கேன். மதியம் ரெஸ்ட் எடுத்துட்டு நைட் கிளம்ப வேண்டியது தான்.. எல்லாம் பேக் பண்ணனுமே..." என்று எழுந்தான்.

"போம்மா ரியா.. மாப்பிள்ளையோட துணியெல்லாம் எடுத்து வை..அவரை கவனி போ.." என்று மகளை அனுப்பினார் ராமனாதன்.

அவளைத் தொடர்ந்து அறைக்குள் வந்த ரியா, "சாரி! நான்.. நேத்து தலைவலின்னு சீக்கிரமே படுத்திட்டேன்.. வேணும்னே உங்களை அவாய்ட் பண்ணலை. ப்ளீஸ்.. தப்பா நினைக்காதீங்க.." என்றாள் மெதுவாக.



அவள் புறம் திரும்பாமலே ஜன்னலருகே சென்றவன், "இப்பவும் உங்கப்பா சொல்லித்தானே எனக்கு ஹெல்ப் பண்ண வந்தே! வேண்டாம்.. என் வேலைகளை நானே செஞ்சுப்பேன்.. எதுவா இருந்தாலும், மத்தவங்களோட வற்புறுத்தலுக்காக வரது எனக்குப் பிடிக்காது!" ஆழமான குரலில் கூறினான்.

தன்னை அவன் புரிந்து கொள்ளவில்லையே என்று மனம் அழுத அழுகையில், கண்ணோரங்கள் கசிந்தன.

அவனுடைய பேச்சும், பாராமுகமும் வேதனையைத் தர, உடனே கீழே இறங்கிச் செல்லாமல், தன் அறைக்கு சென்று சிறிது நேரம் அமர்ந்திருந்தாள்.

பரமஹம்ச நித்யானந்தரின் 'அக விதை'த் தொகுப்பில் வருகின்ற வாசகங்கள் நினைவிற்கு வந்தன.

**"ஓயாமல் ஓடும் மனக்குதிரையையும்.. பாடாய் படுத்தும் மனப்பட்டிமன்றத்தையும், ஒழுங்கிற்கு கொண்டு வராத வரை, உங்களுக்குள் நிம்மதி, நிதானத்திற்கு இடமில்லை.. முழுகவனத்தோடு உங்களின் மனப்பட்டிமன்றத்தை நீங்களே கவனியுங்கள்! ஓடும் குதிரை ஓய்வாகும்.. நிதானமாய் நிம்மதி பிறக்கும்!"**

அர்த்தமான வார்த்தைகளை அழகாகத் தூவி, அகம் மலரச் செய்யும் ஞான வரிகள் இதமாய் இதயம் வருடி உட்புகுந்தன.

தியானம் செய்ததில், மனம் கொஞ்சம் கொஞ்சமாக அமைதியைத் தத்தெடுத்தது.

பிறகு வெளியே வந்தபோது, படுக்கையின் மேல் சூட் கேஸும், ஏர்பேகும் அவன் துணிகளும் பரப்பி வைக்கப் பட்டிருக்க, அங்கு ரிஷியைக் காணவில்லை.

மெதுவாகச் சென்று, எல்லாவற்றையும் எடுத்து அவள் அடுக்கியபோது, அங்கு வந்த ரிஷியின் புருவங்கள் யோசனையுடன் நெறிந்தன.

பிறகு, "தேங்க்ஸ்.." என்றவன், தன் கையிலிருந்த "ட்ராவல் பேக்" ஒன்றை அவளிடம் தர, அதையும் எடுத்து வைத்தாள் அவள்.

அவன் முகம் எந்த உணர்ச்சிகளுமின்றி இறுகித் தெரிய, அமைதியான அந்த நிமிடங்கள், அவளுக்கும் பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தின.

அன்று மாலை, ராமனாதனுடன் பண்ணையை சுற்றிப் பார்த்துவிட்டு உற்சாகத்துடன் பேசியபடி திரும்பி வந்த போது, தங்கள் அறையிலிருந்து அவளையே ஊடுருவிய ரிஷியின் பார்வையில் பெரும் கூர்மை!

தன்னிடம் மட்டும் அவள் விலகியே இருப்பதும், மற்ற வர்களிடம் இயல்பாக ஒட்டிக் கொள்வதும், ஏனோ நரக வேதனையாய்!

ஆனால், அதற்கு தான் மட்டுமே காரணமென்பதையும், தன்னுடைய வார்த்தைகளும், செயல்களுமே அவளை தூர விலக்கி நிறுத்தியிருப்பதையும், அவன் உணரவேயில்லை.

8



மறுநாள் காலையில் ரயில் திருச்சியில் நின்றபோது, வெளியே எட்டிப் பார்த்த ரியாவிற்கு, தாய்நிலம் வந்த நிம்மதியும், மகிழ்வும் ஒருங்கே எழுந்தன.



மூவரும் வீட்டிற்கு சென்றபோது, கல்யாணக்களையுடன் வாசலில் பந்தலிடப்பட்டு வாழைமரம் கட்டப்பட்டிருக்க, வாசலில் ரெங்கோலி கோலம் அவர்களை அழகாக வரவேற்றது.

கார் நின்றவுடனே, சகுந்தலாவும், பக்கத்து வீட்டு மாமியும், அத்தை மீனாட்சியும் இருவரையும் வரவேற்று ஆரத்தி சுற்றி உள்ளே அழைத்தனர்.

ஸ்வேதா ஓடி வந்து ரியாவை இறுகக் கட்டிக் கொள்ள, பிரிவு அன்பை இன்னும் அதிகமாக்கும் என்பதை அவள் இன்றுதான் உணர்ந்தாள்.

ரிஷியைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றவள், அவன் பல்துலக்கி காபி குடித்தவுடன் ஓய்வெடுக்கும்படிக் கூறிவிட்டு வெளியே வந்தாள்.

பிறகு சங்கரியும் வந்துவிட, ஆல்பத்தை பார்த்தபடி ஒரே கூச்சலும் கும்மாளமுமாக அரட்டை அடித்துக் கொண்டிருந்த போது, சகுந்தலா அவளை எழுப்பி ரிஷியை கவனிக்கும் படிக் கூறி அனுப்பினார்.

தன் அறைக்குச் சென்றவள், அவனுக்குத் தேவையான வற்றை குளியலறையில் வைத்துவிட்டு வந்தபோது, அவன் விழித்திருந்தான்.

"குளிக்க வரீங்களா? பாத்ரூமிலே எல்லாம் ரெடியா இருக்கு" மெதுவாக அழைத்தாள்.

"ஏன்.. நீ குளிக்க வச்சி விடப் போறியா?" நக்கலாகக் கேட்டுவிட்டு எழுந்து செல்பவனுக்குள், என்ன கோபம் என்று புரியாமல் தவித்துத் திணறியது மனது!

வந்ததிலிருந்து சிவகாமிக்கும் சோமசுந்தரத்திற்கும் போன் செய்து பேசவில்லை என்பது நினைவு வர, உடனே போன் செய்து பேசினாள்.

அன்று முழுவதும் அரட்டையும் விருந்துமாகச் செல்ல, மூன்று மணிக்கே, ப்யூட்டி பார்லரிலிருந்து பெண்கள் வந்துவிட, ஸ்வேதாவின் அறையிலேயே தயாரானாள் ப்ரியம்வதா.

சந்தன நிறத்தில் உடல் முழுவதும் ஜரிகையிட்ட புடவையும், தங்க நகைகளும் அவளை ஓவியப்பாவையாய் அலங்கரித்திருக்க, ரிஷியும் கோட் சூட் அணிந்து அம்சமாக இருந்தான்.

அவளைக் கண்டதும் முதன் முதலாக கண்களால் சிரித்துப் பாராட்டியவனின் முகம் புன்னகையில் மலர்ந் திருந்தது.

உடனே வெட்கத்துடன் தலைகுனிந்த ரியாவின் கன் னங்கள், மெலிதாகச் சிவந்தன.

ரிசப்ஷன் விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.

ராமனாதனின் நண்பர்களும் ரியாவின் நட்பு வட்டமு மாக சேர்ந்து, மண்டபமே நிரம்பி வழிந்தது.

எல்லோரையும் ஒரே நேரத்தில் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சியுடனிருந்த போது தான், அவளுடைய தோழி ரமாவின் அண்ணன் விஷ்வா, ஒரு பொக்கேயுடன் அங்கு வந்தான்.

அதை ரியாவிடம் கொடுத்தவன், ரிஷியிடம் திரும்பி, "என்னங்க.. நாங்க எல்லாரும் இந்த தேவதைக்காக ரொம்ப



நாளாக் காத்திட்டிருந்தா, எங்கிருந்தோ தென்காசியி லேருந்து வந்து, கொத்திக்கிட்டுப் போயிட்டீங்க..?" பாதி உண்மையும், மீதி கேலியுமாக நேரிடையாகவே கேட்டு விட்டான்.

ஒரு நிமிடம் விதிர்த்துப் போன ரியாவின் பார்வை ரிஷியிடம் செல்ல, அப்போது அவனும் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வை, கோபம், ஆராய்ச்சி, ஆர்வம், கேள்வி என்று எல்லா உணர்வுகளையுமே சுமந்திருந்தது.

அவள் சட்டென்று குனிந்து கொள்ள, மனதில் பழைய ஞாபகங்கள் அணி வகுத்தன.

விஷ்வா தன்னை விரும்புவதாக ரமா கூறியதும், அவளிடம் கோபப்பட்டு மறுத்தவள், இனி அந்தப் பேச்சே கூடாது என்று கூறிவிட்டு, அதில் உறுதியாகவும் இருந்தது நினைவு வந்தது.

ரமாவும் அவளைப் புரிந்து கொண்டு தன் அண்ணனை அடக்கி வைத்திருக்க, இன்று அதை மனதில் வைத்து வன்மத்துடன் போட்டு உடைத்து விட்டான் அவன்.

ரிஷி தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வானோ என்றபடி யோசித்திருந்த போது, அவள் காதருகில் குனிந்தான் ரிஷி.

"இங்கே உன்னை விரும்பறவங்க நிறையப் பேர் இருக்கறதாலதான், அங்கே என்னைப் பாக்கப் பிடிக்கலை போலிருக்கு! இங்கே வந்ததிலேயிருந்து பளிச்சுன்னு மாறி,

முகத்தில ஒரு தேஜஸ் வந்திருக்கும் போதே நான் புரிஞ்சிட்டிருந்திருக்கணும்..'

அவன் கடுமையான குரலில் கூறவும், தவித்துப் போனாள், அவள்.

'நான் எந்தத் தப்பும் செய்யவில்லையே... கடவுளே... ரிஷி என்னைத் தப்பா நினைக்கும்படி ஏன் செய்தாய்...?' இறைவனிடம் இறைஞ்சினாள் அவள்.

அதன் பிறகு, ரிஷி அவள் பக்கமே திரும்பவில்லை.

ரிசப்ஷன் முடிந்து இரவு வீட்டிற்கு வந்து ஒப்பனையைக் கலைத்துவிட்டு, இரவு உடைக்கு மாறி தங்கள் அறைக்கு சென்றபோது, அவன் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

தரையில் பாயை விரித்து அவள் படுக்கச் செல்லவும், ''ஒரு நிமிஷம்..'' என்று தடுத்தவன், ''யார் அந்த விஷ்வா..? நான் வர்ஷாவப்பத்தி சொன்ன மாதிரி, நீயும் என்கிட்ட சொல்லியிருக்கலாம்.. மறைச்சிருக்க வேணாம்! பெண்களே இப்படித்தான் போலருக்கு.. மனசுக்குள்ளே பல ரகசியங்களை மறைச்சு வச்சு கடைசியில் ஆண்களைப் பைத்தியமாக்கிறதில் எல்லாருமே ஒரே மாதிரிதான்னு இப்பப் புரியுது!'' என்றான் ஏளனமான குரலில்.

மனதிற்குள், சுடுகின்ற பனித்துளியாய் அவன் வார்த்தைகள் இறங்க, ''நான் எதையும் மறைக்கலை.. விஷ்வா, ரமாவோட பிரதர்! அவன் என்னை விரும்பறதா ரமா சொன்னப்ப, நான் அதை ஏத்துக்கலை.. எனக்கு அந்த மாதிரி எந்த எண்ணமும் கிடையாதுன்னு அவகிட்ட உறுதியா



சொல்லிட்டேன். அதுக்கப்புறம் அவன் என் வழிக்கு வந்ததேயில்லை! அந்தக் கோபத்துல தான் அப்படி சொல்லிட்டான் போலருக்கு!'' தயக்கத்துடன் கூறினாள் அவள்.

அவன் மௌனமாக இருக்க, பிறகு அசதியில் அவள் திரும்பிப் படுத்து உறங்கி விட, ரிஷிக்கு மட்டும் குற்றவுணர்வினால் உறக்கமே வரவில்லை.

தான் பேசியது அவளைக் காயப்படுத்தியிருக்குமோ வென்று தோன்ற, அந்த விஷ்வாவிடம் தான் ஏன் தேவையின்றிப் பொறாமைப் பட்டோம் என்பதற்கு, அவனிடம் விடைதான் இல்லை.

சிறு குழந்தை போல் அவள் உறங்குவதைக் கண்டபோது, அன்று தங்கள் வீட்டில் கண்களை இறுக மூடி அவனைப் புறக்கணித்தபடி, ரியா படுத்திருந்த கோலம்தான் நினைவிற்கு வந்தது.

தன்னைப் பார்க்க விரும்பாமல் தான், அவள் உறங்குவது போல் நடித்தபடி படுத்திருந்தாளோ என்ற கோபம். அவனை ஆட்டிப் படைத்திருந்த நேரத்தில், அது குறையும் போது, இப்படி ஒரு உரசல் நிகழ்ந்து அவனை அலைப்புறச் செய்தது.

மறுநாள், அனைவரும் மலைக்கோட்டைக்கு சென்றிருந்தனர்.

ரிஷியும், ரியாவும் வேகமாக ஏறிவிட, இருவரும் மற்றவர்களுக்காக காத்திருந்த போது, ''நேத்து.. நான் நடந்துக்கிட்டது..ம்.. நான் உன்னை சந்தேகப்படலை.. ஏதோ டென்ஷன்.. அதான்!'' தயக்கத்துடன் கூறினான்.

அவனைப் புரிந்து கொண்டவள், "நான் தப்பா நினைக் கலை.. யாரா இருந்தாலும், அவன் பேசினதுக்கு அப்படித் தானே நினைப்பாங்க.. என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு.. தேங்க்ஸ்!" சிறுமுறுவலுடன் இதமாக முடித்தாள்.

தாயுமானவரிடம், ரிஷியை ஒரு நாளும் பிரியாத வரம் வேண்டினாள் அவள்.

ரியா மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமென்று அவன் வேண்டிக் கொள்ள, இருவர் மனமும் அன்று மற்றவர் களுக்காக உருகிப் பிரார்த்தித்தது.

அன்றிரவு, இருவரும் ஊருக்குக் கிளம்பும் போது, பிரிவின் சுமை கனமாய் அவள் இதயத்தை கசக்கி பிழிய, தாயின் கரம் பிரிந்து முதல் நாள் பள்ளிக்கு செல்கின்ற குழந்தையாய், அழ ஆரம்பித்தாள் ரியா.

அவள் முகத்தை விட்டு ஒரு நொடியும் அகலாத ரிஷியின் விழிகளும், முகமும் கடினத் தன்மையுடன் இறுகின.

மூன்றுபேரும் ஸ்டேஷனுக்கு வந்து அவர்களை வழியனுப்ப, ரயில் கிளம்பியதும், ரிஷி அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

தன்னுடன் ஊருக்கு வர விருப்பமின்றியே அவள் அழுவதாக கற்பனை செய்திருந்த அவனுடைய கையளவு மனது பெரும் கோபத்தின் பிடியில் சிறைப்பட்டிருந்தது.

தென்காசிக்குச் சென்றபோது, உறங்கி எழுந்தும், ரியாவின் கண்கள் சிவந்து கண்ணிமைகள் வீங்கி இடுங்கி யிருந்தன.



சோமசுந்தரமும், சிவகாமியும் அவளை ஆவலுடன் வரவேற்றனர்.

அவளுடைய முகத்தைக் கண்டவுடன், "ராத்திரி ரொம்ப அழுதியாம்மா ப்ரியா..? அம்மா வீட்டை விட்டுப் பிரியறப்போ எல்லாப் பெண்களுமே இப்படித்தான்! நான் அந்தக் காலத்துல ஒரு மாசம் வரைக்கும் அழுதிருக்கேன் தெரியுமா? கொஞ்ச நாள் போனா உனக்கும் பழகிடும்.." ஆதரவாகக் கூறிவிட்டு வாஞ்சையுடன் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டார் சிவகாமி.

"ஆமாமாம்.. இவ அழுத அழுகையில் வீடே வெள்ள மாகி நான் 'போட்'லதான் வெளியே போவேன்.." கேலி செய்தார் சோமசுந்தரம்.

தன் தாயையும், ரியாவையும், விநோதமான பார்வையுடன் அளவிட்டு விட்டு, யோசனையுடன் உள்ளே சென்றான் ரிஷி!

மனதிற்குள் குழப்ப மேகங்கள் மையம் கொண்டிருந்தன... ப்ரியம்வதாவின் அழுகை அவனுக்குள் சடசடவென்று கோபத்தூறலாய் பரவியது.

9



அந்த வாரம் முழுவதுமே, ரிஷி ஒரு வித ஒதுக்கத் துடனும், இறுக்கத்துடனுமே இருந்தான்.

ஆனால், அதற்கான காரணம் புரியாமல் ரியாதான் தவித்துப் போனாள்.

இடையில் ஒரு நாள், மரகதம் அத்தையும், அவருடன் ஒரு இளைஞனும் வந்திருந்தனர்.

''இவன்தாம்மா மரகதம் அக்காவோட கடைசிப் பையன் மாணிக்கம்!'' என்று சிவகாமி அவளிடம் அறிமுகப்படுத்த, பவ்யமாக வணங்கியவனைப் பார்த்தால், ஏனோ பரிதாப மாக இருந்தது.

அன்று மதியம் சோமசுந்தரத்துடன் வெகுநேரம் தனிமை யில் பேசிவிட்டு வந்த மரகதத்தின் முகம், அழுதழுது சிவந்திருந்தது.

ரிஷி அவர்களிருவரையும் கண்டு கொள்ளாதது, என்னவோ போலிருந்தது.

அன்று மதியம் சிவகாமியிடம் அது பற்றிக் கேட்க அவருடைய அறைக்கு சென்றிருந்த போது, அந்த மாணிக்கம் அவருடன் பேசிக் கொண்டிருந்தான்.

''நான் தப்பு செஞ்சவன்தான் அத்தை.. இல்லைன்னு சொல்லலை! ஆனா இப்ப அதெல்லாம் எவ்வளவு பாவம்னு உணர்ந்து திருந்திட்டேன்.. இனிமே என்னால திருட்டுங்கற ஒரு தப்பை செய்யவே முடியாது... ஜெயில் வாழ்க்கை என் மனசை மாத்தி புடம் போட்ட மாதிரி ஆக்கிடுச்சு!''

சோகமாக மன்னிப்பை யாசிப்பவன் போல் அவன் பேசியது, ரியாவின் மனதில் ஆழமாய் தைத்தது.

அறைவாசலில் அவளைக் கண்டதும், ''நீங்க ஏன் அங்கேயே நின்னுட்டிருக்கீங்க.. உள்ளே வாங்க! நான்.. தோ கிளம்பிட்டே இருக்கேன்!'' என்று எழுந்தான் அவன்.



அவன் சென்றபிறகு, மனதில் உறுத்திக் கொண்டிருந்த கேள்வியை மறைக்காமல் கேட்டு விட்டாள் அவள்.

''ஏன் அத்தை.. உங்க பையன் மரகதம் அத்தை கூடவும் அவங்க பையனோடவும் பேசவே மாட்டேன்றாரு..?''

''அதுவாம்மா! நாங்க முதல்லே டெல்லியில் இருந் தோம்.. அப்புறம் இங்க வந்து பேக்டரியை ஆரம்பிச்சப்ப, மரகதம் அக்கா குடும்பமே எங்களோடதான் இருந்தாங்க.. அப்போ அவங்க என்கிட்ட சண்டை போட்டுட்டு, ஏதாவது என்னை குறை சொல்லிட்டே இருப்பாங்களா.. அதனால ரிஷிக்கு அவங்களைப் பிடிக்காமலே போயிடுச்சி.. அது இன்னும் தொடருது..

''அதோட, நேர்மையா இருக்கணும்னு நினைக்கிறவன் அவன்.. மாணிக்கம் செஞ்ச தப்பு, அவனையும் பிடிக்காம செஞ்சிடுச்சி! அவனுக்கு ஒருத்தரைப் பிடிக்காமப் போயிருச் சின்னா, தன்னை மாத்திக்கவே மாட்டான். நானும் எவ் வளவோ சொல்லிப் பாத்துட்டேன்..'' வறண்ட முறுவலுடன் கூறினார் சிவகாமி.

ஒரு கணம் ரியாவின் மனம் விதிர்த்துப் போனது.. தன்னை யும் அவன் மனதார ஏற்றுக் கொள்ளவே மாட்டானோ வென்ற பயம் வந்தது.

அன்றிரவு, மாத்திரைகளைக் கொடுத்து விட்டு, சோமசுந் தரத்துடன் பேசிக் கொண்டிருந்த போது, மாமனாரிடம் நேரடியாகவே கேட்டு விட்டாள் ரியா.

''மாமா.. நான் அதிகப் பிரசங்கித்தனமா கேக்கறேன்னு நினைக்க வேண்டாம்... மரகதம் அத்தை பாவம்.. அழு

திட்டே இருந்தாங்க.. அவங்க பிரச்சனையை நம்மால தீர்த்து வைக்க முடியாதா? அவங்க பையனைப் பாத்தாலும் பாவமா இருக்கு...''

''ம்.. வினை விதைத்தவன் அதை அறுத்து தானே ஆக ணும்! பெரிய மகனுங்க ரெண்டு பேரும் ஒழுங்கா விவசாயம் பாக்குறாங்க.. பொண்ணுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை.. இவனுக்கு ரொம்ப செல்லம் குடுத்து கெடுத்து குட்டிச் சுவராக்கி வைச்சிருக்கு இந்த அக்கா..

''சின்ன வயசுல ரிஷி செய்யாத ஒரு தப்பை அவன் செஞ்சதா சொல்லி, அவன் மேல திருட்டுப் பட்டம் கட்டினவதான் என் அக்கா.. ஆனா, நான் உண்மையைக் கண்டு பிடிச்சி உடனே அவங்க குடும்பத்தை கிராமத்துக்கு அனுப்பி வச்சிட்டேன்...

''உண்மையில, அப்ப எங்க மாமா பையில இருந்த பணத்தைத் திருடினது இந்த மாணிக்கம்தான்... ஆனா தன் மகனைப் பத்தி தெரிஞ்சிக்காம நம்ம ரிஷி மேல அந்தப் பழியத் தூக்கி போட்டதுலயிருந்து எங்க எல்லாருக்குமே அக்கா மேல ஒரு பிடிப்பு விட்டுப் போச்சு...

''எப்பவாவது வர போறதோட சரி.. என் கடமைன்னு தீபாவளி பொங்கலுக்கு சீர் மட்டும் அனுப்பிடுவேன்.. மாணிக்கம், தான் வேலை பாத்த கம்பெனியிலேயே பணம் கையாடல் பண்ணிட்டு ஜெயிலுக்குப் போயிட்டு இப்பதான் திரும்பி வந்திருக்கான்...

''திருந்திட்டேன்னு ஒரே அழுகை! நம்ம பேக்டரியில வேலை வேணுமாம்.. எப்படி நம்பறது, சொல்லு!'' கோபத் துடன் கேட்டார்.



சிறிது நேரம் கழித்து தயக்கத்துடன் நிமிர்ந்தவள், ''ஏன் மாமா? மரகதம் அத்தை செஞ்சது பெரிய தப்புதான்! ஆனா தப்பு செஞ்சவங்க திருந்தவே கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா? அவரைப் பாத்தாலும் பாவமா இருக்கு... ஒரு வேளை அவர் திருந்தியிருந்தா, நம்ம பேக்டரியிலேயே வேலை குடுக்கலைன்னா, மத்தவங்க யாரு அவரை நம்பி வேலை தருவாங்க.. நீங்க பெரியவங்க! உங்களுக்குத் தெரியாததில்லை...

''எனக்கென்னவோ அவருக்கு வேலை போட்டுக் குடுத்துட்டு, மேனேஜரையோ, இல்லை, அவருக்கு மேல் அதிகாரியா இருக்கறவரையோ, மாணிக்கத்து மேல ஒரு கண் வச்சிக்க சொல்லி சொன்னா, எப்படி நடந்துக்கறாருன்னு தெரிஞ்சுக்கலாம் இல்லையா? நான் சொல்றது தப்புன்னா என்னை மன்னிச்சிடுங்க மாமா!'' மெதுவாகக் கூறினாள்.

யோசனையுடன் அவள் கூறியதைக் கேட்டிருந்தவர், ''இதுல ரிஷிதாம்மா முடிவு பண்ணனும்.. அவன் கிட்டப் பேசிப் பாக்கறேன்.. ஓகேன்னா பாப்போம்!'' முடிவாகக் கூறினார்.

அன்றிரவு, தந்தையுடன் பேசிவிட்டு தங்களின் அறைக்கு வந்த ரிஷி, ''என்ன... ஸ்ட்ராங் ரெகமெண்டேஷன் போல ருக்கு! அப்பா மாணிக்கத்தை வேலைக்கு சேத்துக்கலா மான்னு என் அபிப்ராயத்தைக் கேட்டாங்க.. உன் விருப் பம்னவுடனே என்னால ஒண்ணும் சொல்ல முடியலை.. ஏன்னா, முதன் முதலா உன்கிட்ட இருந்து ஒரு ஆப்ளி கேஷன் வந்திருக்கு.. மறுக்க முடியலை!'' கூறிவிட்டு சட்டென்று குளியலறைக்குள் சென்றுவிட்டான்.

அவளுடைய "தேங்க்ஸ்.." என்ற வார்த்தைகள், காற்றின் செவிகளுக்கு மட்டுமே கேட்டன.

மறு வாரமே அவனை வேலையில் வந்து சேரும்படி சொல்லி சோமசுந்தரம் மரகதத்திடம் கூறியபோது, நெஞ்சம் நிறைந்த நன்றியுடன் அவர் ஊருக்குக் கிளம்பிச் சென்றார்.

அந்த வாரக் கடைசியில் வித்யாவின் ஊருக்கு சென்று விட்டு பிறகு அங்கிருந்து கொடைக்கானலுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தான் ரிஷி.

வித்யாவின் வீடு, பழனியைத் தாண்டி ஒரு கிராமத்தில் இருந்தது. அங்கு டவுனில், சுதாகர் பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்சும், ஹோட்டலும் நடத்திக் கொண்டிருந்தார்.

அவர்களின் கிராமத்தை அடையும்முன்பே அவன் செல்லில் தகவல் தர வாசலிலேயே அனைவரும் காத்திருந் தனர்.

காரிலிருந்து இறங்கியதுமே, வித்யா ஓடி வந்து அவளை அணைத்துக் கொள்ள, அவளுடைய மாமியார் ஆரத்தி எடுத்து அவர்களை வரவேற்றார்.

உள்ளே சென்றதும், அவள் பெரியவர்களின் காலில் விழுந்து நமஸ்கரிக்க, பெரியவர்களிருவரும் அவர்களை ஆசீர்வதித்தனர்.

"உனக்கு தென்காசி பழகிடுச்சாம்மா! உங்க அம்மா அப்பா எப்படி இருக்காங்க..?" அன்புடன் விசாரித்தார் சுதாகரின் தாய் விசாலம்.

"ம்.. எனக்கு தென்காசி ரொம்பப் பிடிச்சிருக்கும்மா.. திருச்சியில அப்பா அம்மா தங்கை எல்லாரும் நல்லாருக்



காங்க.. நீங்கதான் கல்யாணத்துக்கு வரலை.. வித்யா அண்ணி உங்களைப் பத்தி ரொம்பப் பெருமையா சொன் னாங்க.."

"உன்னை பத்தியும் வித்யா நிறைய சொன்னா... எங்க அண்ணி மாதிரி குணத்துலயும் அழகிலயும் சிறந்தவங் களைப் பாத்ததில்லைன்னு சொன்னா... இங்கே இவருக்கு பாரிச வாயு தாக்கி நடக்க முடியாமப் போயிட்டதாலே, நான் இவரைத் தனியா விட்டுட்டு எங்கயுமே வரதில்லை.. ஆளுங்க எவ்வளவு பேரு இருந்தாலும் நாம பாக்கற மாதிரி ஆகாதே!"

"அம்மா.. நீங்க சொல்றது ரொம்ப சரி! என் ஃப்ரெண் டோட அப்பாவுக்கு இது மாதிரி ஆனப்ப, கேரளத்து எண் ணெய் சிகிச்சை முறையில வீட்டுக்கே ஆளை வரவழைச்சு மசாஜ் பண்ணினதிலே நல்ல பலன் இருந்தது. நான் அவ கிட்ட கேட்டு அட்ரஸ் வாங்கித் தரேன்.. அத செஞ்சு பாருங் களேன்.. கூடிய சீக்கிரமே அப்பா எழுந்திரிச்சி நடப்பாங்க!" பரிவுடன் கூறினாள்.

"அப்படி மட்டும் நடந்துட்டா, எனக்கு அதை விட வேற என்னம்மா சந்தோஷம் இருக்க முடியும்.. நீ கேட்டு சொல்லு.. முயற்சி பண்ணிப் பார்ப்போம்" என்றார் ஆர்வத்துடன்.

உடனே அங்கிருந்து போன் செய்து தன் தோழி பூங் கொடியிடம் அந்த விலாசத்தையும், போன் நம்பரையும் வாங்கித் தந்தாள் ரியா.

மற்றவர்களின் மேல் அனுசரணையும், பரிவுமாகப் பேசிய ரியாவை, வித்யாவின் மாமியார் விசாலத்துக்கு ஏனோ உடனே பிடித்துப் போனது.

அப்போது, ஆகாஷைத் தூக்கிக் கொண்டு வித்யா வர, ஆவலுடன் அவனை வாங்கிக் கொண்டவள், முத்தம் கொடுத்தபடிப் பாசமாகக் கொஞ்ச ஆரம்பித்தாள்.

உடனே வித்யா தன் மாமியாரிடம், ''அண்ணிக்கு ஆகாஷை ரொம்பப் பிடிக்கும் அத்தை! கீழே இறக்கி விடவே மாட்டாங்க.. இவனும் அத்தைகிட்ட ரொம்ப ஒட்டிப்பான்'' பெருமையுடன் கூறினாள்.

''ஏம்மா? பேசாம உடனே ஒரு குழந்தையைப் பெத்துக்க.. அதெல்லாம் காலாகாலத்துல நடந்தாதான் வளக்கறது சுலபம்!'' என்றவர் கணவரை கவனிக்கச் சென்றார்.

ரிஷியும், சுதாகரும் அவர்களுடைய அறையில் பேசிக் கொண்டிருக்க, ரியாவை அங்கு அழைத்துச் சென்றாள் வித்யா.

''அண்ணா! அண்ணிக்கு குழந்தைன்னா ரொம்பப் பிடிக்குமாம்.. சீக்கிரமே ஆகாஷுக்கு ஒரு தம்பிப் பாப்பா ஏற்பாடு பண்ணுங்க.. அத்தையும் அதான் சொன்னாங்க'' குறும்புடன் கூறினாள் வித்யா.

உடனே கைகளை விரித்துத் தோள்களைக் குலுக்கிய ரிஷி, ''அதை எல்லாம் உங்கண்ணி கிட்டக் கேட்டுக்க.. அது அவ டிபார்ட்மெண்ட்..'' கேலியாகக் கூறிவிட்டு, அர்த்தமுள்ள ஒரு பார்வையால் ரியாவை செயலிழக்கச் செய்தான்.

அந்தப் பார்வையின் பொருள் புரியாவிட்டாலும், முகம் சிவந்து விட மௌனமாகத் திரும்பிக் கொண்டாள் அவள்.

தங்கையின் முன் ரிஷி நடிப்பதற்காகக் கூறினாலும், அவனுடைய பேச்சின் பொருள், அவளை விதிர்க்கச் செய்வதாய்..!



அன்றிரவு, ரியா சீக்கிரமே உறங்க ஆரம்பிக்க, ரிஷி தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தபோது, ஆழ்ந்து உறங்கும் அவளின் அழகான வெகுளித்தனமான முகம் அவன் நெஞ்சினுள் நிறைந்தது.

மெதுவாக அவளை நெருங்கி, தலையை வருடி முன்னுச்சியில் இதழ்பதித்து விட்டு, உடனே தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு உறங்க ஆரம்பித்தவனுக்குள் பல உணர்வுகள்!

தூரத்து வெண்ணிலவை ரசிப்பது போல், அவளையும் தூரத்தில் நின்று ரசித்தது மனது.

இது எதையுமே அறியாத ரியா, நிச்சலனமாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

மறுநாள், காலையில் வித்யாவின் நாத்தனார் யமுனா ஊரிலிருந்து வந்திருந்தாள்.

ஹாஸ்டலில் தங்கிப் படிப்பதால், ஞாயிறன்று வந்தவள், அவளிடம் இயல்பாகப் பழக ஏனோ அந்த வெகுளிப் பெண்ணிடம் உடனே ஒரு ஒட்டுதல் வந்தது ரியாவிற்கு!

அவள் திருச்சி என்றதும், யமுனாவின் விழிகள் ஆர்வத்துடன் பளபளக்க அந்த ஊரைப் பற்றி ஆவலுடன் விசாரித்தாள் அவள்.

பழனி முருகன் கோவிலுக்குச் சென்று சாமிதரிசனம் செய்து விட்டு பிரகாரத்தில் அமர்ந்திருந்த போதுதான், அவள் காட்டிய அதிகப்படியான ஆர்வத்திற்கான அர்த்தம் விளங்கியது.

யமுனா தன்னுடன் படிக்கின்ற மாணவனை விரும்புவ தாகவும், அவனுடைய சொந்த ஊர் திருச்சி என்றும், அந்தப் பையனைப் பற்றி மெதுவாக விசாரிக்க வேண்டுமென்றும் வித்யா கூறினாள்.

''நான் எங்கப்பாவை விட்டு விசாரிக்கறேண்ணி.. நீங்க கவலைப்படாதீங்க! அந்தப் பையனோட பேர், அட்ரஸ் குடுங்க.. அவங்களுக்கே தெரியாம விசாரிக்கச் சொல்ல லாம்'' தாழ்ந்த குரலில் கேட்டாள்.

மறுநாள் அவள் கிளம்பும் போது மறக்காமல் எல்லா வற்றையும் வாங்கிக் கொண்டு கிளம்பும்போது, இரு வருக்கும் பட்டுச் சேலையும், பேண்ட், சட்டையும் வைத்துக் கொடுத்தார் விசாலம்.

''ரிஷி.. ப்ரியாவை நல்லா பாத்துக்கப்பா! நல்ல பொண்ணா இருக்கா.. குழந்தை மாதிரித் தெரியறா! நம்ம வீட்டுக்கு வந்த பொண்ணு, எதுக்கும் கலங்கக் கூடாது.. நீதான் அவளைப் பாத்துக்கணும்..'' பாசத்துடன் விடைகொடுத்தார் விசாலம்.

எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பியவள், ஆகாஷை முத்தமிட்டு விட்டு, ''அண்ணியை அடிக்கடி ஊருக்கு அழைச்சிட்டு வாங்கண்ணா!'' என்று கூறி விடை பெற்றாள்.

அங்கிருந்து காரில் கிளம்பி இருவரும் கொடைக் கானலுக்கு சென்றனர். செல்லும்போதே ரிஷியின் முகம் பெரும் யோசனையுடனிருந்தது.

திடீரென்று திரும்பியவன், ''என்ன சொக்குப் பொடி போட்டே...? எல்லாரையும் கவர்ந்து இழுத்திட்டே! வித்யா



மாமியார் ரொம்ப கெடுபிடி டைப்.. அவங்களையே கவுத்திட்டே..'' கண்ணோரங்கள் கேலியாக சுருங்கக் கேட்டுவிட்டு அவளையே கூர்ந்து நோக்கினான்.

''நான் பொடியெல்லாம் போடலை.. இயல்பா இருந்தேன்... அவ்வளவுதான்!''

மெதுவாகக் கூறிவிட்டு ஜன்னல் வழியே பார்வையைப் பதித்தாள் ரியா.

அவள் காதோரம் சட்டென்று குனிந்தவன், ''ஏன்னா.. எனக்கும் கொஞ்சம் மிச்சம் வெச்சுக்கோ, அந்த சொக்குப் பொடியை! தீர்ந்து போயிடப் போகுது..'' ஆழமான குரலில் கூற, அந்தக் குரலில் இருந்தது சினமா இல்லை கிண்டலா என்று இனம் பிரிக்க அவளால் முடியவில்லை.

''உனக்கும் கொஞ்சம் சொக்குப் பொடி போடுகிறேன்.. என்னிடம் மயங்குவாயா..?'' என்று கேட்டால், அவன் முகம் எப்படி மாறும் என்ற எண்ணத்துடன், பின்புறம் கண்மூடி சாய்ந்து கொண்டாள்.

மனம் பெரிதும் சஞ்சலமாக இருந்தது.

ஆனால் அவளைக் கண்ட ரிஷிக்கோ, மனம் பெரும் சீற்றமாய்..!

தன்னைத் தவிர, மற்ற அனைவரிடமும் அவள் இயல்பாக ஒட்டிக் கொள்வதும், உயிராகப் பழகுவதும், பொறாமை எனும் தீயை வளர்த்தது.

மலை ஏற ஆரம்பித்த உடனே, சிலிர்ப்பாய் வருடிய குளிர்ச்சியும் சாரலும், அவளை விழிக்க வைக்க, பச்சைப் பசேலென்ற இயற்கையழகில் அவள் மனம் ஒன்றியது.

காணும்போதே மெய் மறக்கச் செய்யும் மலையழகும், பசுமையும் அவளுக்குள் பெரும் உற்சாகத்தை விதைத்து உள்ளத்தை கொள்ளை கொண்டன.

கொடைக்கானல் சென்றடையும் போது மதியமாகி விட சாப்பிட்டு விட்டு தாங்கள் முன்பதிவு செய்திருந்த காட்டேஜுக்கு அவளை அழைத்துச் சென்றான் ரிஷி.

அந்த ரிசார்ட்டின் ரிசப்ஷனுக்கு சென்று காட்டேஜ் சாவியை வாங்கிக் கொண்டு திரும்பியபோது, அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு 'போன்சாய்' ஆலமரத்தை பார்த்ததும், அவள் முகம் சட்டென்று சுருங்கி இறுகியது.

''ஏன்.. என்னாச்சு..?'' கூர்மையாகக் கேட்ட ரிஷியிடம் ''ஒண்ணுமில்லை'' என்றாள் அவள்.

வரிசையாக அமைக்கப்பட்டிருந்த குடில் போன்ற காட்டேஜுக்கு செல்லும் வழியில் நடந்து கொண்டே, ''ஊஹூம்.. நான் நம்ப மாட்டேன்... ஒண்ணுமில்லாததுக்கு உன் முகம் ஏன் இப்படி மாறணும்?'' கேள்வியாக வந்தது அவன் குரல்.

''இல்லை.. எனக்கு போன்சாய் மரங்களைப் பாத்தா ரொம்பக் கஷ்டமா இருக்கும்... ஒரு பெரிய மரமா, விடியலோட கைகோர்த்து பூமியில விதைச்சு வேரூன்றி, வானம் பார்த்துக் கிளை விரிக்க வேண்டிய ஒரு விருட்சத்தை, சுருக்கி அரூபமாக்கிட்ட மாதிரித் தோணும்...''

சட்டென்று அவனுக்குள் ஒரு வித ஆச்சர்யம் பரவியது. தானும், முன்பு ஒரு முறை இது போல் எண்ணியது நினைவு வந்தது.



''அப்புறம்.. ப்ளீஸ் சொல்லு! நான் கூட இதோ மாதிரி முன்னாடி யோசிச்சிருக்கேன்..'' ஆர்வத்துடன் ஊக்கினான்.

அவன் யாரிடமும் 'ப்ளீஸ்' என்று கெஞ்சியதில்லை என்பதை அவன் முகமே கூறியது.

''ம்.. விண்ணளாவ வளர்ந்து.. கோடி மலர் பூத்துக் குலுங்க.. பழங்கள் பல கொடுத்து பறவைகளின் பசியாற்றி.. காதலிக்க வர்ற சுதந்திரக் காற்றோட அழகாக் கைகோர்த்து.. துணை நட்பாய் பல மரங்களோட வளர வேண்டிய ஒரு விசுவரூபியை, அதோட வேர்களை நறுக்கி, கருப்பையை சுருக்கி, சிறு தொட்டிக்குள்ளே அடைச்சி வைக்கிற அவலம், மனசைக் கசக்கிப் பிழிஞ்சிடும்..'' மென்குரலில் கூறினாள் ரியா.

அவளுடைய மென்மையான மனதை முதன் முறையாக உணர்ந்த ரிஷிக்குள்ளோ பெரும் சலனம்!

ஒரு மரம், செடி, கொடியிடம் கூட இவ்வளவு பரிவு காட்டி யோசிப்பவள் நிச்சயமாக மோசமான ஒருவளாக இருக்க முடியாதென்ற உறுதியும், பிரமிப்பும் ஒருங்கே எழுந்தன.

பிறகு தங்கள் அறைக்குச் சென்று இருவரும் ஓய்வெடுக்க, தரையில் விரிக்கப்பட்டிருந்த கார்ப்பெட்டில் கம்பளியை விரித்துப் படுத்துக் கொண்டாள் ரியா.

தேனிலவில், இது போல் யாரும் தனியே படுத்திருக்க மாட்டார்கள் என்ற எண்ணம் வர, விரக்திப் புன்னகையொன்று அவள் இதழோரம் ஜனித்தது.

ரிஷிக்கும், அவள் தரையில் படுத்திருந்ததைப் பார்த்த போது கஷ்டமாக இருந்தாலும், குறைப்படாமல் எந்த இடத்திலும் வாகாகப் பொருந்தி அனுசரித்துப் போகும் அவள் குணம், கல்வெட்டாய் மனதில் பதிந்தது.

இப்போதெல்லாம், அவளை நினைத்தாலே மனதில் ஒருவித மதிப்பும், ப்ரியமும், பரிவும் எழுந்தன.

அன்று மாலையில் இருவரும் வெளியே சென்று ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு, குறிஞ்சியாண்டவர் கோவிலுக்கு சென்றனர்.

தெய்வ சந்நிதானத்தில், இருவருக்கும், இனம் புரியா அமைதியையும், மலர்ச்சியையும் அந்த சூழலே மீட்டுத் தர, மனம் நிர்மலமானது.

திரும்பி வரும்போது அவனிடம் தெரிந்த அமைதி புதிதாய்!

சில நேரங்களில் அவனைப் பார்த்தால் இதமான பனிச் சாரலாய்.. சில நேரங்களில் கோபமான தீச்சாரலாய் தோன்றியது ரியாவிற்கு!

அவளால் கணிக்க முடியாத புதிராய் தோன்றினான் ரிஷி.

## 10



இரவு, அறைக்குத் திரும்பியதும், கீழே படுக்கக் கம்பளியை எடுத்தவளை ரிஷியின் கரம் தடுத்தது.

வேகமாக விலகி என்னவென்று நிமிர்ந்து பார்த்தால், "வேண்டாம்... நீ பெட்லே படுத்துக்க.. இந்தக் குளிரிலே ரெண்டு பேருமே கஷ்டப்படவேணாம்.. இந்த பெட் பெரிசாத் தானே இருக்கு! இதிலேயே படுத்துக்கலாம்!" என்றான்.



அவள் பதிலொன்றும் கூறாமல் தயக்கத்துடன் நிற்கவும், கேலியுடன் "ஏன்.. என் மேல நம்பிக்கை இல்லையா? உன்னை ஏதாவது பண்ணிடுவேன்னு பயமா? அப்படி செய்யறதா இருந்தா, பத்தடி தள்ளிக் கூட வந்து அதைப் பண்ணலாம்.." கூறிவிட்டு ஒற்றைப் புருவத்தை ஏளனத்துடன் உயர்த்தினான்.

பேசாமல் சென்று அந்தப் படுக்கையின் ஓரத்தில் படுத்துக் கொண்டவளின் மனதில், அவனைப் பற்றிய சுகமான நினைவுகள் அலைகளாகப் பரவி எண்ணக் கோலமிட்டன.

அதே நேரம், அவனுடைய அருகாமை பயத்தையும் விதைத்தது.

மறுநாள் காலையில் சீக்கிரமே விழித்தவள், எழுந்து தயாராகி தோட்டத்திற்கு சென்றபோது, அதிகாலைக் காற்று ஈரமாய் முகத்தை வருடிச் செல்ல, மரித்துப் போன மலர்களின் உதிர்ந்த சருகுகள் மண்ணை முத்தமிட்டிருந்தன.

வரிசையாக காட்டேஜ்கள் அணிவகுத்திருக்க, சுற்றிலும் மரவேலியிடப்பட்டு, அந்த இடமே ரம்யமாக இருந்தது.

அடுத்த காட்டேஜிலும், யாரோ தங்கியிருப்பது போல் தோன்றும் போதே, ஒரு குழந்தையின் அழுகுரல் அங்கிருந்து கேட்டது.

திரும்பியபோது, அங்கு ஒரு ஆண், தன் குழந்தையுடன் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தான்.

குழந்தை மிகவும் அழ ஆரம்பிக்க, அவனால் அந்தக் குழந்தையை சமாதானப் படுத்த முடியவில்லை.

உடனே மனதில் ஒரு பரிதாபம் எழ, இங்கிருந்து குரல் கொடுத்த ரியா, தன்னிடம் அந்த மழலையைத் தரும்படிக் கேட்டாள்.

அவனும் வேலியின் ஓரம் வந்து கொடுக்க, அழுகை சப்தம் கேட்டு ஜன்னலருகே வந்த ரிஷி, அவளையே கவனிக்க ஆரம்பித்தான்.

அந்தக் குழந்தையை மார்போடு அணைத்தபடி, மெதுவான குரலில் பேசி, மென்மையாகத் தடவிக் கொடுத்து அவள் சமாதானப் படுத்த, அந்த சிறு சிசு தன் அழுகையை நிறுத்தி, அவள்மீது சலுகையுடன் சாய்ந்து உறங்க ஆரம்பித்தது.

கண்களை அகற்ற முடியாமல் அவளின் ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டிருந்த ரிஷிக்கு, ரியாவின் இயல்பான தாய்மை உணர்வு புரிந்து, சட்டென்று அவள் மேல் மெலிதான நேசம் வந்தது.

காயம் படாத காதல் சிறகாய் ரியாவின் இமைகள் விரிந்து, ஜன்னலின் மேல் படிய அங்கு ரிஷியைக் கண்டதும் குழந்தையை மெல்ல எடுத்து அந்த ஆணிடம் கொடுத்து விட்டு உள்ளே வந்தாள்.

பிறகு இருவரும் கிளம்பி கோக்கர்ஸ் வாக், சூசைட் பாயிண்ட், கார்டன் என்று எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தபோது, இதே இடங்களுக்கு ரிஷியின் காதலுக்கு சொந்தமாகி உரிமையுடன் அவன் தோளில் சாய்ந்து சுற்ற மனம் ஏங்கித் தவித்தது.

மதியம், ஏரியில் படகுச் சவாரி செல்லும் போதுதான், அங்கு காலையில் தான் பார்த்த ஆணுடன் அவன் மனைவியும் நின்றிருக்கக் கண்டாள் ரியா.



அவளைக் கண்டதும், இருவரும் ஏதோ பேசியபடி புன்னகையுடன் அருகில் வர, அந்தப் பெண் வேகமாக முன்னால் வந்து ரியாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''தேங்க்ஸ்.. நீங்கதான் காலையில விமோஷிகாவை சமாதானப் படுத்தி தூங்க வச்சீங்கன்னு இவர் சொன்னார்... நான் குளிச்சிட்டு வரதுக்குள்ளே ரொம்ப அழுதிட்டா போலருக்கு! அவ அழுதா, என்னைத் தவிர யாராலயும் அவளை சமாதானப்படுத்த முடியாது..

''சுலபத்துல அழுகைய நிறுத்தவே மாட்டா.. சில நேரத்துல கண்ணெல்லாம் நிலை குத்தி, நீலமா உதடெல்லாம் மாறிடும்... நல்ல வேளை நீங்க அந்த நேரத்தில உதவி பண்ணியிருக்கீங்க... ரொம்ப நன்றி!'' என்று கூறினாள்.

''இதுல என்னங்க இருக்கு... குழந்தைங்க அழுதா என்னால தாங்கவே முடியாது... அதான் உடனே கேட்டு வாங்கி சமாதானப்படுத்தினேன். அப்புறம்... என் பேரு ப்ரியம்வதா... இவர் ரிஷி!'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

''என் பேர் உதயா... டீச்சரா இருக்கேன்! இவர் சதீஷ்... 'மெடிக்கல் ரெப்'பா இருக்காரு! கல்யாணம் முடிஞ்சவுடனே, இவள் கன்சீவ் ஆயிட்டதால, 'ஹனிமூன் ட்ரிப்'பே இப்பதான் வந்திருக்கோம்...'' சிறு முறுவலுடன் சொன்னாள் அவள்.

சதீஷும், ரிஷியும் கைகுலுக்கி தங்களை அறிமுகப் படுத்தி இயல்பாகப் பேசிக் கொள்ள ஆரம்பிக்க, உதயா அவளிடம் திரும்பினாள்.

''நாங்க நாளைக்குக் காலையில கிளம்பி ஊருக்குப் போயிடுவோம். அதனால, நீங்க ரெண்டு பேரும் கட்டாயம்

இன்னிக்கு நைட் எங்களோட டின்னர் சாப்பிட எங்க காட்டேஜுக்கு வரணும்... ப்ளீஸ்...'' என்றாள்.

சதீஷும், ரிஷியை அழைக்க, அவனும் உடனே சரியென்றான்.

பிறகு அவர்களிடம் விடைபெற்று இருவரும் போட்டிங் செல்ல, ரிஷியும், ரியாவும் கார்டனுக்குச் சென்றனர்.

அன்றிரவு, பக்கத்து காட்டேஜுக்குச் சென்று பேசிக் கொண்டிருந்தபோது, குழந்தையுடன் விளையாடுவதி லேயே ரியா ஆர்வம் காட்டியதை ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தான் ரிஷி.

பிறகு அனைவரும் கார்ட்ஸ் விளையாடி முடிக்கும் நேரத்தில், விமோஷிகா விழித்துக் கொள்ள, இரு பெண் களும் உள்ளே சென்றனர்.

உதயா, குழந்தையை சமாதானப்படுத்தி உறங்க வைத்துக் கொண்டிருக்க, ரியா ஜன்னலருகே சென்றபோது தான், அன்று பௌர்ணமி என்று தெரிந்தது.

நிலவு தங்கப் பதுமையாய் தகதகத்து, மரங்களின் மேல் பொன் வண்ணத்தைத் தீட்டியிருந்தது.

'நிலவின் புன்னகை பௌர்ணமி' என்று யாரோ எழுதிய கவிதை அந்த நிமிடம் நினைவிற்கு வந்தது.

உதயாவைப் பார்த்தபோது, 'பெண்மையின் புன்னகை தாய்மை'யோவென்று தோன்றியது ரியாவிற்கு!

சட்டென்று உதயாவின் குரல் அவளைக் கலைத்தது.

''சாரி... உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேன் இல்லை... இவர்கூட என்னைத் திட்டினாரு... அவங்க ரெண்டு பேரும்



புதுசா கல்யாணமான தம்பதிங்க! நம்மளை மாதிரி இல்லை... அவங்களை நைட் தொந்தரவு பண்ணிட்டியேன்னு சொன்னார்... அப்புறம்தான் எனக்கும் தோணுச்சு... எங்க நிலைமை வேற... உங்க...'' குறும்புடன் நிறுத்தினாள்.

''ஆமாம்... எங்க நிலைமையே வேறதான்...'' மனம் விரக்தியுடன் எண்ணும்போதே, ரிஷியின் புறக்கணிப்பும், பாராமுகமும் மனதில் படர்ந்து பயத்தை விதைத்தன.

அவனுக்காக... அவன் அன்புக்காக காத்திருப்பதிலேயே காலம் முழுவதும் கழிந்து விடுமோ என்ற வேதனை நெருஞ்சி முள்ளாய்...!

''என்ன... நான் சொன்னது சரிதானே? கனவுலகத்துக்குப் போயிட்டிங்க போலருக்கு. மேரீட் லைஃப் எப்படி இருக்கு ப்ரியம்வதா... நீங்க ரெண்டு பேரும் ரொம்பப் பொருத்த மான ஜோடின்னு, நாங்க மதியானம் பேசிட்டிருந்தோம்...''

''ஹும்... மனப் பொருத்தம் மட்டும் இல்லையே'' என்று தோன்றும் போதே, இப்படியே சென்றால், தன் கருப்பைக்குள் விமோஷிகாவைப் போன்ற ஒரு சிசுவின் சுவாசம் கேட்குமாவென்ற கேள்வி, புதிராய்!

''உன் வரவின்றி, ஒலியற்ற மௌனம் என் வாழ்வில் வெறுமையைத் தந்து விடுமோ என் மழலையே...'' மனம் இயலாமையுடன் மறுகியது.

பிறகு, அவர்களிடம் விடைபெற்றுத் திரும்பி வரும் போது இருவரின் மனமும் மௌனப் பரிபாஷையில் மெட்டுக்கள் இசைக்க, ஏதோ ஒரு வித ஏகாந்தம் இருவரையுமே வியாபித்திருந்தது.

மறுநாள் இருவரும் குகைகளை சுற்றிப் பார்க்கச் சென்றனர்.

ரிஷி, காலையிலிருந்தே அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை... பெரும் யோசனையுடனிருந்தான்.

ஏனோ, அந்த நிமிடம், அவனுடைய உதடுகளின் உச் சரிப்பை உயிரோசையாகக் கேட்க, அவள் மனம் விழைந்தது.

குகையில், மௌனமாக அவனருகில் நின்று ரசித்தபோது, திருமணத்தன்று அவன் கைப்பிடித்ததும் மறையாத ரேகை யாய் கைகளிலும்... முதன் முதலில் தன் மனம் கவர்ந்த ரிஷியின் முகம், கலைந்து போகாமல் மனதிலும் அப் படியே பதிந்திருப்பதை, வேதனையுடன் உணர்ந்தாள் அவள்.

அவர்கள் திரும்பி வருகின்ற வழியில், கார் ஒரு திருப் பத்தில் செல்லும்போதுதான், அந்த சிறு விபத்து நிகழ்ந்தது.

அங்கு, எதிர்பாராது குறுக்கிட்ட ஒரு பிச்சைக்காரச் சிறுவனின் மீது, கார் லேசாக மோதி விடப் பதறி இறங்கிய ரியா, ஓடிச் சென்று அவனை எழுப்பி நிறுத்தினாள்.

முழங்காலில் அடிபட்டு ரத்தக் காயத்துடன் தடு மாறியவனைக் கண்டதுமே அவள் நெஞ்சம் பதறிப் போனது.

உடனே, அவனைத் தாங்கிப் பிடித்து, தன் கைக்குட்டை யால் கசிந்த ரத்தத்தைத் துடைத்து விட்டவள், ''ரொம்ப வலிக்குதா... பாத்து வரக் கூடாது...'' மென் குரலில் பரிவுடன் வினவினாள்.



''இல்லக்கா... நான் கார் வரதை கவனிக்கலை... காலையிலருந்து ஒண்ணுமே சாப்பிடலை... மயக்கம் வந்துடுச்சு...'' மிரட்சி தெரிந்தது அவன் குரலில்!

''சரி... சரி... வா! முதல்லே டாக்டர்கிட்டப் போயிட்டு அப்புறமா சாப்பிடலாம்...'' என்று எழுப்பியவளையே இமை கொட்டாது வியப்புடன் கவனித்துக் கொண்டிருந்தான் ரிஷி.

உள்ளூர மனதிற்குள் அருவெறுப்பாக இருந்தாலும், ரியா அவனைத் தொட்டுத் தூக்கி, காயத்தைத் துடைத்து விட்டு பரிவுடன் பிடித்து காருக்கு அழைத்து வருவதை, யோசனை யுடன் அளவெடுத்தன ரிஷியின் விழிகள்!

பிறகு அருகிலிருந்த ஒரு க்ளினிக்கில் அவனைக் காண்பித்து டாக்டர் முதலுதவி செய்து கட்டு போட்டு விட்ட பிறகு, அவனை எதிரிலிருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றாள் அவள்.

அங்கு அவனுக்குச் சாப்பாட்டுப் பொட்டலத்தை வாங்கிக் கொடுத்தவள், ஐம்பது ரூபாயையும் அவனிடம் கொடுத்து அனுப்பிய போது, ரிஷி வியப்பின் உச்சியிலிருந் தான்.

உடனே, வர்ஷாவை தான் காதலித்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி, ஏனோ மறவாமல் கண் முன் வந்தது.

இன்று, அவளுக்கும் ரியாவிற்கும் இடையே உள்ள மலையளவு வித்தியாசம் புரிவதாய்...!

மனம் யோசனையில் மூழ்க, அலைகளுக்கிடையில் அலைப்புறும் படகாய் நெஞ்சம் சஞ்சலமானது.

## 11



ரிஷி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் ப்ராஜெக்ட் விஷயமாக, நண்பர்கள் அனைவரும், ஒரு பெரிய தொழிற்சாலைக்குச் சென்றிருந்தனர்.

அன்றைய பயிற்சி முடிந்து எல்லோரும் மகிழ்ச்சியுடன் அரட்டை அடித்தபடி நடந்து வெளியே வந்தபோது, எதிர்ப்புற பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த ஒரு ஏழைச் சிறுவன், அவர்களிடம் ஓடி வந்தான்.

''சார்... சார்... நான் ஸ்கூல்ல படிக்கிறேன் சார். பரீட்சைக்கு பணம் கட்டணும்... அதனாலதான் இதெல்லாம் வியாபாரம் செய்யறேன் சார்... ஏதாவது வாங்கினீங்கன்னா, அது என் படிப்புக்கு ரொம்ப உதவியா இருக்கும்மா...'' என்றபடி, ஊதுபத்தி, தலைக்கான கிளிப்புகள், சுத்தம் செய்யும் டஸ்டர் என்று எல்லாவற்றையும் எடுத்துக் காண்பிக்க ஆரம்பித்தான்.

''எங்களுக்கு எதுவும் வேணாம்பா... படிக்க பணம் வேணா தரோம்... வாங்கிக்க...'' கூட்டத்தில் ஒருவன் கூற ''வேண்டாம் சார்... எதையுமே சும்மா வாங்கிக்கக் கூடாதுன்னு எங்கம்மா சொல்லியிருக்காங்க. ஏதாவது வாங்கிட்டு காசு குடுங்க...'' என்றபடி தொடர்ந்தான்.

அப்போது, அவன் வர்ஷாவின் மீது லேசாக இடித்துவிட, உடனே கோபமாகத் திரும்பியவள், அந்தச் சிறுவனைப் பிடித்து வெறுப்புடன் தள்ளி விட்டாள்.



அவன் கையிலிருந்த பொருட்களெல்லாம் சிதறி விழ, அலங்கோலமாக விழுந்தவனுக்கு, கையில் அடிபட்டு ரத்தம் கசிய ஆரம்பித்தது.

''சே... இவனுங்கல்லாம் ஏன் தான் இப்படி இருக்கானுங்களோ... போய் டெட்டால் போட்டு தேய்ச்சுக் குளிக்கணும்...'' என்றபடி தன் பாட்டிலிலிருந்து தண்ணீரை சரித்து, தன் கைகளைக் கழுவிக் கொண்டாள் அவள்.

பிறகு, ரிஷியும் அவன் நண்பர்களும், அந்த சிறுவனின் பொருட்களை சேகரித்து கொடுத்து, பணத்தையும் கொடுத்து வைத்தியம் பார்க்கச் சொன்னபோது, அவன் மறுத்து விட்டான்.

''ரிஷி... நான் வரேன்... ஏன் அவன்கிட்டப் போய் கெஞ்சிட்டிருக்கீங்க, பை...!'' வெறுப்புடன் கூறிவிட்டு ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து, அவள் கிளம்பி விட்டாள்.

பிறகு அந்தச் சிறுவனிடம் ஆளுக்கொரு பொருளை வாங்கிக் கொண்டு பணம் கொடுத்து அனுப்பியதும், மனிதாபிமானமின்றி வர்ஷா சென்றது முதன் முதலாய் தனக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதும், சாட்டையிலடித்தாற்போல் இன்று நினைவு வந்தது. எப்போதோ படித்த வரிகள் ஞாபக அடுக்குகளில் தடம் பதித்தன.

**மேலடுக்கு நறுமணமும், மனிதனுக்கு நற்குணமும் மிக மிக அவசியமானவை...**

**சின்னஞ்சிறு கனிவுச் செயல்கள், அன்பான சின்னஞ் சிறு வார்த்தைகள், இவையே சொர்க்கத்தைப் போல், பூமியையும் மகிழ்வூட்டுகின்றன!**

அறிஞர் 'கார்னி'யின் சொற்கள், எவ்வளவு அர்த்தம் நிரம்பியவை என்று, ரிஷிக்கு இன்று புரிந்தது.

அன்று, மலையிலிருந்து இறங்கும்போது, இரவு சரியான உறக்கமில்லாததால், ரியாவின் விழிகள் தாமாக மூடின.

அப்படியே பின்புறம் சாய்ந்து உறங்கத் தொடங்கியவளின் முகம், தூக்கத்தில் சிறு குழந்தையைப் போலிருந்தது.

ரிஷி மெதுவாக நகர்ந்து, அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டதை அவள் அறியவில்லை... ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள்.

ஆனால் அவள் விழிக்கும் முன்பே, அவளை விட்டு விலகியவனின் விழிகளில் பெரும் போராட்டம்!

இரவு ரயிலில் கிளம்பி காலையில் தென்காசியை அடைந்தபோது, மரகதம் அத்தை ஊரிலிருந்து வந்திருந்தார்.

தான் கொடைக்கானலிலிருந்து வாங்கி வந்த ஸ்வெட்டர், சால்வை, தைலம் எல்லாவற்றையும் சிவகாமியிடம் கொடுத்துவிட்டு, மரகதத்திற்கும் ஒரு சால்வையைக் கொடுத்தாள்.

உடனே அவளைத் தனியே அழைத்துச் சென்றவர், ''ரொம்ப நன்றிம்மா! நீ சொன்னதாலதான், தம்பி மாணிக்கத்துக்கு வேலை தர ஒத்துக்கிட்டதா சிவகாமி சொல்லுச்சு... ரிஷிகிட்டயும் நீதான் சிபாரிசு பண்ணினதா கேள்விப்பட்டேன். உன்னைப்பத்தி நான் ரொம்ப தப்பா நினைச்சிட்டிருந்தேன்...'' தர்ம சங்கடத்துடன் மெதுவாகக் கூறினார்.

''பரவாயில்லம்மா! ஒருத்தரைப் பத்தி சரியாப் புரிஞ்சிக்காம அப்படி நினைக்கறது சகஜம்தான்! நான் உங்களைத் தப்பா நினைக்க மாட்டேன்... பொதுவாவே, தப்பு செய்யறவங்களுக்கு மனசு பலவீனமா இருக்கும்...



ஆனா அதுவே அவங்க திருந்திட்டா மனசுல ஒரு வித பலம் வந்துடும்... அது அவங்களைத் திரும்பவும் தப்பு செய்ய விடாது''ன்னு எங்கப்பா சொல்லுவாங்க... அதை மனசில வச்சிக்கிட்டுதான் நான் மாமாகிட்ட, உங்க பையனை வேலையில சேத்துப் பாக்கலாமேன்னு யோசனை சொன்னேன்... ஆனா முடிவெடுத்தது மாமாதான்!''

''நீ எவ்வளவு பக்குவமா பேசறே... எனக்கு இந்த வயசுலகூட உன் அளவு மனமுதிர்ச்சியும் பக்குவமும் வரலை... நான் உன்னைப் பத்தி சிவகாமி கிட்டப் பேசினதை நினைச்சி ரொம்ப வருத்தப் பட்டேன்... உனக்கு அது தெரியாது!''

''இல்லை... தெரியும்! அத்தைகிட்ட நீங்க பேசினதை, தோட்டத்தை சுத்திப் பாக்க வந்தப்ப, நான் தற்செயலாக் கேட்டேன்...'' ரியா தயக்கத்துடன் கூறினாள்.

''எவ்வளவு அருமையான பொண்ணும்மா நீ! உனக்கு கெடுதல் நினைச்சவங்களுக்கும், நல்லதே செய்யணும்னு நினைக்கறே பாரு! அதுக்கெல்லாம் பெரிய மனசு வேணும்... உனக்கு எந்தக் குறையும் வராது! நீ சந்தோஷமா இருப்பே... என்னை மன்னிச்சிடு!''

சட்டென்று அவருடைய கண்கள் நிறைந்தன.

சிறு முறுவலுடன், ''நீங்க பெரியவங்க! அப்படியே தப்பா பேசினாலும் நான் தப்பா எடுத்துக்கலை... அதுக்குப் போய் ஏன் மன்னிப்புங்கிற பெரிய வார்த்தை எல்லாம் பேசறீங்க... மாணிக்கம் அண்ணாவை நல்லா வேலை பாத்து, மாமாகிட்ட நல்ல பெயர் வாங்கச் சொல்லுங்க... அது போதும்!'' என்று சமாதானப்படுத்திவிட்டு, தன் அறைக்குள் சென்றாள்.

அவளையே தொடர்ந்த மரகதத்தின் விழிகள் கலங்கியிருந்தன. சட்டென்று மனம் லேசானதைப் போலிருந்தது.

அன்றிரவே, ராமனாதனுக்கு போன் செய்து பேசிவிட்டு, யமுனா விரும்புகிற பையனைப் பற்றி நன்றாக விசாரிக்கும் படிக் கூறினாள் ரியா.

ஏனோ, படுத்து வெகு நேரமாகியும் உறக்கம் வராமல் தவித்தவளுக்கு, அன்று தனிமை மிக்வும் கொடுமையாய்!

ரிஷியின் ஞாபகங்கள், நெஞ்சக் கூட்டுக்குள் அலை மோதி காற்றிலாடும் தோரணங்களாய் சடசடத்தன.

மூடிய விழிகளுக்குள் காட்சிகள் கவிதையாய் உலா வரத் துவங்க, ஆழ் மனதில் புதைந்திருந்த நேச விதையை புதையலாய் பாதுகாத்தாள் ரியா.

மெதுவாக எழுந்து, தங்களுடைய திருமண ஆல்பத்தி லிருந்த அவன் புகைப்படத்தை மென்மையாய் வருடிப் பார்வையிட்ட போது, மனம் ஏக்கமானது.

*"மழை நின்ற பிறகும்...*
*நடுங்கும்*
*மலர்களைப் போல்...*
*என் மனம்!*
*இமைகள்*
*அமர்ந்த சுவடு...*
*விழிகளில்*
*இல்லாததைப் போல்...*
*என் நிலை!*
*இந்த ஆகாயமும்*
*ஆழ்கடலும்*



*எவ்வளவு உண்மையோ...*
*அவ்வளவு நிஜமாய்...*
*நலிந்த*
*புகைப்படமாய் இன்றி...*
*உயிராய் என்னருகில்*
*நீ துணையாய்*
*இருந்திடக் கூடாதா...?"*

அந்த இரவின் அமைதியைக் கலைத்து, ஒழுங்கற்ற இசை போல், தென்னை ஓலைகள் காற்றில் சலசலக்க, அவள் மனதிலும் சோகஸ்வரங்கள் அலைப்புறுதலுடன் எதிரொலித்தன...!

* * *

**ம**று நாளிலிருந்து அந்த வீடும் வேலைகளும் இயல்பாகப் பழகிவிட, அவளுக்கு 'எம்.காம்.' முதல் வருடத்திற்கான புத்தகங்களை கூரியரில் அனுப்பி இருந்தார் ராமனாதன்.

பிறகு வந்த நாட்களில், சமையல், படிப்பு, என்று நேரம் செல்ல, மீதமிருந்த நேரங்களில் பேக்டரியின் கணக்குகளை, கம்ப்யூட்டரில் சரிபார்த்து ஸ்டோர் செய்து வைப்பதிலும், சோமசுந்தரத்துடன் பேசியபடி செஸ், சைனீஸ் செக்கர்ஸ் என்று விளையாடுவதிலும் பொழுது சென்றது.

இப்போதெல்லாம், ரிஷியின் வேலைகளை அவள் பெரிதும் குறைத்துவிட, அவன் சீக்கிரமாகவே உறங்க ஆரம்பித்திருந்தான்.

ஒருநாள் மாலையில், அதுபோல் அவள் கம்ப்யூட்டரில் ஆழ்ந்திருந்தபோது, போன் ஒலித்தது.

அதை இயல்பாக எடுத்த ரியா, ''ஹலோ...'' என்றபோது, ''நான் வர்ஷா பேசறேன்... ரிஷி கிட்டப் பேசணும்... அவர் வந்துட்டாரா?'' என்றது ஒரு பெண் குரல்.

ரியாவிற்குள் மெலிதான அதிர்ச்சி அலையெனப் பரவ, ரிசீவரை நழுவ விடாமல் பிடித்தபடி, ''அவர் பேக்டரியில இருப்பாரு... நம்பர் தரேன். அங்கே பேசுங்க!'' என்றாள்.

''அந்த நம்பர் தான் என்கிட்ட இருந்தது... அதிலதான் பேசினேன்... வீட்டுக்குக் கிளம்பிட்டதா சொல்லி இந்த நம்பரைக் கொடுத்தாங்க...''

''அப்படின்னா, அவர் கிளம்பி வந்திட்டிருப்பாரு... ஒரு அரை மணி நேரம் கழிச்சிப் பேசுங்க... அவர் வந்ததும் நீங்க பேசினதா சொல்றேன்.'' என்று கூறி விட்டு வைத்தபோது, நெஞ்சம் வேகமாகப் படபடக்க ஆரம்பித்தது.

சட்டென்று, தனக்கும் ரிஷிக்குமிடையே பெரும் சீனச் சுவரொன்று வர்ஷாவின் வருகையால் எழும்ப ஆரம்பிப்பதை, ஒருவித இயலாமையோடு உணர்ந்தாள் ப்ரியம்வதா.

அந்த நிமிடம் வார்த்தைகளில் விளக்க முடியாத ஒரு விநோத அவஸ்தை உணர்வு, அவளை ஆக்ரமிக்க, முதன் முறையாக தோற்றுப் போன ஒரு உணர்வுடன், ரிஷிக்காக காத்திருக்க ஆரம்பித்தாள் அவள்.

ஏனோ, பிறகு வேறு எதிலுமே ஈடுபட மனம் மறுத்தது.

வாழ்க்கையில் பல போராட்டங்களுக்கு நடுவில், பூப்பறிக்க மனம் வருவதில்லை.. உடலும், உள்ளமும் பெரிதும் சோர்ந்து போயிருந்தன.

ரிஷியுடைய கார் வந்து போர்டிகோவில் நிற்கின்ற ஒலியைக் கேட்டவுடன் வேகமாக எழுந்து கீழே சென்றாள் ரியா.



## 12



ரிஷி வந்ததுமே அவனுடன் அறைக்கு வந்தவள், ''வர்ஷா போன் பண்ணி இருந்தாங்க. அரை மணி நேரம் கழிச்சிப் பேசச் சொன்னேன். பேசறேன்னாங்க'' என்று கூறியபோது, அவன் முகம் அதிர்ச்சியில் சுருங்கி இறுகியது.

ரியாவின் மனதில் ஆயிரம் சோகமலர்கள் அரும்ப, அதை மறைத்து சிறுமுறுவலை இதழ்களில் தேக்கியபடி கீழே சென்றாள் அவள்.

சிறிது நேரத்தில் கீழே வந்தவன், அவளைத் தனிமையில் அழைத்து ''வர்ஷா பேசினா... அவ தன்னோட கணவரை டிவோர்ஸ் பண்ணிட்டு இந்தியாவுக்கு வந்துட்டாளாம். ஏதோ ரிசர்ச் பண்றாளாம். அதுக்காக மதுரைக்கு வந்திருக்கா! வந்தவுடனே என் ஞாபகம் வந்திருக்கு. இன்னும் ஒரு மணி நேரத்துல நம்ம வீட்டுக்கு வரேன்னா!'' யோசனையுடன் கூறினான்.

உடனே ''சரி... நான் டிபன் ஏதாவது ரெடி பண்ணச் சொல்றேன்'' என்றபடி சமையலறைக்குள் சென்றாள் ரியா.

சிவகாமியிடம் விபரம் கூறியபோது ''யாரும்மா அந்தப் பொண்ணு? தம்பி கூடப் படிச்சவளா?'' என்று மட்டும் கேட்டார்.

ஆனால் அவள் ஆமாம் என்று திரும்பியபோது, சோம சுந்தரத்தின் முகத்தில் தான் பெரும் யோசனை தெரிந்தது.

ஆனால் ஒரு மணி நேரத்தில் காரில் வந்து இறங்கிய அந்தப் பெண்ணைப் பார்த்ததும், அவளால் தன் கண் களையே நம்ப முடியவில்லை.

நல்ல உயரத்தில் குண்டாக, ஒரு அரேபியக் குதிரையின் நிமிர்வுடன் ஜீன்ஸும் தொளதொளவென டாப்ஸும் அணிந்த ஒரு பெண்ணை அவள் கற்பனை செய்திருக்க வில்லை.

''ஹாய் ரிஷி...'' யென்றபடி இறங்கி வந்தவள் ரிஷியின் கைகளைப் பிடித்துக் குலுக்கிவிட்டு திரும்பி அவளைக் கண்டதும் யாரென்ற கேள்வியுடன் நோக்கினாள்.

அந்த நிமிடம் ரியாவின் கையைப் பிடித்து முன் நிறுத்திய ரிஷி ''இதுதான் என்னோட மனைவி ப்ரியம்வதா!'' அவளிடம் புன்னகையுடன் அறிமுகப் படுத்தினான்.

அவளும் மெலிதான புன்சிரிப்புடன், ''ஹலோ, வர்ஷா! எப்படி இருக்கீங்க?'' என்றாள் மென்மையாக.

ஒரு கணம் ஆச்சர்யப்பட்டவள், ''ம்... ஃபைன்!'' என்று கூறிவிட்டு ரிஷியின் கையை உரிமையுடன் பிடித்துக் கொண்டாள்.

உடனே அதை விலக்கி விட்டு அவன் முன்னே செல்ல, இருவரும் தொடர்ந்த போது, சிவகாமி அவளை வரவேற்றாள்.

பிறகு சோமசுந்தரமும் வந்துவிட, ரியா டிபன் எடுத்து, வந்து கொடுத்தபோது, கண் ஜாடையிலேயே அவளை தன் அருகில் வந்து அமரச் சொன்னான் ரிஷி.

சோமசுந்தரம் ரியாவின் புகழ் பாட ஆரம்பிக்க சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த வர்ஷா கிளம்பும் போது. ''உன் ஒய்ஃப் ரொம்ப அழகு ரிஷி'' என்று கூறிவிட்டு கிளம்பினாள்.



உடனே ரிஷியின் முகத்தில் வந்த கர்வம் கலந்த பெருமிதத்தை ரியா கவனிக்கவில்லை.

அவளை வழியனுப்பிவிட்டு வந்ததும், ''ஒரு நிமிஷம் மாடிக்கு வா...'' என்று கூறிவிட்டு அவன் முன்னே செல்ல, மௌனமாகப் பின் தொடர்ந்தவளையே யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார் சோமசுந்தரம்.

தங்கள் அறைக்கு சென்றதும், அவன் கதவை சாத்தி விட்டு மௌனமாக நிற்க ரியாவே முதலில் பேச ஆரம்பித் தாள்.

''எனக்கு உங்க ஃபீலிங்ஸ் புரியுது... வர்ஷாவைப் பார்த்த வுடனே உங்களுக்குப் பழைய ஞாபகம்லாம் வந்திருக்கும்... நான் தப்பா நினைக்கலை! அவங்களும் இப்ப தனியா இருக்காங்க! நீங்க எப்ப கேட்டாலும் விவாகரத்து தர தயாரா இருக்கேன். ஆனா எப்படியும் இன்னும் ஒரு பத்து மாசம் காத்திருக்கணும். நம்ம கல்யாணம் முடிஞ்சு ஒரு வருஷம் ஆகியிருக்கணுமே!'' மனம் கண்ணீர் வடித்தாலும் வார்த்தை கள் தைரியமாக வெளிவந்தன.

உடனே அதிர்ச்சியும், வேதனையுமாகத் திரும்பியவன், ''நீ தப்பா புரிஞ்சுக்கிட்டே ப்ரியம்வதா! நான் எப்படி இவளை அந்தக் காலத்துல விரும்பினேன்னு எனக்குத் தெரியலை! சரியான சுயநலவாதி இந்த வர்ஷா! பணம் தான் பெரிசுன்னு அப்ப அவனோட போனா! இப்ப சுதந்திரம் தான் பெரிசுன்னு அவனை விட்டுட்டு வந்திருக்கா! நிமிஷத்துக்கொரு தடவை மாறிப் போறவளை... ஒரு ஃப்ரெண்டா இருக்கக் கூட தகுதியில்லாதவளை நான் எப்படி விரும்பினேன்?'' தர்ம சங்கடத்துடன் நிறுத்தினான்.

வியப்பும், ஆர்வமுமாய் பார்த்துக் கொண்டிருந்தவளிடம், ''அவ சொன்ன இன்னொரு விஷயம்தான் என்னை ரொம்ப பாதிச்சுது. தன் கணவரை விட்டு விலகி வந்தப்ப ப்ரெக்னன்டா இருந்திருக்கா... தன்னோட எதிர்காலத்துக்கு அது தொல்லையா இருக்கும்னும், கணவனே வேண்டாம் கிறப்ப அவன் தந்த குழந்தை எதுக்குன்னு அதை அழிச்சிட்டேன்... இப்ப நான் ஃப்ரீதான்... புது வாழ்க்கைக்கு தயாராகிட்டிருக்கேன்னப்ப, எனக்குள்ளே அவளைப் பத்தி இருந்த கொஞ்சம் மதிப்பு கூட போயிடுச்சு... இவ என்ன படிச்சு என்ன ப்ரயோஜனம்? யாருக்குமே சந்தோஷம் தராத, நிம்மதியளிக்காத இந்த சுயநலமும், அகம்பாவமும் இவளுக்கு என்ன தரப்போகுது?'' என்று சீறலான மூச்சுடன் முடித்து விட்டு, அவளை அர்த்தம் விளங்காத ஒரு பார்வையால் நோக்கியவன் தன்னுடைய அலுவலக அறைக்குள் சென்று விட்டான்.

ரியாவிற்கு தான் சிறிது நேரம் தனிமை தேவையாய்!

அவனுக்கு ஒரு வடிகாலாகவாவது தான் உபயோகப் பட்டிருக்கிறோமே என்ற எண்ணம் எழும்போதே, அவனுடைய பார்வைக்கான பொருள் தேடி அலைந்தது மனது.

சிறிது நேரம் கழித்து ஒரு பெருமூச்சுடன் அவள் கீழே இறங்கி வந்தபோது, சோமசுந்தரம் அவளிடம் பேச வேண்டுமென்று தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

அவளை உட்காரச் சொல்லிவிட்டு மெதுவாக ஆரம்பித்தார்.

''என்னம்மா... ரிஷி என்ன சொன்னான்?'' என்று அவர் கேட்கவும், ''என்ன மாமா... எதைப் பத்தி கேக்கறீங்க?'' என்றாள் ரியா.



''எல்லாம் எனக்குத் தெரியும்மா. நீயும் ரிஷியும் நண்பர்களா இருக்கிறது கூடத் தெரியும்... நான் பாத்துக் கிட்டுதானே இருக்கேன். மனுஷங்களைப் பத்தி புரிஞ்சிக்க முடியலைன்னா, தொழில் நடத்தி அதில வெற்றி பெற முடியுமா? முதல்லேர்ந்து சொன்னா தான் உனக்குப் புரியும்'' என்றவர், மனம் திறந்து பேச ஆரம்பித்தார்.

''காலேஜ் படிச்சிட்டிருக்கப்ப, ரிஷி தான் ஒரு பெண்ணை விரும்பறதா சொன்னான். நான் யோசிச்சு முடிவெடுக்கச் சொன்னேன். படிப்பை முடிச்சுட்டு வந்தப்ப, அவ வேற ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதாச் சொல்லி தொழில்ல தன் முழு கவனத்தையும் செலுத்த ஆரம்பிச்சான்...

''நானும் அப்படியே விட்டுட்டேன். உங்க அத்தைக்கு எதுவுமே தெரியாது. நாலைஞ்சு வருஷம் கழிச்சி இப்பதான் கல்யாணப் பேச்சையே எடுத்தேன். அதுவும் உன் அத்தையோட தொந்தரவு தாங்காமத்தான்!

''ஆனா, ரிஷி என்னிக்கும் காதல்லே தோல்வி அடைஞ்ச மாதிரி இருந்ததே இல்லை. கல்யாணப் பேச்சு ஆரம்பிச்சதுமே மறுத்தவன், உன்னைப் பார்த்ததும் சரின்னான். ஆனா, நீங்க ரெண்டு பேரும் பழகறதைப் பார்த்தா ஒரு கணவன் மனைவியோட நெருக்கத்தையும், அன்யோன்யத்தையும் என்னால உணர முடியலை...

ஏம்மா... உங்க ரெண்டு பேருக்கு நடுவில என்ன பிரச்சினை...? நீ அனுசரிச்சிட்டுப் போற பொண்ணுன்னு எனக்குத் தெரியும். அவன் இந்த வர்ஷாவை இன்னும் மறக்கலையாமா? இன்னிக்கு நான் அவனோட பேசறேன்'' கோபத்துடன் முடித்தார் அவர்.

''மாமா... நீங்க நினைக்கிற மாதிரி இல்லை அவர். அந்த
வர்ஷா பிரிஞ்சி போனப்பவே அவளை வெறுத்துட்டார்.
ஆனா அந்தக் காயம் ரணமா ஆறாம இன்னும் மனசுல
இருக்கு! பெண்கள்கிட்டே நம்பிக்கை வைக்கவே பயப்
படறாரு! அதுதானா ஆறும்னு நான் காத்திட்டிருக்கேன்!''

''இவ்வளவையும் மனசுல வச்சிப் புழுங்கிட்டு எப்ப
டிம்மா இவ்வளவு பொறுமையா உன்னால இருக்க முடியுது.
நான் அவன்கிட்ட பேசறதுக்கு முன்னாடி, உன்னை ஒண்ணு
கேக்கணும்... மறைக்காம சொல்லுவியா? ரிஷி மேல
உனக்கு வருத்தமில்லையே? அவனை நீ விரும்பறியா?
இந்த இரண்டு கேள்விக்கும் எனக்கு பதில் வேணும்மா!''

மெதுவா நிமிர்ந்த ரியா, ''அவர் மேல எனக்கு வருத்தம்
தான்... இன்னும் என்னைப் புரிஞ்சிக்கலையேன்னு! ஆனா
அவரை நான் உயிரா நேசிக்கறேன். அது புரிஞ்சு அவர்
என்னை விரும்பற வரைக்கும் நான் காத்திட்டுருப்பேன்.
ஒரு சின்ன வேண்டுகோள் மாமா! நீங்க அவர்கிட்ட, இதப்
பத்தி எதுவும் பேசக்கூடாது... ப்ளீஸ்...'' கொஞ்சும் குரலில்
கேட்டாள்.

''இல்லம்மா... அப்புறம் இதுக்கு என்னதான் முடிவு?''

''மாமா... காதல், நேசம்கிறதெல்லாம், மனசுல இருந்து
இயல்பா தானா வரணும்! மத்தவங்க கட்டாயத்துல
வரதுக்குப் பேர் அன்பு கிடையாது. அதை என்னால
ஏத்துக்கவும் முடியாது. அதோட எதையும் அவர்கிட்ட
இருந்து பிச்சையா யாசிக்கவும் எனக்கு மனசில்லை!''

கம்பீரமாகக் கூறிவிட்டுச் செல்லும் தன் மருமகளையே,
பெருமையோடு கண்கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தார்
சோமசுந்தரம்.



''முருகா... இந்தக் குழந்தைகளை சந்தோஷமாக வாழ
விடு'' அவர் மனம் கடவுளிடம் பிரார்த்தனை செய்தது.

அன்றிரவு, சாப்பிடும் நேரம் முழுவதும் பெரும்பாலும்
மௌனத்திலேயே கழிந்தது.

பிறகு உறங்கச் சென்றும் நித்திரை வராமல் ரிஷியின்
நினைவுகள் அவளை வதைத்தன.

பிறகு உறங்கினாலும் நினைவை, கனவு மறக்க மறுத்தது.

## 13



**கா**லம் சிறகு விரித்த பறவையாய் பறந்து செல்ல, மறு
வாரமே ராமனாதன் போன் செய்திருந்தார்.

யமுனா விரும்பிய பையன், போதை மருந்துக்கு
அடிமையானவன் என்றும், பல கெட்ட பழக்கங்கள்
அவனிடம் இருப்பதாகவும் கூறியவர், அந்த பையனுக்கு
பெண் கொடுப்பது மிகவும் ஆபத்தென்றார்.

அந்தப் பெண்ணின் வாழ்க்கை நன்றாக இருக்க
வேண்டுமென்றால் அந்தப் பையனை மறந்து விடுவதுதான்
நல்லதென்று கூறினார்.

உடனே அவள் வித்யாவிடம் பேசி விபரம் கூற,
யமுனாவின் வாழ்க்கை காப்பாற்றப்பட்டது.

மறுநாளே, பழனியிலிருந்து போன் வந்தபோது ரியா
கோவிலுக்குச் சென்றிருந்தாள்.

வித்யாவின் மாமியார் விசாலம் சோமசுந்தரத்திடம் பேசி விட்டு ரிஷியிடம் பேச வேண்டுமென்றார்.

ரிஷி எடுத்ததும், ''ரிஷி! எப்படி இருக்கேப்பா! ப்ரியா வுக்கு நான் நன்றி சொன்னேன்னு சொல்லு. உங்க மாமனார் தான் தன்னோட நண்பர் மூலமா அந்தப் பையனைப் பத்தி விசாரிச்சாராம். நல்ல வேளை... எங்க பொண்ணோட வாழ்க்கை தப்பிச்சுது. ப்ரியா சொன்ன மாதிரி உங்க மாமாவுக்கு கேரள எண்ணெய் சிகிச்சை எடுத்தப்புறம் இப்ப கொஞ்சம் நடக்கிறாரு... நான் ராத்திரி திரும்பவும் பேசறேன். அருமையான வைரம் உனக்கு மனைவியாக் கிடைச்சிருக்காப்பா... பத்திரமா பாத்துக்க... அம்மாவும் கோவிலுக்குப் போயிருக்கறதா அப்பா சொன்னாங்க... நைட் நான் பேசறேன்னு சொல்லு!'' என்றபடி வித்யாவிடம் கொடுத்தார்.

வித்யாவும், ரியாவால் நடக்க இருந்த அநியாயம் தடுத்து நிறுத்தப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்தாள்.

போனை வைத்ததுமே, ரிஷியின் மனதில் அன்று ரியாவின் பதிவுகள் அதிகமாய்...!

அன்றிரவு, பழனியிலிருந்து அனைவரும் பேச, ரியாவிற்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

''சுதாகர் அண்ணாவோட அப்பா, எனக்கும் அப்பா மாதிரித்தாண்ணி. அதனால தான் ஒரு யோசனை சொன்னேன்... இது சின்ன விஷயம்! நான் பெரிசா எதுவும் செஞ்சிடலை. அப்புறம் யமுனாவோட வாழ்க்கை நல்லாயிருக்கணும்னுதானே எல்லாரும் விரும்புவீங்க. அவ எனக்கும் தங்கை மாதிரி தான்... திருச்சியில எங்கப்பா



இல்லைன்னா. வேற யாராவது விசாரிச்சு உண்மைய சொல்லி இருக்கப் போறாங்க... அவ வாழ்க்கை நல் லாருக்கும்னு அம்மாகிட்ட சொல்லுங்க'' என்று கூறிவிட்டு சிவகாமியிடம் கொடுத்தாள்.

மனம் நிர்மலமாகி இருக்க, யார் என்னைப் புரிந்து கொண்டு என்ன.. புரிந்து கொள்ள வேண்டியவன் விலகி இருக்கிறானே என்ற ஆயாசம் வர உடனே தோட்டத்திற்கு சென்றாள்.

என் வானத்து மேகம், மழை தருமாவென்ற ஏக்கம் அவள் மனதில்!

அந்த நிமிடம், ஒரு வித மண் வாசனை சுகமாக எழுந்து நாசியை நிறைக்க, அதை இழுத்து சுவாசித்தாள்.

மனதில் தன் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை அசை போட்டபடி நடந்து கொண்டிருந்தபோது, திடீரென்று மழை தூற ஆரம்பித்தது.

வேகமாக உள்ளே வந்தவள், வானம் பூமிக்கு அளிக் கின்ற வரப்பிரசாதமாய் பொழிந்த மழையை, போர்டி கோவில் நின்று ரசிக்க ஆரம்பித்தாள்.

''மழையின் துளியில் லயமிருக்குது... துளிகள் விழுந்து ஸ்வரம் திரிக்குது...''

மென்மையான குரலில் அவளறியாமல் அந்தப் பாடல் அவள் இதழ்களிலிருந்து கசிந்தது.

அப்போது பின்புறம் நின்று அவளையே கவனித்துக் கொண்டிருந்த ரிஷியை, அவள் கவனிக்கவில்லை.

பாடியபடியே இயல்பாகத் திரும்பிய ரியாவின் முகம், ரிஷியைக் கண்டவுடன், சட்டென்று மாறியது.

வித்யாவின் மாமியார் விசாலம் சோமசுந்தரத்திடம் பேசி விட்டு ரிஷியிடம் பேச வேண்டுமென்றார்.

ரிஷி எடுத்ததும், "ரிஷி! எப்படி இருக்கேப்பா! ப்ரியா வுக்கு நான் நன்றி சொன்னேன்னு சொல்லு. உங்க மாமனார் தான் தன்னோட நண்பர் மூலமா அந்தப் பையனைப் பத்தி விசாரிச்சாராம். நல்ல வேளை... எங்க பொண்ணோட வாழ்க்கை தப்பிச்சுது. ப்ரியா சொன்ன மாதிரி உங்க மாமாவுக்கு கேரள எண்ணெய் சிகிச்சை எடுத்தப்புறம் இப்ப கொஞ்சம் நடக்கிறாரு... நான் ராத்திரி திரும்பவும் பேசறேன். அருமையான வைரம் உனக்கு மனைவியாக் கிடைச்சிருக்காப்பா... பத்திரமா பாத்துக்க... அம்மாவும் கோவிலுக்குப் போயிருக்கறதா அப்பா சொன்னாங்க... நைட் நான் பேசறேன்னு சொல்லு!" என்றபடி வித்யாவிடம் கொடுத்தார்.

வித்யாவும், ரியாவால் நடக்க இருந்த அநியாயம் தடுத்து நிறுத்தப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்தாள்.

போனை வைத்ததுமே, ரிஷியின் மனதில் அன்று ரியாவின் பதிவுகள் அதிகமாய்...!

அன்றிரவு, பழனியிலிருந்து அனைவரும் பேச, ரியாவிற்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

"சுதாகர் அண்ணாவோட அப்பா, எனக்கும் அப்பா மாதிரித்தாண்ணி. அதனால தான் ஒரு யோசனை சொன்னேன்... இது சின்ன விஷயம்! நான் பெரிசா எதுவும் செஞ்சிடலை. அப்புறம் யமுனாவோட வாழ்க்கை நல்லாயிருக்கணும்னுதானே எல்லாரும் விரும்புவீங்க. அவ எனக்கும் தங்கை மாதிரி தான்... திருச்சியில எங்கப்பா



இல்லைன்னா.. வேற யாராவது விசாரிச்சு உண்மைய சொல்லி இருக்கப் போறாங்க... அவ வாழ்க்கை நல் லாருக்கும்னு அம்மாகிட்ட சொல்லுங்க" என்று கூறிவிட்டு சிவகாமியிடம் கொடுத்தாள்.

மனம் நிர்மலமாகி இருக்க, யார் என்னைப் புரிந்து கொண்டு என்ன.. புரிந்து கொள்ள வேண்டியவன் விலகி இருக்கிறானே என்ற ஆயாசம் வர உடனே தோட்டத்திற்கு சென்றாள்.

என் வானத்து மேகம், மழை தருமாவென்ற ஏக்கம் அவள் மனதில்!

அந்த நிமிடம், ஒரு வித மண் வாசனை சுகமாக எழுந்து நாசியை நிறைக்க, அதை இழுத்து சுவாசித்தாள்.

மனதில் தன் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை அசை போட்டபடி நடந்து கொண்டிருந்தபோது, திடீரென்று மழை தூற ஆரம்பித்தது.

வேகமாக உள்ளே வந்தவள், வானம் பூமிக்கு அளிக் கின்ற வரப்பிரசாதமாய் பொழிந்த மழையை, போர்டி கோவில் நின்று ரசிக்க ஆரம்பித்தாள்.

"மழையின் துளியில் லயமிருக்குது... துளிகள் விழுந்து ஸ்வரம் திரிக்குது..."

மென்மையான குரலில் அவளறியாமல் அந்தப் பாடல் அவள் இதழ்களிலிருந்து கசிந்தது.

அப்போது பின்புறம் நின்று அவளையே கவனித்துக் கொண்டிருந்த ரிஷியை, அவள் கவனிக்கவில்லை.

பாடியபடியே இயல்பாகத் திரும்பிய ரியாவின் முகம், ரிஷியைக் கண்டவுடன், சட்டென்று மாறியது.

பாட்டைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு வேகமாக அவனைக் கடந்து உள்ளே சென்றவளையே ஏக்கத்துடன் ரிஷியின் விழிகள் தொடர்ந்தன.

நாட்கள் செல்லச் செல்ல, ரியாவிற்கு தன் அன்பு மேலும் வலுப்பெறுவதை உணர முடிந்தது. தொடர்ந்து வந்த நாட்களில், ரிஷி யோசனையோடும், ஆராய்ச்சி கலந்த நோக்கத்தோடும், அவளையே கவனித்துக் கொண்டிருந்தான்.

மனம் அவளை விரும்ப ஆரம்பித்திருந்தாலும், காயப்பட்ட நெஞ்சம் யாரையுமே சுலபத்தில் நம்ப மறுத்து சத்தியாக்கிரகம் செய்தது.

மாணிக்கம் நன்றாக வேலை செய்து, ரிஷியின் நன் மதிப்பைப் பெற்றிருந்தான்.

ஆடி மாதம் வந்து விட்டது. அதற்காக ரியாவை ஊருக்கு அழைத்துச் செல்வதற்கென்று ராமனாதனும் சகுந்தலாவும் நாளை வருகிறார்கள்.

ரியாவிற்கு, ரிஷியைப் பிரிந்து ஒரு மாதம் இருக்க வேண்டுமென்பதை நினைத்தாலே மனதைப் பிசைந்தது.

அவனுடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளா விட்டாலும், அவனருகில் இருப்பதே ஒரு சுகமாய்...!

நாளை மதியம் கிளம்ப வேண்டு மென்ற நினைவுடன், துணிகள், புத்தகங்கள் எல்லாவற்றையும் அடுக்கியவளுக்கு, மனமே விண்டு விடும் போல் வலிப்பதாய்...!

அன்றிரவு ரிஷி தாமதமாக வர, அவனுக்கு டிபன் வைத்தபோது, "நாளைக்கு அப்பா அம்மா வராங்க... நான் ஊருக்குக் கிளம்பணும்..." மெல்ல நினைவு படுத்தினாள்.



"ம்... தெரியும். நாளைக்கு ஃபேக்டரிக்குப் போக வேண்டாம்னு தான் இன்னிக்கே சில வேலைகளை முடிச்சிட்டு வந்தேன்" என்றவன், நிமிர்ந்து அவளையே இமைக்காமல் நோக்கினான்.

அந்தப் பார்வையில் ஏதோ ஒருவித எதிர்பார்ப்பு தெரிய, ரியாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அவனாக ஏதும் பேசுவானோ என்று அவனும் ஏதும் பேசவில்லை.

அன்றிரவு உறக்கம் வராததால், சிடியில் மென்மையான பாடல்களைப் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தவள், அப்படியே தூங்கி விட்டாள்.

வெகு நேரம் கணக்குகளை சரி பார்த்து விட்டு வந்து படுத்த ரிஷி, அவளைக் காணாமல் கீழே தேடி வந்தபோது ஹோம் தியேட்டர் அறையிலிருந்து மெல்லிய பாடல் ஒலி கசிந்து வருவதை அறிந்து, அங்கு சென்றான்.

அவள் நாற்காலியில் சாய்ந்து உறங்கிய கோலம், ஏனோ அவனை தடுமாற வைக்க, மெதுவாக உள்ளே வந்து சிடி ப்ளேயரை நிறுத்தியவன், அவளை மெல்ல உசுப்பி எழுப்பினான்.

யாரோ, ரிஷியுடனான தன் கனவைக் கலைப்பதை உணர்ந்து, எழ மனமின்றி விழித்த ரியா, அருகில் அவன் முகத்தைக் கண்டதும் ஒரு கணம் மருண்டு விழித்தவள், பதைப்புடன் தன்னைச் சுருக்கி நாற்காலியுடன் ஒண்டிக் கொண்ட விதம், ரிஷியின் மனதை உடைத்துப் போட்டது.

எல்லோரையும் பிரியத்துடன் ஏற்றுக் கொள்பவள். தன்னை ஒரு நண்பனாகக் கூட ஏற்றுக் கொள்ள முன் வராதது. அவன் முகத்தில் அறைவதைப் போல் இருந்தது.

அவன் விழிகள் கோபத்தில் தீக்கங்குகளாய் பளபளத்தன.

வேகமாக எழுந்து மணி பார்த்தவள், ''சாரி...'' என்றபடி தூக்கக் கலக்கத்துடன் மாடிக்குச் சென்று படுத்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் எழுந்து, ஊருக்கு எடுத்துச் செல்ல வேண்டியவற்றை தனியே எடுத்து வைத்துவிட்டுக் கீழே இறங்கி வந்தவள், சிவகாமியிடமும் சோம சுந்தரத்துடனும் பேசிக் கொண்டிருந்தாள். ஆனாலும், மனதில் முந்தைய இரவின் கோபப் பார்வையே மையம் கொண்டிருந்தது.

ஏனோ, டிபன் சாப்பிட்டுவிட்டுச் சென்றவன் தான்... ரிஷி மாடியிலேயே இருந்தான்.

கீழே வரவேயில்லை. ''என்னம்மா... என் பையன் உன் பிரிவைத் தாங்க முடியாம தவிச்சிட்டிருக்கானா... ஆளையே காணோம்?'' கிண்டலாகக் கேட்டார் சோமசுந்தரம்.

''இல்லை மாமா... அப்படியெல்லாம் எதுவும் தெரியலை.'' மெல்லிய குரலில் அவள் பதிலளித்தபோது, அவர் முகம் சுருங்கியது.

''நீ எல்லாரையும் சரியா கணிச்சிடறே... அவனுக்கு தான் உன்னைப் பத்தி புரிஞ்சிக்கத் தெரியலை'' என்றார் வருத்தத்துடன்.

அதிகாலையில் கிளம்பிய ராமனாதனும் சகுந்தலாவும் பதினோரு மணிக்கெல்லாம் வந்து விட்டனர்.

காரிலிருந்து அவர்கள் இறங்கியதுமே, ஓடிச் சென்று அம்மாவை அணைத்துக் கொண்டாள் ரியா.

கார் சப்தம் கேட்டு கீழே வந்த ரிஷி, மாமனாரையும் மாமியாரையும் புன்னகையுடன் வரவேற்றான்.



ஆடிச் சீராக தாங்கள் கொண்டு வந்திருந்த பலகாரங் களையும் சீரையும் சம்பந்தியிடம் கொடுத்தார் சகுந்தலா.

''ஏம்மா! சாஸ்திரம்னா கொஞ்சமா செஞ்சு கொண்டு வந்தா போதாதா? இவ்வளவும் சாப்பிட இங்கே யார் இருக்காங்க... இவ்வளவு செய்யணுமா... என்ன?''

இரு ஸ்டீல் ட்ரம்மில் அடுக்கப்பட்டிருந்த பலகாரங்களைப் பார்த்துவிட்டு ஆதங்கத்துடன் கேட்டார் சிவகாமி.

''முறைன்னு இருக்கேம்மா! எங்க நாத்தனார் தான் எப்படி செய்யறதுன்னு சொன்னாங்க... அதன்படி எடுத்து வந்தோம்... வேற ஏதும் வாங்கணும்னா சொல்லுங்க'' என்றார் சகுந்தலா.

''வேறு ஒண்ணும் வேணாம்... எங்க ப்ரியாவை சீக்கிரம் அனுப்புங்க அது போதும்'' சோமசுந்தரம் இடையிட்டுக் கூறினார்.

பிறகு அனைவரும் சாப்பிட்டு விட்டு அறைக்கு வந்து ஓய்வெடுத்தபோது, சகுந்தலாவின் மடியில் சலுகையுடன் சாய்ந்தபடி பேசிக் கொண்டிருந்தாள் ரியா.

''எனக்கு மாமாவையும் அத்தையையும் விட்டுட்டு வரப் போறதை நினைச்சா ரொம்பக் கஷ்டமா இருக்கும்மா... நான் அவங்களை ரொம்ப மிஸ் பண்ணுவேன் தெரியுமா? மாமாவுக்கு என் மேல ரொம்ப ஆசை. அப்பா எப்படி என் மேல ப்ரியமா இருப்பாங்களோ.. அதே மாதிரிதான் மாமாவும்! அத்தையும் நீங்க என்னை எப்படிப் பாத்துப் பீங்களோ அது போலவே பாத்துக்கறாங்க... நான் ரொம்ப லக்கி தெரியுமா?'' உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினாள்.

அந்த நிமிடம் அந்த அறையைக் கடந்து சென்ற ரிஷிக்கு. ரியா தன் தாயின் மடியில் உரிமையுடன் சாய்ந்திருந்த

காட்சியும், அவளுடைய வார்த்தைகளும் மனதினுள் பெரும் பிரளயத்தை ஏற்படுத்தின.

அவள் தனக்கு முக்கியத்துவம் அளிக்காமல், தன்னை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் தன்னிடம் மட்டுமே முரண் படுவதும் அவனுடைய ஈகோவுக்கு விழுந்த அடியாய்...!

மனதிற்குள், பொறாமை எனும் தீ, கனன்று எரிய ஆரம்பித்து.

தன்னிடம் சாதாரணமாகக் கூட பேச மறுக்கின்றவள். மற்ற அனைவரிடமும் இயல்பாக ஒட்டிக் கொள்வதும், பிரியம் காட்டுவதும், உயிராய் பழகுவதும் அவன் கோபத்தை மேலும் கிளறியது.

அந்த நேரம் சகுந்தலா ரியாவைக் கிளப்பி அனுப்பினார். "ரியா.. போய் மாப்பிள்ளையை கவனிம்மா! ஒரு மாசம் எங்களோட தானே இருக்கப் போறே... இன்னும் ஒரு மணி நேரத்துல நாம கிளம்பணுமே" என்றார்.

பிரிவெனும் பெருந்துயரம், அந்த நொடி அவள் மனதில் ஆழமாகப் பதியன் போட முகம் மாறிவிட்ட ரியா உடனே எழுந்து சென்றாள்.

தன் மனக் கோபத்தை அடக்க முடியாமல் ஜன்னலருகே நின்றபடி சிவந்த விழிகளுடன் ரிஷி சீற்றத்துடன் வெறித்துக் கொண்டிருந்தபோதுதான், ரியா உள்ளே நுழைந்தாள்.

உலர்ந்த புன்னகையுடன் அவனருகில் சென்று "நான் ஊருக்குக் கிளம்புறேங்க... ஆடி மாதத்துக்கு அழைச்சிட்டுப் போறது சம்பிரதாயமாம்! நான் சீக்கிரமே வந்திடறேன்..." மெதுவாகக் கூறினாள்.



முரட்டுத்தனமான கோபத்துடன் இருந்தவன் வேகமாகத் திரும்பினான். "வேண்டாம்... ஏன்... எதுக்கு வரே? அங் கேயே இரு... இங்கே வந்து என்னை மிருகமாக்கறதுக்கா? நீ வரவேணாம்... நீ இல்லாம என்னாலயும் வாழ முடியும்... நான் சந்தோஷமா இருப்பேன்..." புலியாய் உறுமினான்.

வார்த்தைகள் தீயாய் எரிய, சொல் அம்புகள் அவள் இதயம் தைத்தன.

ஒரு கணம் ஒன்றுமே புரியாமல் நின்றிருந்தவளின் மனம் இரண்டாகப் பிளப்பது போல் வலிக்க ஆரம்பிக்க, விம்மலுடன் ஓடிச் சென்று தன் கட்டிலில் விழுந்தாள்.

## 14



தன் உயிரே தன்னை விட்டு நீங்கிச் சென்றது போல் ஒரு வலி எழ, தாங்க முடியாமல் அழ ஆரம்பித்தவளின் கண்ணீர் அடங்க வெகு நேரம் பிடித்தது.

திடீரென்று அறைக்கதவு தட்டப்பட்டதும் நிமிர்ந்து பார்த்தால், கதவைத் திறந்து கொண்டு சகுந்தலா வந்து கொண்டிருந்தார்.

மகளின் அழுத முகம் வேறு எதையோ உணர்த்த, அதைக் கணவரைப் பிரிந்து வரும் அழுகை என்று எண்ணியவள், சிறிது நேரத்தில் கிளம்ப வேண்டும் என்று நினைவு படுத் தினார்.

பிறகு முகம் கழுவி உடை மாற்றி ரியா தயாராக வர, டிரைவர் பெட்டிகளை எடுத்துக் கொண்டு கீழே செல்லப் பின்

தொடர்ந்து வந்த போது, ரிஷி ராமனாதனுடன் பேசிக் கொண்டிருந்தான்.

பெரியவர்களின் காலில் விழுந்து நமஸ்கரித்து விட்டு, எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு அவள் வெளியே வந்தபோது, சிவகாமியின் விழிகள் கலங்கியிருந்தன.

ரிஷி வெளியே நின்றிருக்க, மெதுவாக அவனருகில் சென்றவள், ''நான் கிளம்பறேன்...'' மெல்லிய குரலில் கூற உடனே, ''ம்...'' என்று தலையாட்டினான் அவன்.

அனைவருக்கும் கையசைத்து விடை பெற்று, மனதில் பெரும் சுமையுடன் பின்புறம் சாய்ந்து கண்களை மூடிய வளின் நெஞ்சம் முழுவதும் காற்றடைத்த பந்தாய் ரிஷியின் நினைவுகள்!

அவன் பேச்சு, பாறையாய் இறுகியிருந்த மனதை உளியால் உடைத்தது.

குத்தீட்டிகள் ஒன்றாகச் சேர்ந்து இறங்குவதைப் போல் காயப்படுத்தியது.

வீட்டிற்குச் சென்றதும், தென்காசிக்குப் போன் செய்து, தாங்கள் வந்து விட்டதைத் தெரிவித்தாள் ரியா.

சோமசுந்தரம் போனை ரிஷியிடம் கொடுக்க, ''நாங்க திருச்சி வந்து சேர்ந்துட்டோம்... அதை சொல்லத்தான் போன் பண்ணினேன். அத்தை கிட்ட சொல்லிடுங்க'' என்று கூறிவிட்டு, உடனே ரிசீவரை வைத்து விட்டாள்.

அங்கு, ரிஷியோ, கோபத்துக்கும், வேதனைக்கும் இடையே போராடிக் கொண்டிருந்தான்.

கிளம்பும்போது கண்ட அவளுடைய சிவந்த முகமும் பார்வையும் அவனை வெகுவாய் பலவீனப்படுத்தியிருந்தன.



அவள் குரலிலிருந்த சோகம், அவனிடம் ஆழமான பாதிப்பை உண்டு பண்ணியிருந்தது.

ரியா ஊருக்குச் சென்றதிலிருந்து, அவனால் நிம்மதியாக இருக்கவே முடியவில்லை.

தொலைதூரத்தில் இருந்தாலும், தொலையாத சுவடுகளை அவனுள் ஆழப் பதித்திருந்தாள் அவள்.

திருச்சியில், ரியாவும் அதே நிலையிலிருந்தாள்.

ஸ்வேதாவும் சங்கரியும் துணையிருந்தாலும், பல நேரங்களில் நினைவுகள் அவனிடமே செல்ல அதை மீட்டு வர வேண்டியிருந்தது. ஏனோ பழைய உற்சாகம் வர மறுத்தது.

ஸ்வேதா ஒரு நாள் அவளிடம் நேராகவே கேட்டு விட்டாள்.

''என்னக்கா... வந்ததிலேருந்து ரொம்ப டல்லா இருக்கே? மாமா நினைப்பு வந்திடுச்சா? பாவம்... அங்க மாமா எப்படி இருக்காரோ! எங்களை எல்லாம் மறந்துட்டே இல்லை நீ...'' செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

தினமும் தென்காசியிலிருந்து சோமசுந்தரம் பேசும் போது, ரிஷியும் பொதுவாக ஏதாவது பேசுவான்.

வீட்டிலுள்ளவர்களை விசாரித்து விட்டு வைத்து விடுவான். சில நாட்கள் அந்தப் பேச்சும் இருக்காது.

நாட்கள் மெதுவாக நகர, தினமும் ராமனாதன் அவளை வெளியே அழைத்துச் சென்று விடுவார்.

பெரிதும் ஓய்ந்து போயிருந்தவளின் மனது படிப்படியாகத் தேறி இந்தப் பதினைந்து நாட்களில் கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்கு வந்தது.

ஆனால், ரிஷியின் நினைவும் புறக்கணிப்பும் மனதைக் கசக்கிப் பிழிந்தன.

மழையில் சிலிர்த்து நடக்கும் அதிகாலை நினைவுகளிலும் அவன் பிம்பம்... மஞ்சள் கலைத்து உறங்குகின்ற நள்ளிரவுக் கனவுகளிலும், அவன் நினைவுகளே!

தென்காசியில், ரிஷியும், அவள் பிரிவால் தன் வசமிழந்திருந்தான்.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த சோமசுந்தரம் அன்றிரவு அவனைத் தனியே அழைத்தார்.

வெகு நேரத் தீவிர யோசனைக்குப் பிறகு ''ரிஷி... நீயும் ப்ரியாவும் எப்படி வாழ்ந்துட்டிருக்கீங்கன்னு நான் கவனிச்சுட்டு தான் வரேன்... வர்ஷாவோட அத்தியாயம் உன் வாழ்க்கையில முடிஞ்சி போச்சு... இனிமே உனக்குத் துணை ப்ரியாதாங்கிறதை நீ எப்ப உணரப் போறே?'' அழுத்தமான குரலில் கேட்டார்.

''அப்பா... என்னால வர்ஷாவோட துரோகத்தை மறக்க முடியலை.. ரணமா, இன்னும் என் மனசை அது அரிச்சிட்டிருக்கு... அந்த மனசுல மனசார ரியாவை... ஏத்துக்கணும்னு தான் நினைக்கிறேன்... ஒவ்வொரு தடவையும் ஏதோ ஒண்ணு என்னைத் தடுத்திடுது...'' தவிப்புடன் எங்கோ பார்த்தபடி கூறினான்.

''ம்... உன்கிட்ட இப்ப ஒரு உண்மைய சொல்லப் போறேன். நானும் அம்மாவும் கடைசி வரைக்கும் இது உனக்கு தெரியாமலே போகட்டும்னு நினைச்சோம். ஆனா இப்ப சொல்ற மாதிரி ஒரு சந்தர்ப்பமும் அதுக்கான அவசியமும் வந்துடுச்சி...'' ஒரு பெருமூச்சுடன் கூற ஆரம்பித்தார்.



''நீ இப்ப சொன்னியே... ஒரு பெண்ணோட துரோகத்தால மொத்தமா பெண்ணினத்தையே வெறுக்கறேன்னு... இதே மாதிரி உன் அம்மா நினைச்சிருந்தா, நீ பிறந்து ஆண் குழந்தைன்னு தெரிஞ்சவுடனே உங்கம்மா உன்னைக் கொன்னுருக்கணும்... ஏன்னா, உங்கப்பா அவங்களுக்குப் பண்ணின துரோகம் அப்படி!''

மனதில் வெகு நாட்களாய் மறைத்து வைத்து புழுங்கிக் கொண்டிருந்த ஒரு விஷயத்தைப் போட்டு உடைத்து விட்டார் அவர்.

''அப்பா... நீங்க அம்மாவுக்கு...!'' புரியாத குரலில் கேட்டவனிடம், ''உன்னைப் பெத்த அம்மா அப்பா... நாங்க இல்லை ரிஷி!'' தர்ம சங்கடத்துடன் கூறினார்.

அவருடைய வார்த்தைகள் அவனை சுனாமியாய் சுழற்றிப் போட்டன.

தன்னுடைய அம்மா, அப்பா அவர்கள் இல்லை என்ற செய்தி மனதில் இடியாய் இறங்கியது.

''அப்போ... நான்...'' விழிகள் அலைப்புறுதலுடன் தவிக்கக் கேட்டான்.

''ரிஷி... நான் என்னோடப் படிச்ச சியாமளாவை மனதார விரும்பினேன். ஆனா, அவ என்னை விரும்பலை. எங்க காலேஜில ஒரு ரௌடி மாதிரி முரட்டுத் தனமா சுத்திட்டிருந்த வேணுவைத் தான் அவ விரும்பினா. நானும் விட்டுக் கொடுத்துட்டேன். படிப்பு முடிஞ்சவுடனே என் மாமா பொண்ணு சிவகாமிக்கும் எனக்கும் கல்யாணம் நடந்தது...

''அப்ப நான் டெல்லியில வேலையில இருந்தேன். எங்களுக்குக் குழந்தை இல்லை... அப்பதான் எதேச்சையா

சியாமளாவை அங்கே சந்திச்சேன். வயித்துல ரெண்டு மாச கர்ப்பத்தோட அவளை அனாதையா விட்டுட்டு, வேணு ஓடிப் போயிட்டதா சொன்னா...

''அவளை எங்க வீட்டிலேயே அங்கே தங்க வச்சிருந்தோம்... சிவகாமிக்கு நான் அவளை விரும்பினது தெரியும்.

''ஒரு நாள் வேலை தேடிப் போன இடத்துல சியாமளா வேற ஒரு பெண்ணோட வேணுவைப் பார்த்திருக்கா... அவளை அப்பதான் கல்யாணம் செஞ்சு அவன் அழைச்சிட்டு வந்திருக்கற விஷயம் தெரிஞ்சிருக்கு...

''கோபத்துல அவன்கிட்ட நியாயம் கேட்கப் போனப்பு, அவன் இவளைப் பிடிச்சுத் தள்ள சியாமளா பக்கத்துல இருந்த பெரிய கட்டையால அவன் மண்டையில அடிக்க, அந்த நிமிஷமே வேணு செத்துட்டான்...

''போலீஸ் உடனே உங்கம்மாவைக் கைது பண்ணிட்டாங்க... அது ஆபீஸ்ங்கிறதால நிறைய சாட்சி இருந்தது! நீ ஜெயில் ஆஸ்பத்திரியிலதான் பிறந்தே. உடனே என்னைக் கூப்பிட்டனுப்பிய சியாமளா உன்னை என்கிட்ட கொடுத்து வளர்க்கச் சொன்னா.

''நாங்க ரெண்டு பேரும் முதல் வருஷம்தான் ரிஷி வந்தியம் போய் குழந்தை வேணும்னு பிரார்த்திச்சிட்டு வந்திருந்தோமோ... அதனால உங்கம்மா சிவகாமி உனக்கு 'ரிஷிவந்த்'னு' பேர் வச்சு... எங்க குழந்தையாவே உன்னை வளர்த்தோம்... இப்பவும் நீதான் எங்களுக்கு மூத்த பிள்ளை! அப்புறம்தான் அஞ்சு வருஷம் கழிச்சு வித்யா பிறந்தா!

''அதுக்கப்புறம் ஜெயில்லயே டிபி வந்து உங்கம்மா சியாமளா இறந்திட்டா... என்னிக்குமே நீ எங்க பிள்ளைதான்



ரிஷி! இப்ப மட்டும் இதை ஏன் சொன்னேன்னா, நீ மனசு மாறணும்னுதான்! ஒரு பொண்ணு தப்பு செஞ்சா எல்லோரும் அப்படித்தாங்கிற உன் எண்ணத்தை நீ மாத்திக்கணும் கறதுக்காகத்தான்!

''வேணு, அவளுக்கு செஞ்ச கொடுமைகளுக்கு நீ ஆண் குழந்தைன்னு தெரிஞ்சவுடனே இவன் எந்தப் பொண்ணோட வாழ்க்கையை அழிக்கப் பிறந்திருக்கானோன்னு சியாமளா உன்னை உடனே அழிச்சிருக்கணும்... ஆனா செய்யலை...! ஏன் தெரியுமா? ஒரு ஆண் தப்பு பண்ணினா அதுக்கு எல்லா ஆண்களையும் பொறுப்பாளியாக்க உங்கம்மா விரும்பலை...''

''அந்த நேரத்துல என்னை ஒரு நல்ல நண்பனா நினைச்சு உன்னை என் கையிலக் குடுத்தா... அவ பையன் நீ! ஒரு பொண்ணு உன்னை ஏமாத்திட்டான்னு எல்லாப் பெண்களையும் வெறுக்கறியே... இது என்ன நியாயம்? அதனாலதான் இந்த உண்மையைச் சொல்ல வேண்டியதாப் போச்சு!

''அந்த நல்ல பொண்ணைப் புரிஞ்சிக்க ரிஷி... இந்த விஷயம் நமக்குள்ளே இருக்கட்டும். சிவகாமிக்கு நான் உன்கிட்ட இந்த உண்மையைச் சொல்லிட்டேன்னு மட்டும் தெரியவே கூடாது... செத்துடுவா! எந்தக் காலத்திலயும் உன்னை அவளால விட்டுக் கொடுக்க முடியாது.

''தன்னோட கணவரோட முன்னாள் காதலியின் மகன்றதுக்காகவே சிவகாமி உன்னை வளர்க்க மறுத்திருக்கலாம். என்னை ஒரு பொண்ணு நிராகரிச்சிட்டாங்கிறதுக்காக நான் கூட பெண்களை வெறுத்திருக்கலாம்.

''திருமண நாளன்னிக்கே, தன்னோட முதல் காதலைப் பத்தி சொல்லி அவளை மனைவியா ஏற்க மறுத்த உன்னை, ப்ரியா கூட பிரிஞ்சி போயிருந்திருக்கலாம். ஆனா நாங்க யாருமே இதைச் செய்யலை... ஏன் தெரியுமா? உன் மேல நாங்க வெச்சிருக்கிற அன்பும், பாசமும் தான் காரணம்!

''உன்னைச் சுத்தி ஒரு கூட்டைக் கட்டிக்கிட்டு, அதுக் குள்ளே இருந்தபடி எல்லார் மனசையும் நோகடிக்கிறியே, முதல்லே அதை உடைச்சிட்டு வெளியே வா! என்னைக் குமே நாங்கதான் உனக்கு அப்பா அம்மா! உன்னோட ரிஷி மூலம் ரியாவுக்குக் கட்டாயம் தெரியக் கூடாது.

''நம்ம மூணு பேருக்குள்ளே அது மடிஞ்சி போயிடணும்... எனக்கு சத்தியம் பண்ணு!'' என்றதுமே அவன் மனதிற்குள் பெரும் போராட்டம் நடக்க ஆரம்பித்தது.

அந்த நிமிடம், சிவகாமியின் மடியில் சாய்ந்து, ''அம்மா! நான் தானே உங்க மூத்த பிள்ளை..? அப்பா சும்மா பொய் தானே சொல்றாரு?'' என்று கேட்டுவிட்டு, 'ஓ'வென்று கதறி அழ வேண்டும் போல், ஒரு உணர்வு!

சுருங்கி இறுகிய முகத்துடன் ஒடுங்கிப் போயிருந்த வனைக் கண்டதும், ''நாங்க உனக்கு எந்தக் காலத்துலயும் தூண்களாகத் துணையிருப்போம் ரிஷி... அதை மறந் துடாதே'' அவனை ஆதரவாக அணைத்தபடி கூறியவரிடம், அவன் தங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமே என்ற பரிதவிப்பு!

யாரோ தன் ஆணி வேரையே பிடுங்கி உயிரோடு சாய்த்த கொடுமையாய், நீ எங்கள் மகனில்லை என்று தந்தையே கூறிய அதிர்ச்சியில் உறைந்து நின்றிருந்த ரிஷியின் மனதிற்குள் பெரும் மாற்றம்!



தன்னுடைய கதையைக் கேட்டவனால், அதை நம்பவும் முடியவில்லை... நம்பாதிருக்கவும் வகையின்றி சோம சுந்தரம் விளக்கி இருக்க, விசாலத்துடைய தாய்மையின் விசுவரூபம் மெய்சிலிர்க்கச் செய்தது.

திடீரென்று அவர் குரல் அவனைக் கலைத்தது, ''இப்பவும் சொல்றேன். நீதான் எங்களுக்கு மூத்த பிள்ளை... அப்புறம்தான் வித்யா! வாழ்க்கையைப் புரிஞ்சி நடந்துக்க ரிஷி, நீயும், பிரியாவும் சந்தோஷமா இருக்கறதை நாங்க பார்க்கணும்! ப்ரியா உன்னை உயிரா விரும்பறா! ஆனா உன்கிட்ட இருந்து பிச்சையா காதலை யாசிக்க மாட்டேன்னு அவ, மறுத்திட்டா... புரிஞ்சிக்கப்பா!'' தவிப்புடன் முடித்தார் அவர்.

சட்டென்று, அவன் மனதில் தனக்கென்று இவ்வுலகில் யாருமில்லையோ என்ற வெறுமை பூதாகரமாக எழுந்தது.

அன்று, வெகு நேரம் உறக்கமின்றி யோசித்துக் கொண் டிருந்த ரிஷிக்கு, முதன் முதலில் ப்ரியம்வதாவைப் பார்த்த அந்த நிமிடமே தன் மனதில் காதல் சிம்மாசனமிட்டு அவள் அமர்ந்தது இன்று புரிந்தது.

தன் தாயைப் பற்றி நினைத்தபோது மனம் கசிந்துவிட தன்னை உயிராய் வளர்த்த தாயையும் தந்தையையும் நினைத்தாலோ, நன்றியிலும் நெகிழ்ச்சியிலும் நெஞ்சம் நிறைந்து போனது!

சோமசுந்தரமும், சிவகாமியும் தெய்வங்களாகவே தோன்றினர்.

அதிர்ச்சியும், குழப்பமும், பரிதவிப்பும் தானென்ற ஈகோவைப் பொசுக்கி இருந்தன.

அந்த நிமிடம், மனதில் ரியாவைத் தான் காதலுடன் சுமக்கும் நினைவுகள் ஆழமாய்.

அன்றிரவு, தன் ரிஷி மூலம் தெரிந்த அதிர்ச்சியிலும், ரியாவைப் பற்றிய நினைவுகளாலும், அவன் உறங்கவே யில்லை.

## 15



**ம**றுநாள் ஆடி பதினெட்டு! அன்று அதிகாலையிலேயே எழுந்து மஞ்சள், குங்குமம், பூககள், காப்பரிசி எல்லா வற்றையும் எடுத்துக் கொண்டு சென்று காவிரியாற்றில் வைத்து கும்பிட்டனர் ராமனாதன் குடும்பத்தினர்.

பொங்கும் நுரையுடன், கரை புரண்டு செல்லும் காவிரியைப் போலவே ரியாவின் மனமும் பிரளயமாய் பொங்கிக் கொண்டிருந்தது.

அங்கு, பல புதுமணத் தம்பதிகள் தாலி பிரித்துக் கோர்த்துக் கொண்டிருக்க, அந்த சூழ்நிலை ரிஷியை நினைவிற்கு தர, தனக்குள் மோதிய எண்ணங்களுடன் சகுந்தலா அணிவித்த மஞ்சள் கயிறை அணிந்து கொண்டாள் அவள்.

சுழித்து ஓடுகின்ற காவிரியைப் பார்த்தபோது, நதிகள் மட்டும் எப்போதுமே உறங்குவதில்லை என்று தோன்றியது.

இயற்கையின் படைப்புகள் அனைத்துமே ஏதோ ஒரு நேரத்தில் ஓய்வெடுப்பதும் புரிந்தது.



அவளுடைய நினைவுகள், ரிஷியைத் தேடி ஓடுவதைப் போல், காவிரி அன்னையும் கடலைத் தேடி ஓடிக் கொண் டிருந்தாள்.

ஒரு பெருமூச்சுடன் நின்றிருந்தவளுக்கு, நேற்றிரவு போன் செய்தபோது ரிஷி அவளிடம் எதுவுமே பேசாதது மனதை உறுத்தியது. அனிச்ச மலராய் மனம் வாடியிருந்தது.

காவிரியாற்றிலிருந்து அவர்கள் வீடு வந்து சேர்ந்த போது அவர்களுடைய கார் வாசலில் நின்றிருந்தது.

நேற்றிரவு பேசிய போது கூட யாரும் வருவதாகக் கூறவில்லையே என்ற நினைப்பில், ராமனாதனும் அவளும் பரபரத்துப் போயினர்.

டாக்ஸி வந்து நின்ற சப்தம் கேட்டு பக்கத்து வீட்டி லிருந்த பத்மநாபன் வெளியே வர, பின்னாலேயே ரிஷியும் வந்தான்.

தான் காண்பது கனவா என்று நினைக்கும் போதே, ரியாவின் வயிற்றுக்குள் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள் ஒன்றாக சிறகடித்தன.

தன் மனம் ஏன் இப்படி அலை பாய்கிறதென்று அவளுக்குப் புரியவில்லை.

அந்த நிமிடம் அவனும் அவளையே பார்த்துக் கொண் டிருக்க, அவன் பார்வையில் பெரும் மாற்றம்! கண்கள் ஏதோ செய்தி சொல்லத் துடித்தன.

வேகமாக முன்னே சென்று வரவேற்ற ராமனாதன், "வாங்க மாப்பிள்ளை! நேத்தே சொல்லி இருந்தீங்கன்னா நாங்க வீட்டிலேயே இருந்திருப்போமே!" என்று தவித்தார்.

முதன் முறையாக, மனதைப் பிரதிபலித்த புன்னகையில் ரிஷியின் முகம் மலர்ந்தது.

''பரவாயில்லை மாமா! திடீர்னு தோணிச்சு! அதான் கிளம்பி வந்தேன். காலையில ரியாவை அழைச்சிட்டு கிளம்பணும்'' என்று கூறியவன், கண்ணோரங்களில் செல்லச் சிணுங்கலுடன் ரியாவைப் பார்த்து குறும்பாகச் சிரிக்க, அவள் இதயமே ஒரு கணம் குலுங்கியது.

ரியா, வெட்கமும் யோசனையும், தவிப்புமாய் தலை குனிந்து கொள்ள, அவர்களின் பார்வைப் பரிமாற்றத்தை உணர்ந்த சகுந்தலா, ''உள்ளே வாங்க மாப்பிள்ளை... நீங்களேவா காரை ஓட்டிட்டு வந்தீங்க?'' என்றபடி கதவைத் திறந்தார்.

ஸ்வேதா குறும்புடன் சிரித்துவிட்டு உள்ளே செல்ல ரிஷியை ஓய்வெடுக்கும்படிக் கூறிவிட்டு, கடைக்குக் கிளம்பினார் ராமனாதன்.

ஸ்வேதா கொடுத்த ஆரஞ்சு ஜூஸை குடித்த பிறகு அவனைத் தன் அறைக்கு அழைத்துச் சென்ற ரியாவிற்கு, பதட்டத்தில் இதயம் விட்டு விட்டுத் துடித்தது.

உள்ளே சென்றவுடன் கதவைத் தாளிட்ட ரிஷி அவள் புறம் திரும்ப, அவன் கண்களில் கட்டுக்கடங்காத காதல் தெரிய, கூடவே அவள் தன்னை புரிந்து கொண்டு தன் கைச்சிறைக்குள் வந்து சரணடைவாளா என்ற பயமும் தவிப்பும் தெரிந்தன.

அவள் அசையா ஓவியமாய் நின்றிருக்க, மெதுவாக அவளருகில் சென்றவன், ''ஏன் ரியா... நிறைய கேள்வி



இருக்கில்லே உன்கிட்ட... நீ கேக்கறதுக்கு முன்னாடியே சொல்லிடறேன்.

''நான் உன்னை நேசிக்கறேன் ரியா... ஒரு பெண்ணை இந்த அளவுக்கு விரும்ப முடியுமான்னு என்னையே கேள்வி கேக்கற அளவுக்கு உன்னை விரும்பறேன்... விரும்பறேன்.''

சட்டென்று அவள் விழிகளில் வண்ண மின்னல்கள் தெரிய, அவள் உலகமே அழகானதைப் போல் ஒரு உணர்வு!

''உன்னைப் பெண் பார்க்க வந்தப்பவே என் இதயத்துக்குள்ளே நீ பதிஞ்சதினாலதான் நான் சரின்னே சொல்லி இருந்திருக்கேன். ஆனா, அப்ப அதை ஒத்துக்க என் மனசு தயாரா இல்லை.

''பெண்கள் மேல நம்பிக்கையில்லாம இருந்த நான், உன்னை இழக்க விருப்பமில்லாமத்தான் நம்ம கல்யாணத்துக்கு உடனே சம்மதிச்சேன்... அப்புறமும், என் மனசோட ரொம்பப் போராடித்தான் வர்ஷாவைப் பத்தி எல்லாம் சொன்னேன்.

''ஆனா, நீ எல்லார்கிட்டயும் அன்பா இருந்து என்கிட்ட மட்டும் ஒதுங்கிப் போனப்ப, என் மனசு ரெண்டாப் பிளந்து என்னதான் கட்டுப்படுத்திக் கிட்டாலும், நீ பழகுற விதமும், உன் குணமும், என் காதலை இன்னும் அதிகமாக்கிடுச்சு.

''பண்ணைய சுத்திப் பாத்தமே அன்னிக்கு முதன் முறையா உன் கையைப் பிடிச்சப்ப, ஒரு தென்றல் தீண்டிப் போன உணர்வு! ஆனா பூஜை நடந்த அன்னிக்கு என்னைப் பாக்க விரும்பாம கண்களை இறுக மூடி என்னைப் புறக் கணிச்சே பாரு... அன்னிக்கு நான் ரொம்பக் காயப்பட்டுப் போனேன்...

''உன்னோட இயல்பா பழகி உன் அன்பை வெல்லணும்னு நான் நினைக்க ஆரம்பிச்ச நேரத்துலதான், நீ விரும்பாதது என்னை மிருகமாக்கி நான் வெறுத்தேன்...''

''எல்லாத்துக்கும் மேல என் கூட ஊருக்கு திரும்பி வர விருப்பமில்லாம நீ அழுத அழுகை என்னை ரொம்பவே பாதிச்சது. கொடைக்கானல்லே நீ என்னைத் தவிர்த்தப்பவும் அப்படித்தான்...

''அது மாதிரி நீ மழையை ரசிச்ச அன்னிக்கும்... என்னை விட்டு நீ விலகிப் போனப்ப என் உயிரே என்கிட்ட இருந்து பிரிஞ்ச மாதிரி ஒரு உணர்வு!

''வர்ஷா வந்ததும் அவளுக்கும் உனக்கும் இடையில இருந்த மலையளவு வித்தியாசம் புரிஞ்சி. நான் மாறினேன்.

''உன்னோட தாய்மை உணர்வை, ஏற்கெனவே ஆகாஷை நீ கொஞ்சறப்போ நான் உணர்ந்திருக்கேன்.

''என் பார்வைகள். என்னோட மனசை உனக்கு ஏன் புரிய வைக்கலைன்னு தான் தெரியலை...

''ஆனா. நீ ஊருக்குக் கிளம்பற அன்னிக்கு உங்கம்மா மடியில சாய்ஞ்சு பேசின வார்த்தைகள் என்னை தீயா தகிக்கச் செஞ்சது.

''உன்னோட அன்பு முழுவதும் எனக்கு மட்டும் சொந்தமா இருக்கணும்னு நான் சுயநலமா நினைக்க ஆரம்பிச்ச நேரத்தில, அந்த வார்த்தைகள் என்னைப் பிரிஞ்சு போறதில உனக்கு எந்த உணர்வோ, கஷ்டமோ இல்லைன்றதை புரிய வச்சிது.

''அந்த நிமிஷம் நான் தவிச்ச தவிப்பு எனக்குத்தான் தெரியும். இந்த இருபது நாள்ல, ராத்திரியில நான் சரியா தூங்கினதேயில்லை...



''நேத்து நைட் அப்பா என்கிட்டே பேசினப்பபுறம் தான் பல விஷயங்கள் தெளிவாப் புரிஞ்சுது... எனக்கு கொஞ்சமும் குறையாம, நீயும் என்னை விரும்புறதை அப்பாதான் சொன்னார். நீ என்னை இந்த அளவுக்கு விரும்புவேன்னு நான் எதிர்பார்க்கலை...''

''விடிய விடியத் தூங்காம யோசிச்சு, விடிகாலையில அப்பாகிட்ட சொல்லிட்டு உடனே கிளம்பிட்டேன்.

''இப்பப் புரியுது... வர்ஷா மேல எனக்கிருந்தது காதலே இல்லை... இப்ப நான் உணர்றது தான் உண்மையான நேசம்னு... இனிமேயும் என்னைத் தவிக்க விடாம என் கூட வருவியா ரியா...?''

அவள் முகத்தை கைகளில் ஏந்தி ரிஷி கேட்டபோது, அவள் விழிகளில் வெட்கம் அணை உடைத்த வெள்ளமாய்...!

என் வானத்து மேகம் மழை தருமாவென்று காத்திருந் தவளுக்குப் பரிசாய், அவனுடைய அன்புத் தூறல்கள்!

இதயத்தில் துளிர் விட்டிருந்த காதல் பயிர் செழிக்க, ரிஷியின் வார்த்தைகள் சாரல்களாய் பன்னீர் தூவின.

மெதுவாக நிமிர்ந்தவள், அவன் விரல்களைப் பற்றி மென்மையாக முத்தமிட, காதல் போரில் இதயம் களவு போனது அன்று! உயிர் கரைந்து போனது இன்று!

மறு நிமிடமே, அவனுடைய உதடுகளின் பதிப்பாய் அவள் கன்னங்களிரண்டும் கன்றிச் சிவந்தன.

மெதுவாக அவள் காதருகில் குனிந்தவன், ''நாம நாளைக்கு காலையில எங்கே போறோம் தெரியுமா? கொடைக்கானலுக்குத்தான்!'' என்றான் ரிஷி சீண்டலான குறும்புக் குரலில்.

“ம்... இது ஆடி மாசம்...” தவிப்புடன் கூறியவளை பிரிய மனமின்றி இறுக அணைத்தவன், “ஊஹும்... அதெல்லாம் நமக்கு கிடையாது... அப்பா கிட்டே ஒரு வாரம் ஃபேக்டரிய பாத்துக்க சொல்லிட்டு வந்திருக்கேன்...” என்றாள் ரிஷி உல்லாசமாக!

இருவர் மனதிலும் பெரும் மழையாய் பொங்கிப் பெருகிய காதல் வசந்தத்தை அறிமுகப்படுத்த, ஆகாயம் மழைத்துளிகளை அட்சதையாக பூமியின் மேல் தூவி, வாழ்த்துப் பாட ஆரம்பித்தது.